# நினைக்கப்படுதல்

-ஓட்டமாவடி அறபாத்



# நனைந்தழுதல்

(சிறுகதைத்தொகுதி)

ஓட்டமாவடி அறபாத்

இஸ்லாமிக் புத்தக நிலையம்.
எம். பீ. ஸீ. எஸ். வீதி, மாவடிச்சேனை
வாழைச்சேனை,

# நினைந்தழுதல்

(சிறுகதைகள்)

ஓட்டமாவடி அறபாத் (ஸஹ்வி)©

First Edition : November 1998

Cover Layout : Rashmy

Published By : Islamic Book Centre
M.P.C.S Road, Mavadichenai Valaichenai.

Price : Rs. ~~80.00~~ 65.00

ISBN : 955-96317-3-X

Printing : M.H.Thahir Printers
B-2, Small Mosque, Shopping Complex,
20, Symonds Road, Maradana, Colombo-10

## மனித அவலமே கருத்தியலாக நிற்கும் ஒரு கதைத் தொகுதி.

"நினைந்தழுதல்" ஓட்டமாவடி அறபாத் அவர்களின் முதல் சிறுகதைத் தொகுப்பாகும். சிறுகதை, கவிதை, விமர்சனம், இஸ்லாமிய சமய சிந்தனை போன்ற பல்துறைகளில் வலுவாகக் கால் பதித்துள்ள அறபாத் தனது எரி நெருப்பிலிருந்து கவிதைத் தொகுப்புக்கு அடுத்ததாக இச்சிறுகதைத் தொகுப்பை வெளிக் கொணர்கிறார்.

"இன்று ஆக்க இலக்கியத்தின் மையம் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பை மையப்படுத்திய கிழக்கு மாகாணத்தை நோக்கி மாறிக் கொண்டிருக்கிறது" என்ற பரவலான கருத்துக்கு வலுவூட்டுவது போல் அண்மையில் அங்கிருந்து பல கவிதைத் தொகுப்புகள், சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. அவற்றில் ஒன்றாகவே அறபாத்தின் "நினைந்தழுதல்" தொகுப்பும் வெளிவருகிறது. 90களில் இறுதியில் வெளிவரும் இச்சிறுகதைத்தொகுப்பு நாம் ஏலவே குறிப்பிட்ட "ஆக்க இலக்கியத்தின் மையம் கிழக்கு நோக்கித்திரும்பிக் கொண்டிருக்கிறது என்பதற்கான இன்னொரு உறுதிப்படுத்தல் என்று கூறலாமா? காரணம் "மையப்படுத்தல்" என்பது தரமற்ற தொகை கூடிய ஆக்கங்களையிங்கு குறிப்பதைவிட, சிறிதளவானாலும் தரமுள்ள தொகையைக் குறிப்பதே சரியானதாக இருக்கலாம்.

இதுமுக்கியமானது

காரணம் இக்கூற்றின் மூலம் நாம் கடந்த 60ஆண்டு காலமாக நமது ஈழத்து சிறுகதை வளர்ச்சிப் போக்கில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்பட்டு வந்த முன்னேற்றகரமான மாற்றங்களையும் அம்மாற்றங்களின் குறிகாட்டிகளாய் அவ்வக்கால கட்டங்களில் எழுந்து நிற்கும் படைப்புகளையும் மேலோட்டமாகவேனும் பார்க்க நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். இவ்வொப்பீட்டுரீதியான பார்வையானது அறபாத்போன்ற இன்றைய இளம்படைப்பாளர்களது வெற்றி தோல்விகளையும் ஆக்கஇலக்கியக் குணாம்சங்களையும் பார்க்க வைக்க உதவுவதாய் அமையும்.

1930களில் முளைவிட்ட ஈழத்துச் சிறுகதைவளர்ச்சியானது தனது ஆரம்பகாலத்தை ஈழகேசரிப் பத்திரிகையோடு தொடர்பு படுத்தி ஈழகேசரிக்காலமாக நிற்கிறது. (1930-1943) இதன் பின்னர் கருத்தியல் ரீதியான பார்வையுடயோரால் மறுமலர்ச்சிக்காலம் பரிணமிக்கிறது. (1943-1950) இதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக மார்க்சீயப் பார்வையுடையோரால் அமைக்கப்பட்ட முற்போக்குகாலம் எழுச்சி கொள்கிறது. (1950-1965) இதன் பின்னர் முற்போக்கிலிருந்து பிரிந்த எஸ் பொ. இதற்கெதிராக நற்போக்கை முன்வைக்க இது எந்தவிதக் கருத்துமற்ற வெற்றுப் போக்காக இருந்த சமயத்தில் முற்போக்கினதும் நற்போக்கினதும் குறைகளையும் நிறைகளையும் எடுத்துக்காட்டி புதிய மூன்றாவது போக்கை (பார்வையை) மு.தளையசிங்கம் ஆரம்பித்து வைக்கிறார். (1965-1975) இக்காலத்தில் ஈழத்து எழுத்துலகில் பல பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. தேசிய இனப்பிரச்சினை தலைகாட்டத் தொடங்குகிறது. இதன் பின்னர் முதன்மை பெறும் காலம் தேசிய இனப்பிரச்சினை தலைதூக்கிய காலமாகும். (1975-85) இதற்கடுத்து வரும் 1985ல் இருந்து இன்று வரையுள்ள (90) காலம் போர்க்காலச் சூழலாக மாறுகிறது. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுதேடி தமிழ்பேசும் இளைஞர்கள் ஆயுதம் தூக்குகின்றனர். தமிழ்பிரதேசங்களில் சட்டம் ஒழுங்குசிதைய மனித அவலங்கள் விரிகிறது. இடப்பெயர்வும் அகதி வாழ்க்கையும் பொதுப்பண்பாகிறது.

மேலே குறிப்பிட்ட ஆறுகாலகட்டங்களிலும் எழுதப்பட்டகதைகளில் மூன்றுவிதமான தன்மைகளைக் காணலாம்.

1. முதலாவது, எழுதப்பட்ட தமது காலத்தைப் பிரதிபலிக்காத வெற்றுக் கற்பனையால் விலங்கிடப்பட்ட கதைகள்.

2. இரண்டாவது, தமது காலத்தை யதார்த்த பூர்வமாகவும் கலைத்துவச் செறிவோடும் பிரதிபலிக்கும் கதைகள்.

3. மூன்றாவது, இதுகாலவரை இருந்து வந்த கதை எடுத்துச் சொல்முறையில் தேவையின் நிமித்தம் மாற்றம் விளைவித்து கலைத்துவச் செறிவோடு காலத்தையும் மீறிநிற்கும் கதைகள்.

இம்மூன்று பிரிவுகளுள் முதலாவது வகைக்கதைகளே அதிகமாக எழுதப்பட்டவையாக உள்ளன. இரண்டாவது வகைக் கதைகள் ஓரளவு தேறக் கூடிய தொகையில் எழுதப்பட்டுள்ளன, மூன்றாவது வகையைச் சேர்ந்தவை மிக அருந்தலாகவே எழுதப்பட்டுள்ளன எனலாம்.

இத்தகைய மூன்றாவது இரண்டாவது வகைக்குரிய கதைகள் ஒருசிலவேனும் மேலே குறிப்பிட்ட ஒவ்வோர் காலகட்டத்திலும் வெளிவந்தே உள்ளன. அவைக்கு உதாரணமாக பின்வரும் சிறுகதைகளைக் காட்டலாம். இலங்கையர் கோனின் வெள்ளிப்பாதரசம் ஈழகேசரிக்காலத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இத்தகைய கதைகளில் ஒன்று. மறுமலர்ச்சிக்காலத்தைவையாக அ.செ.முவின் மாடுசிரித்தது இலங்கையர்கோனின் சக்கரவாகம், வ.அ.இராசரத்தினத்தின் தோணி நிற்கின்றன. முற்போக்குக் காலத்தவையாக டானியலின் கொடும்பாவி என்.கே.ரகுநாதனின் நிலவிலே பேசுவோம், டொமினிக் ஜீவாவின் "ஞானம்" எஸ்.பொவின் "பங்கம், தேர்" சாந்தினியின் நீறுபூத்த நெருப்பு, பொ.தம்பி ராசாவின் "பறை" நிற்கின்றன. மூன்றாவது போக்கின் காலத்துக்குரியவையாக மு.தளையசிங்கத்தின் புதுயுகம் பிறக்கிறது, தொகுதிக்கதைகள் போர்ப்பறையில் வரும் "புதுக்குரல்கள்" மெய்யுளில் வரும் "அண்டை வீடுகள்" கே.வீ.நடராசனின் யாழ்ப்பாணத்துச் சிறுகதைகள் நிற்கின்றன.

தேசிய இனப்பிரச்சினை காலத்துக் கதைகளாக சாந்தன் எழுதிய "கிருஷ்ணன்தூது" சட்டநாதன் கும்பிளான் ஐ.சன்முகன் நந்தினிசேவியர், செ.கதிர்காமநாதன் யேசுராசா மு.பொன்னம்பலம் எம்.எல்.எம்.மன்சூர் ஆகியோர் எழுதிய கதைகள் நிற்கின்றன. இறுதியாக இன்றைய காலகட்டமான போர்க்காலச் சூழல் கதைகளாக ரஞ்சகுமாரின் "காலம் உனக்கொரு பாட்டெழுதும்" "கோசலை" கோளறு பதிகம் உமா வரதராஜனின் "அரசனின் வருகை" நந்தினியின் பதுங்குகுழி, செங்கை ஆழியானின் இரவு நேரப்பயனிகள் மு.பொன்னம்பலத்தின் "பயம் கக்கும் விஷம்" யுகங்களை விழுங்கிய கணங்கள் வெட்டு, சண்முகம் சிவலிங்கத்தின் காலடி மட்டுநகர் முத்தழகுவின் தாகமாக இருக்கிறேன். கவியுவனின் "காற்றுக்கணக்கும் தீவு" உடைக்கப்பட்ட தெருவிளக்கு நிற்கின்றன. மேலும் அண்மையில் எஸ்.எல்.எம்.ஹனீபா எழுதிய "அவளுமொரு பாற்கடல்" என்ற இக்காலத்தில் வெளிவந்த எடுத்துச் சொல்முறையில் மாற்றம் தலைகாட்டும் கதையாகக் கொள்ளலாம்.

இவற்றின் பின்னணியில் வைத்தே 90களின் இறுதிப்பகுதியில் வெளிவரும் நினைந்தழுதல் தொகுப்பின் கதைகளை நாம்பார்க்க வேண்டும். அறபாத்தின் இக்கதைகள் எவ்வாறு உள்ளன? இக்கேள்விக்கு பதில்காண்பது அவசியம்.

இத்தொகுப்பின் முக்கிய அம்சம் யாதெனில் இதில் உள்ள கதைகள் அனைத்தும் பிரமை "உம்மா வரப்போறா" அவனும்

மனிதன்தான், ஆகிய சில கதைகளைத் தவிர, போர்க்காலச் சூழலைப் பிரதிபலிப்பவையாக உள்ளதே. இவ்வாறு ஏற்கனவே போர்க்காலச் சூழலை அதிக அளவு மையப்படுத்தி சிதம்பர திருச்செந்திநாதன் க.தணிகாசலம், செங்கை ஆழியான் (இரவு நேரப் பயணிகள்) ஆகியோர் தொகுப்பு வெளியிட்டுள்ளனர். இவை அனேகமாக வட பகுதி மக்களின் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டவை அறபாத்தின் கதைகள் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஓட்டமாவடிப்" பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் தமிழ் மக்களின் பின்புலத்தை ஆதாரமாகக் கொண்டவையாகும்.

முன்னவைக்கும் பின்னவைக்கும் உள்ள வித்தியாசம் என்ன? 30களில் எழுதப்படும் கதைகளுக்கும் இன்று 90களில் எழுதப்படும் கதைகளுக்கும் இடையே காணப்படும் வித்தியாசம் என்ன இந்த வித்தியாசத்தை ஏற்படுத்துவது என்ன?

காலங்காலமாக மனிதன் பலவித சூழலில் பல்வித வாழ்க்கை முறைகளால் நெறிப்படுத்தப்பட்டு வாழ்திருந்தாலும், அவனை ஆட்கொண்ட காதல், வீரம், சாவு, சந்தோசம், துக்கம் என்னும் உணர்வு நிலைகள் ஒரேமாதிரியாகத்தான் இருந்து-வந்திருக்கின்றன. உதாரணமாக ஆதிகால அடிமைகளை அடக்கி ஆண்ட முறைக்கும் இன்றைய இன அடக்குமுறைக்கும் அதிக வித்தியாசமில்லை. ஆனால் அவற்றை நடை முறைப்படுத்தும் விதங்களும் அவற்றை நடைமுறைப்படுத்தப்பாவிக்கும் கருவிகளும் வித்தியாசப்படுவதைத் தவிர. ஆகவே, இத்தகைய உணர்வு நிலைகளை வெளிப்படுத்தும் காவியங்கள் கதைகள் கவிதைகள் என்று நாம் படித்துள்ளோம். ஆனால் எல்லாமே மனதில் நிலைப்பதில்லை, சிலவற்றைப் படிக்கும் போதே இடையில் நிறுத்தி விடுகிறோம். சோர்வு வயப்படுகிறோம். எண்ணிக்கையில் மிகக் குறைந்தவையே எம்மை கலாரீதியாக ஆட்கொள்கின்றன. காரணம் அப்படைப்புகள் நம் உணர்வுகளைத் தொடுவதற்கு கையாண்ட எடுத்துச் சொல்முறை அல்லது, உத்தி எனலாம். பெனடிக்பாலனால் 63ல் எழுதப்பட்ட "விபசாரம் செய்யாதிருப்பாயாக", கதையையும் 95ல் எழுதப்பட்ட அவரது "லூக்கஸ் மாஸ்ர"ரையும் ஒப்பிட்டுப்பார்க்கையில் 30 வருடகால இடைவெளியில் அவரது கதை சொல்லும் ஆற்றல் கலைத்திறன் சிறிதளவும் முன்னேறவில்லை என்பதை அறியலாம். இதே மாதிரியே 60களில் சோளகம் எழுதிய யோகநாதனின் கதை சொல்லும் முறை இன்றுவரை அதேபாணியிலான துன்பக்கேணியிலேயே அகப்பட்டுச் சுழல் வதைப் பார்க்கிறோம். இவையெல்லாம் ஒரேவகையான தட்டையான கதை

சொல்லும் பாணி". இவை வாசகரை கவர்ந்திழுப்பதற்குப் பதில் ஒருவித களைப்பையே ஏற்படுத்தி அவன் வாசிப்பை தொடரமுடியாது செய்து விடுவன. இவற்றை உணர்ந்த சிறந்த கலைஞன், தன்எடுத்துச் சொல்முறையில் மாற்றங்களை நிகழ்த்துகிறான். அதன் மூலம் கலை இலக்கியப்படைப்பியலை அடுத்தொரு கட்டத்திற்குத் தாவச் செய்கிறான். இத்தகைய மாற்றங்களைக்காட்டும் படைப்புகள் மிகச்சிலவே ஈழத்தமிழ் இலக்கியத்தில் இடம் பிடித்துள்ளன.

இவற்றின் பின்னணியில் .அறபாத்தின் கதைகள் எவ்வாறுள்ளன?

நான் வகைப்படுத்திய மூன்று விதமான கதைப் போக்குகளில் அறபாத்தின் கதைகள் இரண்டாவது வகையைச் சேர்ந்தனவாய் உள்ளன என்பதில் சந்தேகம் இல்லை. அதாவது தமது காலத்தை யதார்த்தபூர்வமாகவும் கலைத்துவச் செறிவோடும் பிரதிபலிக்கும் கதைகள். எடுத்துச் சொல்முறையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று சொல்ல முடியாவிட்டாலும் இவரது விவரணமுறை மிகுந்த கவித்துவத் தன்மையும் சொற்செட்டுக் கொண்டதாயும் உள்ளது கண்கூடு.

"நினைந்தழுதல்" என்னும் மிக அழகிய தலைப்புக் கொண்ட இத்தொகுப்பு 14 கதைகளை உள்ளடக்கியுள்ளது. இதில் அடங்கியுள்ள கதைகள் அனைத்துமே ஒவ்வோர் வகையான இழப்பை முன்னிட்டு துயரந்தோய நினைந்தழுதலாகவே நிற்கிறது. முதல்கதையான "சோமாவின் தனிமை" என்னும் கதை இன்றைய போர்காலச் சூழலில் எல்லைக்கிராமத்தில் வாழும் சோமா என்னும் சிங்கள இளம் பெண்ணைப் பற்றியது. வறுமையின் காரணத்தால் தந்தையோடு மகளைவிட்டு மத்தியகிழக்குக்கு தாய் உழைக்கச் செல்கிறாள். இங்கே மகள் "பயங்கரவாதிகளுக்குப்" பதிலாக தகப்பனின் காமவெறியால் பயமுறுத்தப்பட அவள் தாயை நினைந்தழுகின்றாள்.

அடுத்துவரும் மண்ணோடுபோய், என்னும் கதை போரினால் தான் வாழ்ந்த இடத்தை விட்டுப்பெயர்ந்து வந்த முதியவர் ஒருவர் பற்றிய கதை. தான் பிறந்து வளர்ந்து அளைந்து கிடந்த சொந்தப்பூமியை விட்டுவந்த ஒருவர் தான் விட்டு வந்த மண்ணின் நினைவாய் வருந்துவதை மிகத்தத்ரூபமாய்க் காட்டுகிறது இக்கதை. தான் இடம் பெயர்ந்து வந்து தங்கியுள்ள புதிய இடத்திலிருந்து தான் விட்டுவந்த தன் சொந்த ஊரின் உயிர்ப்பாகத் துலங்கும் மலைமுகடு தெரிகிறதா

என்று மகனைப் பார்க்கும் படி அடிக்கடி ஏவும் முதியவரின் சோகம் எம்மையும் கௌவுகிறது. இடப்பெயர்வே பொதுவிதியாக மாறிய இக்காலத்தில் "தம்பி மல தெரியுதாண்டு பாருமனே" கிழவர் அடிக்கடி சொல்வது எம் அகஆழங்களுக்குள்ளும் கேட்கவே செய்கிறது. இக்கதை தன் சொந்த மண்ணை எண்ணி எண்ணி நினைந்தழுதலாகவே உள்ளது. யாழிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்மக்களின் உணர்வுகளும் சரி தமிழ் மக்களின் உணர்வுகளும் சரி இதிலிருந்து வேறுபட்டதாகவா இருக்கப்போகிறது?

"பேயாட்சி" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கதை இன்னோர் முக்கிய செய்தியைச் சொல்கிறது. விடுதலைக்காகப் போராட வந்தவர்கள், தமது நடவடிக்கை ஒவ்வொன்றையும் மிகநிதானமாகவும் விழிப்போடும் மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் அவர்களின் அதிகாரத்தில் வரும் ஆட்சி பேயாட்சியாகவே முடிந்துவிடும்-ஆபத்தும் உண்டெனப்பதை, மறைமுகமாக சுட்டுவதாக கதை முடிகிறது. சந்தேகத்தின் பேரில் ஒன்றும் அறியாத நிரபராதி இளைஞனை காட்டிக் கொடுத்தவனாகக் கற்பித்து சித்திரவதை செய்து கொன்றுவிடுகின்றனர். போராளிகள். "என்ட அல்லாஹ் அந்த அப்புராணி எப்படி அம்புட்டானோ? என்கிற ஆதங்கமே அக்கிராமத்து மக்களின் நிலை. இந்நிலையில் அநியாயமாகச் சாகடிக்கப்பட்ட அந்த "அப்புராணி" க்காகவே நினைந்தழுகிறது அக்கிராமம்.

இக்கதைக்கு அடுத்ததாக வரும் "விருட்ஷம்" என்னும் கதை முன்னைய கதையில் காட்டப்படும் தவறுகளையெல்லாம் நிவர்த்திசெய்யும் இலட்சிய ரீதியான விடுதலைப்போராளி ஒருவனின் வார்ப்பாக அமைகிறது. இதோ அக்கதையில் பின்வருமாறு அமையும் உரையாடலைப் பாருங்கள்.

"டேய் மகேஷ், யாருக்காக இப்பிடி கஷ்றப்பர்றாய்.
"என்மக்களுக்காக மச்சான், அவங்க சுதந்திரமாக வாழனும், அடக்குமுறை இல்லாத வாழ்க்கைய அவங்க அனுபவிக்கனும் ஆனா மாற்றுக் கருத்துக்கள மதிக்காத எங்களின்ற தலைமைத்துவம் பற்றித்தான் கவலையா இருக்கு மச்சான்..

"என்னடா மகேஷ் ஒண்டும் விளங்கலியே என்றேன்
"இதெல்லாம் உனக்குப் புரியாது... சிங்கள இனவாதிகள் தமிழரான எங்கள நசுக்கி அடக்குறதப்போல, எங்கட ஆக்கள் சகோதர இயக்கத்தையோ மற்ற மதத்தவரான அப்பாவிகளையோ அடக்கினா

இதில என்ன அர்த்தம்? காட்டுமிராண்டியில்லயா போரார்றதுல அர்த்தமில்ல.

இத்தகைய இலட்சியரீதியான விடுதலைப் போராளியைப்பற்றிய விவரணையாக அமையும் இக்கதை எந்தவிதச் செயற்கைத் தன்மையுமற்று இரத்தமும் சதையுமாக வார்க்கப்பட்டிருப்பதே இதன் வெற்றியாகும். ஒரு நாள் வம்மியடி ஆலமரத்தினைச் சுற்றி ஆட்கள் கூடிநின்ற போது அங்கே இப்போராளியின் படமும் அதன் கீழ் அஞ்சலிக்கவிதையும் இருப்பதைக் கண்டு இவன் திடுக்கிடுகிறான். எல்லார் நெஞ்சிலும் நிறைந்த அத்தகைய போராளி ஒருவனின் மறைவு குறித்த நினைந்தழுதலாகவே கதை அமைகிறது.

"வேப்பமரம்" என்ற கதையில் ஆசிரியைஆக விடுதலை வேட்கையுடையவளாக எழுத்தாளியாக இயங்கிய தாய் எதிரிகளால் கொல்லப்பட்டு முற்றத்து வேப்பமரத்தின் கீழ் கிடக்க, ஒன்றும் புரியாத நிலையில் அவள் மகனான சிறுவன், வேப்பமர வயிரவன்தான் அடிச்சுப் போட்டான், என்று நினைத்து அதை வெட்டப்போய் ஈற்றில் முடியாத நிலையில் அந்த வேப்பமரத்திலேயே தலையை மோதி அழுங்காட்சி எம்மை நினைந்தழ மட்டுமல்ல, கரைந்தழவும் செய்கிறது.

இவ்வாறே வேட்டை என்ற கதையில் ராணுவ வெறியர்களால் கற்பழிக்கப்பட்ட தன் சகோதரியை நினைந்தழும் சாலமன். காத்திருப்பு என்ற கதையில் விறகு வெட்டப்போன கணவன் ராணுவக்காரர்களால் சுடப்பட்டு பிணமாகத் திரும்பிவர தெருத்தெருவாகக் கதறியழும் அவன் மனைவி. தன்சொந்த ஊரை விட்டு வேலையின் நிமித்தம் கொழும்புக்குப் போனவன் கனகாலத்திற்குப் பின் தன்ஊர் திரும்பியபோது அங்கே "வெளியார்" வருகையால் அவன் சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையில் தன் சொந்த மண்ணிலேயே தான் அந்நியமாக்கப்பட்ட நிலையை நுணுக்கமாக காட்டும் "விலங்கு" என்னும் கதை போரின் கொடூரத்தால் தான் வாழ்ந்து வந்த இடத்தையே விட்டு வந்து அதனால் தன் தொழில் வீடு சொத்து அனைத்தையும் இழந்து தன் சகோதரிகளை கரைசேர்க்கும் பாரமே தன்னை அழுத்த தனிமையில் முடங்கி நினைந்தழும் ஒருவனைப் பற்றி கூறும் நினைந்தழுதல் என்னும் கதை என்று எல்லாமே நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் ஒவ்வோர் இழப்பை முன்னிட்ட நினைந்தழுதலே.

இக்கதைகளுள் "இளவரசி" எனும் கதை வித்தியாசமான

கதைக்கருவைக்கொண்ட ஏனைய வற்றிலிருந்து வேறுபட்ட எடுத்துச் சொல்முறையில் அமைந்துள்ளது. உமாவரதராஜனின் "அரசனின் வருகை" கவியுவனின் "காற்றுக்கணக்கும்தீவு, போன்றவற்றின் உருவகச்சாயலில் எழுதப்பட்டதாகும். ஆனால் அக்கதைகள் ராணுவ அடக்குமுறைக்குள்ளான தமிழ்பேசும் இனத்தைக் கோடிகாட்டுகின்றன வென்றால், இக்கதை விடுதலைக்காக போராடும் ஒரு சிறுபான்மை இனம், இன்னொரு சிறுபான்மை இனத்தை அடக்குவது பற்றியும் அதற்கெதிரான போராட்ட முனைப்பையும் கோடிகாட்டுவதாய் உள்ளது. எடுத்துக்கொண்ட கதைக்கேற்ப காகக்கூட்டில் முட்டை இடும் குயில்களின் அவலம், என்றும் இளவரசி, அவருக்கு துதி பாடும் புலவர் புயல், காட்டை ஆளும் சிங்கம் என்றும் இன்று வாழும் சிலரை அழகாக உருவகித்து எழுதப்பட்ட நல்ல உருவக்கதை இது.

இக்கதைகளுள் "உம்மா வரப்பேறா" "பிரமை" அவனும் மனிதன் தான்" ஆகிய கதைகள் முன்னவற்றோடு ஒப்பிடுகையில் இன்னும் ஆழமான கருத்துலகை வேண்டி நிற்கின்றன. உம்மா வரப்போறா என்னும் கதை மத்திய கிழக்குக்கு வேலைதேடிச் சென்றிருந்த பெண் வீடு திரும்புதல், அவளோடு ஒட்டாதுபோகும் அவள் பெற்றபிள்ளைகள் என்னும் கதைக் கருவைவிட, இன்றைய சமூக பொருள்தாரப் பின்னணியின் ஆழங்களில் வேரூன்றியிருந்தால் கதை வலிமை பெற்றிருக்கும் "அவனும் மனிதன்தான்" "பிரமை" ஆகிய கதைகளும் இவ்வாறே இன்னும் ஆழம் வேண்டி நிற்கின்றன. மன வளர்ச்சி குன்றிய மனிதர் பற்றி ஏராளமான கதைகள் வெளிவந்துள்ள நிலையில், "அவனும் மனிதன்தான்" பல ஆழமான மனஅலசல்களைக் கொண்டதாக வார்க்கப்பட்டிருக்கலாம், காதல்கதையான "பிரமையும்" அவ்வாறே பலப்படுத்தப்பட்டிருக்கலாம்.

அறபாத் சிறந்த கவிஞராகவும் இருப்பதால் இவர்கதைகளின் விவரணையிலும் அதே கவித்துவம் மினுக்கங்காட்டுவதை இக்கதைகளில் காணலாம். "முத்தம்மா" என்ற கதை ஒரு கவிதை போலவே ஆரம்பிக்கிறது "தயிர்சட்டியின் வடிவத்தில் வானில் கிடந்தது நிலா. கொட்டி வைத்த இடத்தில் சற்றுநேரம் இசகாமல் பிசகாமல் உறைந்திருக்கும் எருமைத்தயிரைப்போல் ஆடாமல் இருந்து அதன் வடிவம். வெண்ணிற மேகங்கள் நிலவை மூடிமூடி ஆலிங்கனம் செய்கையில் உறைதயிரின் பாலாடையோ-வென வியக்கவைத்தது அதன் அழகு. "வேட்டை" என்ற கதையில் பனிப்புகார் அடர்ந்த ஓடைக்கரை நுரைதள்ளிக் கரைதடவும் உவரலைகள் என்னும் வரிகள் வாகநேரிக் குளத்தைப்பற்றிச் சொல்லும் போது. கச்சான் காற்றுக்

காலத்தில் தரைகொள்ளாத அலை அடிக்கும். இங்கிருந்து பார்த்தால் அலைகளின் முதுகு மினுக்கம் கண்ணுக்குள்தைக்கும்” எனும் வரிகளிலும் நான் கூறிய கவித்துவ விவரணை கவிவதைக் காணலாம்.

மொத்தத்தில் இக்கதைத் தொகுப்பை படித்தபோது போர்க்காலச் சூழலால் பல்வேறு துன்பங்களிலிருந்து கசிந்து வரும் அவலம் என்னை அறியாமலே என் அடிமனதில் மண்டியதை உணர்ந்தேன். க.ந.சு.வின் “பொய்தேவு” கதையைப் படித்தபோது மனதை விரக்தியடையச் செய்யும் ஒருவித வரட்சிப்படிமம் கொள்வதாக தருமுசிவராமு கூறினார். அவ்வாறே ஒருவித அவலச்சுவை இக்கதைத் தொகுப்பில் படிமம் உறுவதை படிப்போர் உணரலாம். அந்த விதத்தில் போர்க்கால சூழலில் அண்மையில் வெளிவந்த தொகுப்புகளில் இதற்கோர் தனியான இடமுண்டு என்பதில் சந்தேகமில்லை. இக்கதைகள் அனைத்துள்ளும் ஊடாடி அனைத்தையும் ஒன்றோடொன்று இணைத்துநிற்கும், ஓர் கருத்தியலாக இவ்அவலமே நிற்கிறதென்றே நான் கூறுவேன்.

மு.பொ -

17-11-98

# கண்விருத்தல்

வெளியீட்டு வரிசையில் இது எனது நான்காவது நூலாகும். நெடுநாள் அவா, கண்விடுக்கின்ற போது மனம் நிறைகிறது. சிறுகதை அனுபவத்தில் இன்னும் நான் தேறவேண்டியுள்ளது. அண்மைக்காலமாக நான் வாசித்த சிறந்த மலையாள, ஆங்கில படைப்புகளும், தமிழின் உச்சத்தை எட்ட நினைக்கும் படைப்புகளும் எனக்கதை மிகத்துல்லியமாக உணர்த்தின.

சில நேரங்களில் படித்து வெகுகாலத்திற்கு பின்பும் உயிருடன் கலந்து ஆன்மாவை உசுப்பிவிடும் அந்த பாத்திரங்களில் மனம் இடறித்தீய்கிறது. வெகு நுண்மையாக அடிமனத்திலும் ஊடுருவி, சுவாசத்தை, இழுத்துப்பிடித்து சகல ஆன்ம இயக்கங்களையும் நிறுத்தி விடுகின்றது. அந்த அற்புதங்களுக்கு முன், மாலைக்கு ஏங்கும் கழுத்துடன் அலையும் நம் பேனா செருக்கரும், இலக்கியச் சித்தரும் சத்தியமாய் தலைகுனியத்தான் வேண்டும். அவ்வளவு அவமானம்.

பொதுவாக இத்தொகுதியில் உள்ள கதைகள் என் அகத்தூண்டலின் (Inspiration) வெளிப்பாடேயாகும். இதில் உலவும் மாந்தர்கள் போரின் கொடிய நகங்களால் பதம் பார்க்கப்பட்டவர்களே. என்பிரதேசத்து தமிழ் பேசும் மக்களின் சமகால அவலங்கள், ஜீவனுள்ள கிராமத்திற்கே உரிய மண்வாசனை மிக்க சில பாத்திரங்கள் என-என் பார்வைகள் விரிகின்றன. நவீன சிறுகதை உத்திகளில் பரிச்சயம் கொண்ட இலக்கிய ஆர்வலர்கள் என் பலவீனத்தையும் பலத்தையும் இத்தொகுதியை மையமாக வைத்து மதிப்பிட்டுக் கொள்ளட்டும்.

அண்மைக்காலமாக சில பரிசோதனை முயற்சியில் ஈடுபட்டேன். கதை சொல்லும் லாவகத்தை நவீனப்படுத்தியன் மூலமாக "இளவரசியும்" "கூத்தாடிகளும்" உருவாகினர். இத்தொகுதியில் "கூத்தாடிகள்" கதையையும் சேர்த்துக் கொள்ள எடுத்த கடைசி முயற்சியும் தோல்வியடைந்து விட்டது. "அம்மா(பிரான்ஸில்) வந்த அக்கதையின் பிரதியும், அம்மாவும், கைமாறிப்போனதுதான் காரணம். சமகால அரசியல் அவலத்தின் அற்புதமான குறியீடாக பேசப்பட்ட கதையது.

நான் கொஞ்சமேனும் கணதியாகவும், யதார்த்தமாகவும் எழுத பயிற்றுவித்ததில் சரிநிகரின் பங்கை மறந்து விடமுடியாது. இத்தொகுப்பில் உள்ள கணிசமான கதைகள் சரிநிகரில் பிரசுரம் பெற்றவை "சுமை தாங்கிகள்" என தலைப்பிட்டு ஒரு கதை அனுப்பியபோது "நினைந்தழுதல்" என்ற தலைப்பில் சரி-நிகர் அதை பிரசுரித்திருந்தது. உண்மையில் அக்கதைக்கு மாத்திரமன்றி தொகுதிக்கென கதைகளை, வடிகட்டி தலைப்புத்தேடிய போது சகலபாத்திரங்களையும் உள்ளடக்கி இத்தலைப்பு மிகக்கச்சிதமாக அமைந்துவிட்டது. அத்துடன், அவ்வப்போது என் படைப்புகளை மனமுவந்து, பிரசுரித்து-தவிய இதர பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கும் நான் கடமைப்பட்டவன்.

இலங்கையை பொறுத்தவரை நூற்கள் வெளியிடுவதும் விற்பனை செய்வதும், இமயச்சாதனை. அச்சாதனையில் நான் வெற்றியீட்ட, உதவியவர்களை நெகிழ்வோடு நினைத்துப் பார்க்கிறேன். குறிப்பாக பிரதிகளை படித்து குறுகிய காலத்தினுள் முன்னீடு தந்த என் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய மு.பெ.(மு.பொன்னம்பலம்) அவர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

அத்துடன் வழக்கமாக என் நூற்களை வாங்கிப் படிக்கும் வாசகர்களாகிய நீங்கள், இதற்கும் ஆதரவு தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இறுதியாக "அய்யப்பபணிக்க"ரின் வைர வரிகளுடன் விடை பெறுகின்றேன்.

"எந்த ஒரு எழுத்தாளரும் சுயம்புவாக சூனியத்திலிருந்து உருவாவதுமில்லை. எந்த ஒருபடைப்பும் பிற படைப்புகளுடன் ஒப்பிடாமல் தனியொரு படைப்பாகக் கொண்டு மதிப்பிடப்படுவதுமில்லை. மரபு வழி வந்த பழம் படைப்புகளை ஒருபக்கமும், புதிதாக பிறக்கப் போகும் இன்னென்று, இனம் காண இயலாத நாளைய படைப்புகளை ஒருபக்கமும் கொண்டுள்ள சங்கிலியின் இணைப்பு வளையமாகவே புதிய படைப்பாளிகள் இயங்குகின்றனர்."

-நன்றி-

அன்புடன்

அறபாத்

98-11-20

*71, Basheer St,*
*Mavadichenai*
*Valaichenai: 30400*

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | சோமாவின் தனிமை | தினக்குரல் '98 |
| 2. | மண்ணோடு போய் | மீள்பார்வை 97 |
| 3. | இளவரசி | மீள்பார்வை '97 |
| 4. | பேயாட்சி | சரிநிகர் '94 |
| 5. | விருட்ஷம் | சுவடுகள் (நோர்வே) '95 |
| 6. | வேப்பமரம் | சரிநிகர் '95 |
| 7. | அவனும்-மனிதன்தான் | தினகரன் '95 |
| 8. | காத்திருப்பு | தினக்கதிர் '98 |
| 9. | மூத்தம்மா | சரிநிகர் '96 |
| 10. | உம்மா வரப்போறா | தினகரன் '98 |
| 11. | விலங்கு | அம்மா (பிரான்ஸ்) '98 |
| 12. | நினைந்தழுதல் | சரிநிகர் '95 |
| 13. | பிரமை | அம்மா (பிரான்ஸ்) '98 |
| 14. | வேட்டை | சரிநிகர் '98 |

# நினைந்தழுதல்

இது
என்னை தொட்டெடுத்து
தாலாட்டிய உம்மாவுக்கும்
நான் எட்டுவைக்க ஏணியாக
நின்ற வாப்பாவுக்கும்.

## நன்றி

- சரிநிகர்
- தினகரன்
- மீள்பார்வை
- தினக்குரல்
- தினக்கதிர்
- அம்மா [பிரான்ஸ்]
- சுவடுகள் [நோர்வே]
- ஹாஜான் [ஸ்வீஸ்]
- தாஹிர் அச்சகம்
- A.S.M. Computer Centre
- ரஷ்மி [சரிநிகர்]

# சோமாவின் தனிமை

சோமா திண்ணைக்கட்டில் குந்திக் கொண்டு வாசலை வெறித்திருந்தாள். விண்மீன்கள் சிதறிக் கிடந்த வானத்தில் நிலா அம்மணமாய் நின்றது. நேற்று வந்த அம்மாவின் மடலுக்கு பதிலிட வேண்டுமென்ற நினைப்பு மனதை அரிக்கத் தொடங்கிற்று. வாழ்க்கை அவள் அம்மாவை வெகு தூரத்திற்கு விரட்டிவிட்டது. அம்மா அவளை மடிக்குள் இருத்திக் கொண்டு சொல்வாள்.

"மகே ரஜனீய ஒயாய்,"

"மகே பனத் ஒயாய்"

அம்மாவின் இராஜ குமாரத்தி, கதறக்கதற பிரிந்தே போய்விட்டாள். சோமாவின் வாழ்வில் தீபம் ஏற்றவே தான் புறப்பட்டுச் செல்வதாக, விமான நிலையத்தில் விடைபெறும் போது இவளிடம் கூறிக் கொண்டு அழுதாள்.

அப்பு இன்னும் வரவில்லை அவர் வராமலிருக்க வேண்டுமென புத்தரை நினைத்துக் கொண்டாள். பன்சல நாயக்க ஹாமுதுருவும், இன்னும் சில சாமிமார்களும் சுது ஐயாவின் வீட்டில் பிரித் ஓதுவதை சோமா கேட்டாள். சுது ஐயா இராணுவத்தில் சேர்ந்து ஆறுமாதங்களின் பின், பிணமாகக் கொண்டுவந்து கூடத்தில் கிடத்தினார்கள். அவரின் ஈமக் கிரிகைகள் இன்றுதான் நடைபெறுகின்றது. அவள் வீதியைக் கடந்துதான் பிரேத ஊர்வலம் போகும். சோகம் கப்பிய முகத்துடன் இராணுவ உடை தரித்த வீரர்கள் முன்றலில் கூடியிருந்ததை சோமா கண்டாள். சுது ஐயாவின் அம்மாவின் விசும்பல் அவள் நெஞ்சைப் பிழிந்தது.

அப்பு இன்றிரவும் அப்படிச் செய்வாரோ, அவளுக்கு கூச்சமாகவும், பயமாகவும் வந்தது. அம்மா வருவதற்குள் அவளை கொன்று விடுவாரோ என்ற திகில் வேறு சோமாவை ஆட்கொண்டது. அம்மாவின் பிரிவு அப்புவிற்கு அளவற்ற சுதந்திரத்தை வழங்கி இருந்தது.

அவர் அண்மைக் காலமாக ரத்தியின் வீட்டுக்குப் போய் வருவதாக கேள்வி, பேச்சு வாக்கில் இவள் காதில் படும்படி குஷ்மா இடித்துக் காட்டினான். ரத்தி ஊரிலுள்ள குடிகாரர்களின் பொதுச் சொத்து. ஒதுக்குப்புற குடிசை ஒன்றில் சரக்கு விற்பவள். அப்புவின் நண்பர்கள் "ஹொந்த படு" எனப் பேசிக் கொள்வது அவளாகத் தான் இருக்க வேண்டும். சில நாட்களாக அப்புவின் குணங்களும் வெகுவாக மாறி விட்டதை சோமா உணர்ந்தாள்.

வெளித்திண்ணையில் மாட்டியிருக்கும் அம்மாவின் படத்தைப்பார்த்து கர்ஜிக்கத் தொடங்கிவிடுவார். சோமா பற்றி அவர் பெரிதாக அலட்டிக் கொள்வதுமில்லை. தன் முன்னெறி தெய்வங்களின் வாழ்வு குறித்து, சோமா கடவுளிடம் முறையிட்டுக் குமுறினாள்.

அப்பு நள்ளிரவில் வந்து தடதட வென்று கதவைத் தட்டுவார். சமயங்களில் நண்பர்களையும் அழைத்து வருவார். நடுக் கூடத்தில் குப்பிலாம்பை வைத்துக் கொண்டு 303 விளையாடுவார்கள். இடையிடையே போத்தல்களை உயர்த்தி ஊற்றிக் கொள்ளும் "களுக் களுக்" சத்தத்தை சோமா கேட்பாள். அல்லது உரித்த கோழியொன்றை கொணர்ந்து "மகே துவ லங்கட்ட குகுலக் ரோஸ் கரல தென்ட" அந்நேரத்தில் மட்டும் அப்பு அவளை துவ துவ என பாசம் குழைய அழைப்பார்.

சோமா எழுந்து உள்ளே சென்றாள். வீடு முழுக்க இருள் படர்ந்திருந்தது. காற்றின் கரங்கள் 'குப்பி லாம்பை' அணைத்து விட்டிருக்க வேண்டும். அடுப்பில் நெருப்பெரிந்தது. லாம்புகளை உயிர் கொடுத்து மூளைக் கொன்றாய் வைத்துவிட்டு, ஜன்னல்களை சாத்தினாள். இன்றிரவு போசனத்திற்கு, பொல் ரொட்டியும், சம்பலும் செய்திருந்தாள். அப்புவிற்கென மேசையில் மூடிவைத்து விட்டு, மறுபடியும் திண்ணைக்கட்டில் வந்தமர்ந்தாள்.

முற்றத்திலிருந்த பலா மரத்திலிருந்து "பொளசிக்காய்" விழும் சத்தம் கேட்டது. கூடைக்குள் மூடியிருந்த கோழிகள் சிலமன் கேட்டு குறுகுறுவென்றன. அவளின் "சூட்டி" பலாவைப் பார்த்து உறுமி விட்டு அடங்கிப் போனது. சோமா நாளைக்கு எழுதப் போகும் அம்மாவின் கடிதம் குறித்து மனசுக்குள் ஒத்திகை நடத்தினாள். நல்ல சொற்களைத் தேடி, கச்சிதமாக வசனங்களை பொருத்திப் பார்த்தாள்.

தனக்குத் தேவையானவற்றை அம்மா எழுதும் படி கேட்டிருந்தாள். தற்போது அவளுக்குத் தேவை அம்மாதான். அவள் தான் இன்னும் இரு வருடங்கள் முடிந்து வருவதாக எழுதிவிட்டாளே. அவளுடனான அப்புவின் வினோத செயல் குறித்து அம்மாவிற்கு எழுதினால் தன்னைக் கொல்வதாக

அப்பு உருட்டியிருந்தார். சோமா சாவிற்குப் பயந்தாள். சுது ஐயாவின் அருகே அவளையும் புதைப்பார்கள். கடவுளே, அவரின் சிதறிய உடம்பை அவளாள் எப்படி சகிக்க முடியும்.

அவள் தோழி குசுமாவுக்கு நேற்று திருமணம் நடந்தது. எவ்வளவு கெஞ்சியும் அப்பு அங்கு போய்வர தடுத்துவிட்டார். அம்மா இருந்திருப்பாளெனில் இரண்டோ, அல்லது அதற்குக் கூடிய நாட்களோ தங்கி வரும்படி அனுப்பி இருப்பாள். குசுமா அவள் உயிர்த் தோழி. குசுமாவின் அயலில் தான் சுமனின் வீடும் இருந்தது.

சோமாவின் காதலனாக சுமன் இருந்தான். அப்பு இல்லாத மாலை நேரங்களில் சுமன் அவள் தோட்டத்திற்கு வருவான். அடர்ந்த வாழைமர இலைகளுக்குள் மறைந்திருந்து சோமா அவனுடன் பேசுவாள். பிஞ்சுக் காதலின் திவ்ய வாசத்தில் அவள் கிறங்கினாள். கனவுகளின் விஸ்தாரம் அவள் இரவுகளைச் சுருக்கிற்று. சுமன் அவள் செலுமை மிகு கொழுத்த மாம்பழங்களை உருட்டித் தடவி, அவளை சிவக்கச் செய்வான். அவளுக்கும் அதில் இசைவிருந்தது.

சில சமயங்களில், அவளை இறுக்கிக் கொண்டு, 'ஒபய் மமய்' என்று சொண்டைக் கவ்வியவாறு முனங்குவான். அது விஷயத்தில் சோமா கறாறாய் இருந்தாள். அம்மா இருந்திருப்பாளெனில் இந்த இன்பங்கள் தடைப்பட்டிருக்குமோ என அக்கணத்தில் மட்டும் அவளால் அம்மாவை நிராகரிக்க முடிந்தது.

குசுமா நாளை புருஷன் வீட்டிற்கு போகிறாளாம். அதற்காவது வந்து போகும் படி வற்புறுத்தி ஒரு கடிதம் அனுப்பி இருந்தாள். இந்த அப்பு அனுமதித்தால்தானே. அம்மாவின் பளுவெல்லாம். இவளில். அப்புவின் ஆடைகளை துவைப்பது, சமைப்பது, பகலில் ஒருபாட்டம் கண்ணயர நேரமிருக்காது.

சுமனின் தரிசனம் பற்றி யாரோ அப்புவிற்கு, எத்திவைக்க, அவர் பாஷையில் சுமனிடம் போய், துள்ளிவிட்டு வந்திருக்கிறார். சோமாவிடம் அது குறித்து சிலாகிக்கவுமில்லை. சுமனின் தரிசனம் நின்று போய்விட்டது. அம்மாவை வெறித்தபடி அழுது தீர்த்தாள். அம்மாவிற்கு அருகே, கண்மூடி தியானம் செய்யும் புத்தரிடம், சுமனை மறக்க வழி சொல்லும்படி உருகினாள்.

இன்று அப்புவின் காட்சட்டை "பக்கற்"றில் இருந்த ஒரு பொருள் அவளை மிகப் பயமுறுத்தியது. அப்படியென்றால் அம்மாவிற்கு துரோகம் செய்வதில் முனைப்பாக இருக்கிறார். சிறிய பலூனை ஒத்த அதை பாடசாலைக்கு செல்லும் காலைப் பொழுதுகளில் வீதியோரம் கண்டிருக்கிறாள். குசுமாதான் அதன் பயன்பாடு குறித்து அவளுக்கு விளக்கினாள். குசுமாவின் தற்போதைய கணவன் (படிக்கும்

காலங்களில் காதலன்) அதை அவளுக்கு அறிமுகப்படுத்தி...... குசுமா சொன்னதைப் போல் அப்புவும் ரத்தியுடனா? அல்லது?

தனக்கு வந்த வரன்களை கூட, அப்பு தட்டிக் கழித்துவிட்டார். அவள்ர தாயார் வரட்டுமே, இப்ப அவளுக்கு என்ன வயசோ' என அவர்களை திருப்பி அனுப்பி வைப்பார். அப்புவின் நிராகரிப்பு ஏனென்பதை சோமா அறிவாள். அப்பு முன்செய்த கடையையும் மூடிவிட்டார். அம்மாவின் மாதாந்த 'செக்கில்' களியாட்டம் தொடர்கிறது.

சோமாவின் பாட்டி, சில நாட்களில் அவளுடன் வந்து தங்குவாள். அந்த நாட்களில் மட்டும் சோமாவிற்கு ஆதுரமாய் இருக்கும். அப்புவும் நல்ல பிள்ளையாய் வீட்டோடு அடங்கிக் கிடப்பதும், அவளில் கரிசனை மிகக் கொண்டு குழைவதும், சோமாவுக்குகொன்றும் புதிதல்ல. அப்புவிற்கு மாமியின் மேல், பக்தியும், பாசமும் இருந்தது. அந்த நாட்களில் அப்பு மனிதனாக இருப்பார்.

சோமாவிற்கு கண்ணை சொருகிக் கொண்டு வந்தது. பகலின் கடும் உழைப்பும், சுமனின் எஞ்சிய நினைவுகளும் இரவில் அவளை வாட்டின. அவள் முன்னால் பதுங்கி நிற்கும் இருளுக்குள் சாவின் வலிய கரங்கள் நீண்டு வருகின்ற பிரேமை. இப்படி எத்தனை நாட்கள்தான் தனிமையில் உழன்று, சமைத்து, துடைத்து, கிலிபிடித்து வாழ்வது. வீட்டில் பொழுது போக்க ஒரு வானொலி கூட இல்லை. அவளுக்கு சித்தம் கலங்கி விடும் போல் இருந்தது.

கடவுளே இன்று தூங்கக் கூடாது. அப்பு வந்தால் எங்கேயாவது ஓடிவிட வேண்டும். என நினைத்துக் கொண்டாள். எங்குதான் ஓடுவது அம்மாவின் இந்த வீட்டைத் தவிர புற உலகம் பற்றி சோமா அறிந்திருக்கவில்லை.

தோட்டத்தில் இலைகள் அசைந்தன. கதலி நிலாவின் மினுக்கத்தில் இலைகளில் தங்கி நின்ற நீர்ச் சொட்டுக்கள் மினுக்கம் கொடுத்தன. அடிமரங்களில் இருள் உறைந்திருந்தது. சோமாவுக்கு, நெஞ்சை அடைத்துக் கொண்டுவந்தது. கடவுளே, இன்று அப்பு வீடு வராமல் பார்த்துக் கொள். அம்மா வந்தவுடன் மாகாபோதிக்கு காணிக்கை செலுத்துவதாக வேண்டிக் கொண்டாள்.

எல்லாத் துயரங்களையும் அம்மாவுக்கு எழுதி வரவழைத்தால் என்ன? இல்லையெனில் அவள் ராஜகுமாரத்தியை இரட்சிக்க முடியாமல் போய்விடுமே! அப்பு ரத்தியின் வீட்டுக்குப் போவதை மட்டும் அம்மாவுக்கு எழுதக் கூடாது. அவள் தாள மாட்டாள். அப்புவை தெய்வமென நினைத்து வாழ்ந்தவள் – வாழ்பவள். சோமா நாளை எழுதப் போகும் மடலின் மூலம் தன்னை தேற்றிக் கொண்டு சாய்ந்தாள்.

அவளால் முடியும் வரை கண்களை அகல விரித்துக்கொண்டுதான் கிடந்தாள். கண்கள் மேல் நோக்கிச் சொருகின. கதவு அப்படியே விரித்தபடி இருக்க உள்ளறையில் போய் படுத்துக் கொண்டாள்.

நள்ளிரவு எமர்சன் 'காமென்டின் மூன்று மணியை அறிவிக்கும் அலாறம் கேட்டு, சோமா திடுக்கிட்டு, விழித்தாள். தன்னருகே புளித்த சாராய நெடியை முகர்ந்தாள். தேகம் துடித்தது போராடத்திராணியற்று விறைத்துக் கிடந்தாள். அப்பு அவளருகே அலங்கோலமாய் படுத்திருந்தார். சோமா தன் உடைகளை அணிந்து கொண்டு எழுந்தாள். வயிற்றைக் குமட்டிக் கொண்டுவந்தது.

விறாந்தைக்குள் வந்தாள். வெளியே இருள் மண்டிக்கிடந்தது. புத்தரின் படத்தருகே குப்பிலாம்பு மினுக்கம் கொடுத்தது. சோமா முகத்தைப் பொத்திக் கொண்டு விசும்பினாள். சாமியின் முன்நின்று கைகளைக் கூப்பினாள். அவள் உதடுகள் நடுங்கின. 'கடவுளே என்னை அம்மாவின் குமாரத்தியாக வாழவைக்கமாட்டாயா?'

# மண்ணோடு போய்..........

"தம்பிமலெ தெரியுதாண்டு பாருமனெ" செத்தையில் சாய்திருந்த வாப்பாவின் குரல் நசிபட்டு கசிகிறது. "ஓம் வாப்பா தெரியுது" என்கிறேன். நான்கைந்து வருடங்களாக அவர் ஆதங்கமாய் தொடுக்கும் வினா. நானும் கிளிப்பிள்ளையாய் ஒரே பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். "ஓம் தெரிகிறது" என்கிற போதெல்லாம் எனக்குள்ளும் விபரிக்கவியலா புழுக்கம் தகிக்கத் தொடங்கிவிடும்.

நகரத்தில் எத்திசையில் நின்று நோக்கிடினும், மலை முகடு மதர்ப்புடன் துலங்கும். அதன் பொலிவில் மனம் மோகிக்கும். வழக்கம் போல் வாப்பா பினாத்தத் தொடங்கிவிட்டார். மலை முகட்டை தீட்சண்ய வேட்கையுடன் வெறிக்கிறேன். அது நான் பிறந்த மண்ணுக்குரிய மலை. அதன் அடிவாரத்தில் என் நினைவுகள் சிக்கிக் கொள்கின்றது. என்னுள்ளே உறைந்து கிடக்கும் மண் மணத்தை கிண்டிவிடுகிறது. மனசை பிய்த்துப்பிய்த்து உதறிப் போடுகிறது. முதிர்ந்த கிழவனொருவன் முரட்டுக் கம்பளியொன்றால் போர்த்திக் கொண்டிருப்பது போல், சவடலாய் தெரிகிறது அதன் கூனல். மலையடிவாரத்தை அண்டினாற்போல் நுங்கிப் பிரவகித்து ஓடும் ஆறு. வாப்பா கதை சொல்வார்.

"மகன் இந்த மலையைப்பத்தி தெரியுமா?"
"இல்ல வாப்பா",
"இது ராச பரம்பர கண்டதுடா",
"அந்தா அங்க பாருடா",

அவர் சுட்டும் திசையை நோக்கி பாவுமென் விழிகள். அடிவாரத்தில் துருத்திக் கொண்டிருக்கும் கருங்காலித் தூண்களும், தூர்ந்து போன அரண்மனை எச்சங்களும்எதிரே அரக்கித் தெரியும்.

"அதான்டா மகன் அவங்கட மாளிக",

"ம் என்னத்தடா சொல்ல,

நம்மட கையில இருக்கிறத காகம் சொட்டிப் போகாத காலம்டா அது" என்றவாறு பெருமூச்செறிவார். அவர் மடிக்குள் மடிந்திருந்து,

"ம்" என முனகி, "மருகா", என உந்தி மல்லாந்திருப்பேன். வெதுவெதுப்பான வாப்பாவின் மடி, மெத்தென்றிருக்கும். சீதளம் விட்டுப் போகும்.

சோதயன் மலையின் வட நிழல் விழும் திசையில் எங்கள் தோட்டமிருந்தது. மிகுதமாய் மாமரங்களும், பலா மரங்களும் சடைத்து நின்ற விசாலமான தோட்டம் அது. தோப்பின் மையத்தில் புரைவாடி. காவற்காரன் தங்குவதற்கென சற்று விஸ்தாரமாய் கட்டியிருந்தார் வாப்பா. தோப்பு முசிய நிழல் மண்டிக்கிடக்கும். இலை இடுக்கினூடே நழுவி விழும் பொற்கதிர்கள் தரையெங்கும் கருநாகமாய் வழுவித் திரியும். உள் மனசில் உவகை தெரிக்கும்.

இராக் காலங்களில் எல்லையோரம் நின்றால் அலைகளின் பேரிரைச்சல் காதில் வந்து அறையும். எகிறி வரும் அலைகளின் முதுகு மினுக்கம் கதலி நிலாவின் வெள்ளிக் கோடுகளால் ஜாலங்காட்டும். அலைகள் ரச வித்தை பழகும். மவுனித்திருக்கும் இரவுடன் மனம் கட்டிப் புரளும்.

இந்தப் பகுதியில் கடை என்று பேர் சொல்ல எங்களது மட்டும்தான் இருந்தது. வியாபாரமும் வலு கலாதி. அந்தரித்து வருபவர்கள் இளைப்பாறிப் போகவென கடை முன்றலில் சடை விரித்து நின்றது புளிய மரம். பெரும் புயலுக்கும் வெள்ளத்திற்கும் தலை சாய்க்காத கர்வி என்பார். அது நெஞ்சு தாளாத சுய தம்பட்டம். தலை குனியாத அதன் சுயத்திற்கு கிடைத்த மவுசு. "இப்படித்தான் எல்லோரும் இருக்க வேண்டும். எந்தக் கொம்பனாய் இருந்தாலென்ன தலை குனியக் கூடாது" என்பார்.

அப்போது எங்கள் தோட்டமே போராளிகளின் உறைவிடமாய் இருந்தது. சமயற்கட்டில் சதா பொங்கிக் கொண்டிருக்கும் உலை. விறாந்தைக்குள் கால்களைப் பரத்தியவாறு காய் கறி நறுக்கிக் கொண்டிருப்பாள் செல்லம் அக்கா. வியர்வை கசிந்துருக வருபவர்களுக்கு இலை போட்டுப் பரிமாறிக் கொண்டிருப்பாள் கமலம் அக்கா. இவற்றிக்கெல்லாம் பிரதியுபகாரம் எதிர்பார்க்காத நெஞ்சினனாய் "தம்பியள் நல்லா பசியாறுங்கோ" என்றபடி கடைக்கும் விறாந்தைக்குமாக நடந்து வருவார் வாப்பா.

கடைக்கு முன்னால் எம்.கே. யின் செம்மறி ஆட்டுப்பட்டியும், இடையர்கள் குடிசைகளும், மாரி காலத்தில் ஆட்டுப்புழுக்கையும், மொச்சை நெடியும் கலந்த துர்வாடை காற்றில் ஒழுகி வர மனங்குமையும். இடது பக்கமாய் விரிந்த தோட்டுட்

பாயென பரந்த வயல்வெளி. சேற்றுப் புதையலில் இழுவை மாடுகளின் சொத சொதப்பு. வரப்பு நிறைய நாட்டுப்புற மரக்கறி, கீரை வகையறாக்கள் உம்மாவின் மேற்பார்வையில் செழித்து நிற்கும்.

வயலுக்கு அப்பால் அகன்றதொரு ஆலமரம் 'வைரவனின் உறைவிடமாய் 'பேய்க்காட்டி நின்றது. மாதந்தோறும் தவறாது. செல்லனின், படையலும், பலியும் தின்று கொழுப்பேறின கட்டாக்காலி நாய்கள் ஆலமரத்தின் அடியில்தான் இளைப்பாறும். "கொட்டார் மாமாவின் 'கொச்சிக்காளை'யை மறைத்தவாறு நிற்கும் அதனில் எப்பவும் எனக்கு சிறு அச்சம். உழைப்பிற்கும், ஈதலுக்கும் பேரெடுத்த மண் இது. இந்த மண்ணுக்குரிய மிடுக்கும் செருக்கும் இதில் வாழும் மக்களிடமும் பிரதிபலித்துக் கொண்டே இருந்தன.

வாப்பா பலமாக இருமுகிறார். மனசு அறுந்து விழ குடிசைக்குள் பாவுகிறேன். "என்ன செய்யிது?" நெஞ்சுக் கூட்டுக்குள் காற்றெழும்பி உப்பிச் சுருங்குகிறது. சிரமப்பட்டு, பிராணத்தை உள்ளிழுத்து அருகே இருந்த மண் சிரட்டையில் ஆந்தினார். தங்கச்சி ஓடிவந்து நெஞ்சை நீவிவிட்டு, நீரைப் பருக்கி விடுகிறாள்.

நெஞ்சு தாளாத துயரத்துடன் மறுபடியும் குடிசைக்கு முன் கிடந்த பலகை 'பெஞ்ச்'சில் வந்தமர்கிறேன். உள் மனசில் அவஸ்தை ஊறத் தொடங்கிற்று. மறுபடியும் சோதயன் மலைச் சாரலுக்குள் புதையுண்டு போகிறேன். அனுபவித்து கைநழுவிப் போன சுகங்களில் தோய்ந்து போவது எத்துணை இன்பம். அந்த 'இரை' மீட்டலில் தான் என்னே பரபரப்பு.

அறுவடைக் காலங்களில் எங்கள் 'கிறவள் வீதிக்கு தனியொரு மவுசு. குன்றும் குழியுமான பொறை வீதி மெருகேறி, களைகட்டத் தொடங்கும். மக்கள் மருத நிலப் பரப்பை நோக்கி சஞ்சரிக்கத் தொடங்குவர். எதிரே 'மூக்கர்கல்' கடை தென்படும். அங்கே ஒரு பிடிபிடித்து இளைப்பாறி போக, பிறகு வருவது எங்களது கடைதான்.

அறுவடைக்காலங்களில் கடைப்பலகை சாத்துவதில்லை. இரவு முழுக்க 'ட்றக்டர்'களும், கரத்தைகளும் சூடடிக்கும் ஆட்களை திணித்துக் கொண்டு ஒன்றன் பின் ஒன்றாய் வந்து முட்டும். மாட்டு வண்டிச் சவாரிதான் கலாதி. வகை வகையான வண்ணக் கரத்தைகள் சிங்காரித்து வரும் காட்சி வலு குஷி. குளிர் காய்வதற்கென வாப்பா தீமூட்டி இருப்பார். வீரத்தணல் தகதகவென உஷ்ணத்தை உமிழும். சூழவும் தத்திக்காரர்கள் வளையமிட்டிருப்பர்.

வாப்பா டீ ஊத்துவார். சாயம் படிந்த பெருவிரலால் மூக்குக் கண்ணாடியை அநாயாசமாய் உயர்த்திவிட்டு அவர் 'டீ' ஆற்றும் பாங்கே தனியழகு. "சோகே"ஸில்

கதகதப்பான முட்டக்கோசும், தேங்காய் ரொட்டியும் வர்ணம் காட்டும். சுருட்டப்பமும், போலையும் எண்ணெய் மணக்க அடுக்கப்பட்டிருக்கும். மேற்தட்டில் 'பேக்கரி அய்ட்டங்கள்' வாப்பாவின் கைப்பட பொங்கிய "கவுண் ரொட்டி"க்கு கரத்தை வட்டாரத்தில் தனி மவுசு. இப்படி புளிய மரத்தடி வியாபாரம் பொங்கிற்று.

எனது குஞ்சான் பருவத்து கூர்முனை மழுங்கின மண்ணது. புணாணை அணைக்கட்டில் தூண்டில் போடுவதும், உச்சவடக்கல், கபுறடியில் நேர்ச்சை திண்ணப் போவதும் இந்தப் பருவம் தான். இந்த சோதயன் மலை தான் – கள்ளன்– பொலிஸ் விளையாட தோதான இடம்.

போராட்டம் உச்சிக்கு நின்ற காலம் இதே மலை தான் முகாந்திரமாகவும், போராளிகளின் உறைவிடமாகவும் மாறிற்று. அதன் மேற் தளத்தில் முகாம்கள் முளைவிடத் தொடங்கின. அதற்கேற்ற வாகாய் அதன் இயல்பும் இருந்தது. இந்த மண்ணின் புதல்வர்களை காத்து நின்ற அரணாகவும், சோதயன் மலை ஆயிற்று. போரின் உக்கிரம் எங்கள் குரல் வளையையும் நசுங்கத் தொடங்கிற்று. வாப்பா இடிந்து போனார். கிராமத்தின் வனப்பும் கம்பீரமும் தீய்ந்து போயிற்று.

போராட்டம் திசை பிசகத் தொடங்கின புதிதில் ஒருவரை ஒருவர் ஐமிச்சமாய் உற்றுப் பார்க்க ஆரம்பித்தோம். கமலத்தையும் ஓர் உளவாளியோ என எண்ணும்படியாயிற்று நிலமை. அவள் பறித்துவரும் காய் கறிகளிலும், பீச்சி எடுத்துவரும் செவத்தாளின் பாலிலும் நஞ்சிருக்குமோ என அஞ்சி நடுங்கினோம். வாப்பா நிரம்பவும் உடைந்து போனார்.

எழில் மிகு கிராமம் சலனத்தின் ஆளுகைக்குள் சிறைப்படலாயிற்று. சனங்கள் ஒடுங்கிச் சிறுத்து வனமேகிக் கொண்டிருந்தனர். கிராமத்தைவிட்டும் அந்நியராயினர். புளிய மரத்தின் அடி வேரில் கறையான் புற்றெழும்பத் தொடங்கிற்று. மேய்ச்சல் தரை முழுக்க அயலகத்து போர் யானைகள் முகம் குப்புறக் கிடந்தன. நுங்கிப் பிரவகித்தோடும் ஆற்றின் ஈரலிப்பை நுகரவிடாது அவை அரணமைத்து நின்றன. திடீரென சூழ்ந்து சனங்களை நசுக்கிக் கொன்றன. சொந்தக் குரலில் கத்தும் 'தவளை'களைக் காட்டும் படி எங்களை நோக்கிப் பிளிறின. பிளிறுகளின் பிடிக்குள் எங்கள் பூவையர் துகிலுரியத் துகிலுரிய துடித்து மாண்டனர்.

இக்கொடுரங்களைக் காணச் சகியாத மலை சீறியெழுந்தது. தன் மடிமீது அயர்ந்து உறங்கிய புதல்வர்களை சுண்டியது. அரக்கர் மீது அடர்ந்தேறும் உரத்தையும் வன்மத்தையும் விதைத்தது. எமது பூவலும் பாசடர்ந்து நீர் கெட்டு, தூர்ந்து போயிற்று. விறகெடுக்கப் போன எனக்கு மூத்தவன் மாட்டு வண்டியில் சடலமாய் திரும்பினான். பின்னாளில் உம்மா வெம்பி வெடித்து உயிர் கருகிப் போனா. வாப்பா புற்றெழும்பின புளிய மரத்தடியில் அமர்ந்து கொண்டு, தனக்குள்ளே பினாத்தத்

தொடங்கிவிட்டார்.

காகங்களை காணும் போதெல்லாம் வாப்பாவின் அந்தக் காலம் கற்பனையில் கோலமிட்டது. 'டைகர்' கிரம உணவின்றி நாக்கை தொங்கப் போட்டவாறு அலைந்து திரிந்தது. அதை யாரும் கவனிக்கவில்லை. கோழிகள் காட்டுக்குள் முட்டையிட்டு, அடைகாத்து குஞ்சுகளுடன் உலா வந்தன. செவத்தாள் பசுவும், இளங் கன்றும் யானை மிதித்து இறந்து கிடப்பதாக செய்தி வந்தது. சென்று பார்க்கவில்லை.

வாப்பாவைப் பார்க்கும் போதெல்லாம் நெஞ்சு கொதிக்கத் தொடங்கிற்று. சுய பிரக்ஞையற்று பிலாக்கணம் பாடத் தொடங்கிவிட்டார். அவர் வசீகரம் குன்றி, சுறுசுறுப்பும் தளர்ந்து போயிற்று. வெறிச் சோடிக் கிடக்கும் வீதியில் நின்றவாறு பெருமூச்செறிவார். கடை பெரும்பாலும் சாத்தப்பட்டே இருந்தது. கொதித்து ஆறின உலைகள் அம்போவென பரணில் மல்லாந்திருந்தன. டீ பட்டறை, காவிபடிந்து உலர்ந்து போயிற்று. அதற்குள் எறும்புகள் குறுக்கும் நெடுக்குமாக பதறித் திரிந்தன.

வாப்பா விறாந்தைக்குள் சுருண்டு உறங்கலானார். குரலை தணித்து பாந்தமாய் உசுப்புகிறேன். கண் மலர்த்தி என்னவென்கிறார்.

"எழும்புங்க போவம், இனிமெ இஞ்ச இருக்கேலா பச்சத் தண்ணியும் இல்லாமெ சாகணும்"

"எங்கடா மகன் போக?"

"இந்த வூரை உட்டு, நகரத்துக்கு போவம்"

"மத்த புள்ளயள் எங்கடா?"

"நேத்தே அனுப்பிட்டன் அகதி முகாமுல இடம் பார்த்து, இருக்கிறாங்க, உங்களையும் கூட்டி வரச் சொல்லி, அடம்பிடிக்கிறாங்க"

கணத்த ஏமாற்றத்துடன் அவர் முகம் சோம்பிப் போயிற்று. அவரை கேட்காமல் உடன் பிறப்புக்களை அனுப்பி இருக்கக் கூடாதோ என மனம் வருந்தியது. கண்களை இடுக்கிக் கொண்டு என்னை உற்றுப்பார்க்கிறார். பின் அழுத்தமாய் ஆனால் நிதானமாய், 'நான் வரமாட்டன்' "இந்த மண்ணைத் தவிர வேற ஒண்டையும் தெரியாதடா மகனே" இதவுட்டுப் போரத விட, இதிலே 'மவுத்தாப்' போறன்டா, என்ற உசிறு வேற மண்ணுல எப்படியடா வாழும், மகன் என்ன கக்கிசாரப்படுத்தாத" பிரமை பிடித்து விக்கித்து நின்றேன்.

வாப்பாவின் பிடி தளர்வதாயில்லை. எனினும் அவர் தளர்ந்து கொண்டு வந்தார். ஜீவன் வற்றிக் கொண்டு வந்தது. நாளடைவில் கண் உக்கிப் போய், விலா ஒடுங்கி பாயோடு பாயானார். ஒரு பிடி கவளத்தையும் கடும் பிராயமெடுத்து ஊட்டவேண்டியதாயிற்று.

என்னுள் ஓர் உள்ளுணர்வு அபாயமாக கூவத் தொடங்கிற்று. இனிமேல் இங்கு தரித்திருப்பது ஆபத்தென அது அலறிக் கொண்டிருந்தது. சுய பிரக்ஞையற்ற வாப்பாவை தோளில் அள்ளி போடுகிறேன். நான் அலைந்து திரிந்து விளையாடிய மண்ணை, என் வீட்டை, படியளந்த கடையை, நிழல் முகிழும் தோட்டத்தை ஏகமாய் பிரியும் போது ஈரல் கருகத் தொடங்கிற்று. தேற்றுவாரற்று விசும்புகிறேன். வாப்பாவின் தேகமும் மவுனமாய் அதிர்வதாக உறைத்தது.

அன்று தூக்கி வந்து இந்த குச்சி வீட்டின் மூலையில் கிடத்திய போது, நினைவு தட்டி அவர் அழுத அழுகை, ஆனந்தித்து விளையாடிக் கொண்டிருக்கும் பொம்மையை தட்டிப் பறித்தவுடன் வீறிட்டழும் சிறு குழந்தையாய் வாப்பாவின் அந்தக் கதறல். வாயருகே கொண்டு போன வடையை அவுக்கென காகம் சொட்டிப் போகயில் விக்கித்து மனம் பதைத்து வானத்தை வெறித்து நிற்கும் சிறுவனாய் நான். என்ன கொடுமை இது. வாப்பாவா இப்படிக் குமுறுகிறார். உம்மாவின் மையத்திலும் அழாதவரா?

"காக்கா இன்டெக்கி ரேஷன், இந்தாங்க பேக்"

தங்கச்சி நீட்டிய 'பேக்'கை வாங்கிக் கொள்கிறேன். குடிசைக்குள் சுருண்டிருக்கும் வாப்பாவில் வாஞ்சையுடன் ஒரு பார்வை. என் புறப்படுதலை மோப்பம் பிடித்து விட்டார்.

"மனெ எங்கடா போறாய்?"

"மலை தெரியுதாண்டு ஒழுப்பம் பார்த்து சொல்லிட்டு போ மகன்"

மறுபடியும் வாப்பாவின் வாய் உனாவல். நான் சிதறி வெடித்து கேவுகிறேன்.

கருகி எரிகிறது நெஞ்சு. வெறி பிடித்தவனாய் கத்துகிறேன்.

"ஓம் வாப்பா தெரியுது நல்லா தெரியுது"

"அந்தா நம்மட ஊரு மலெ தெரியுது வாப்பா."

# இளவரசி

அரண்மனை இன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. சுற்றிலும் வெண்புரவி மீதமர்ந்து கனல் கக்கும் விழிகள் உருட்டி பட்டாளத்தினர் காவல் புரிந்தனர். இராஜ விசுவாசத்தை நிரூபணம் செய்யுமாற் போல் அவர் தம் கூர்விழிகள், சாலையில் வருவோரையும் போவோரையும் உருட்டிக் கொண்டிருந்தன. நகருக்குள் நுழையும் பிரதான வழியாவுமே மூடப்பட்டிருந்தன. வாகனங்கள் குறுஞ்சாலை வழியாக திசைதிருப்பப்பட்டன.

இவ்வொழுங்குகளை கவனிக்கவென ஒரு பட்டாளத்தான் முற்சந்தியில் அமர்த்தப்பட்டிருந்தான். மாளிகை முன்றலில் பசிய கொடிகள் பந்தலிட்டு படரவிடப்பட்டிருந்தன. அழகு நேர்த்தி துருத்திக் கொண்டு தெரியுமாற் போல் செழுமையாக நறுக்கிவிடப்பட்டிருந்தது. செடிகளில் ஒட்டிக் கொண்டு சில்வண்டுகள் ரீல் வைத்தன.

அரண்மனை ஏன் களையெடுக்கிறது என கும்பல் விவாதத்தில் இறங்கியது. குடிமக்கள் எவருக்கும் தகவல் சிக்கவில்லை. அது தான் மேலிட விருப்பமும். ஐந்து பேருக்கு தலைமை தாங்கிக் கொண்டு ஒரு பரட்டைத் தலை ஆசாமி

காரசாரமாக பேசிக்கொண்டிருந்தார். தான் ஒரு அரசியல் சாணக்கியர் என பிறர் மட்டிட வேண்டும் என்பதற்காக, தேஸ விடுதலைக்கு முந்திய அரசாங்கம் பற்றியும், தலைவர்கள் பற்றியும் ஒப்பிட்டு, அக்காலத்தில் நிகழ்ந்த வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த (அவர் கருதக்கூடிய) சம்பவங்களையும் தன் பேச்சின் நடுவே நைச்சியமாக சேர்த்துக் கொண்டார்.

யாரோ ஒருவன் குறுக்கு விசாரணை செய்தான். அவர் சமயோசிதமாக விடையளித்தார். "அப்படியல்ல பாதயாத்திரை"ன்னு பேரு என ஒரு வழுக்கத் தலை சாணக்கியரை திருத்தியது. "இங்கிருந்து நடந்துதான் போயிருப்பாக, இடையில பஸ்ஸில போனாங்க எண்டு சொன்னன்." குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்ட வில்லை என சமாளித்துக் கொண்டார். சாணக்கியர்.

ஆனால் அரண்மனைக்குள் என்னவென்று அனுமானிக்க முடியாத அந்தரத்தில் தவித்துக் கொண்டிருந்தனர் சனங்கள். நாம் தான் இளவரசியை தெரிவு செய்தோம். நமக்குத் தெரியாம என்ன விழா? சாணக்கியர் ஆதங்கச்சாணை பிடித்தார். அவரைச் சூழவிருந்தவர்களின் புத்தியை அது கறகறவெனத் தீட்டி விட்டது. அதிருப்தியாய் பிசுபிசுத்தனர். சந்தியில் நின்ற பட்டாளத்தான் இவர்களின் இரைச்சல் கேட்டு, அருகே நெருங்கினான்.

ஏய் இங்கே நின்று குழப்பம் செய்யாமல் அப்பால் போங்கள் சலசலப்பும், பதைபதைப்பும் ஏறிவிட்டது.

ஐயா எங்கள் மாளிகையில் என்ன நடக்குதுண்டு, நாங்க அறியேலுமா? சாணக்கியர்.

அதெல்லாம் ராஜத்துரோகம், உள்ளிடத்து விவகாரம் உங்களுக்கு எதற்கு? இடத்தை காலி பண்ணுங்கள்.

நாங்கள் தான் இளவரசியை தெரிவு செய்தோம். எங்களுக்கு அறியும் உரிமை இல்லையா?

உரிமை?' இடிஇடியென சிரித்தான் பட்டாளத்தான்.

அவனது இடியோசை கேட்ட சக சிப்பாய்கள் நெற்றிச் சுருக்கம் விழ இவனை நெறுநெறுத்துப் பார்த்தனர். தன்மேல் பாயும் விழிகளின் உக்கிரம் உறைத்தது. பட்டாளத்தானுக்கு. இடைநடுவில் சிரிப்பை நறுக்கிக் கொண்டான். அவ்விதம் இடியென இடித்தது இராணுவ விதிகளை மீறியதென்ற அச்சம் நெஞ்சில் உறைத்தது.

மனசுக்குள் ஓர் அவசம். மிரள மிரள சுற்றிலும் பார்த்துக் கொண்டான் தளபதிகள் யாருமில்லை. இவன் உள்மன அவஸ்தை செருக்கை, ரசிக்கும் மனோ நிலையில் அவர்கள் இல்லை, பட்டாளத்தானின் நகைப்பு இவர்களை வதைவதைத்து வாட்டியது. அத்தனை வதனங்களும் ஜிவ்வெனச் சிவந்தன.

"உரிமைன்னா என்னான்டு தெரியுமா ஓய்?" பட்டாளத்தான் எரிகிற தீக்குள் எண்ணெய் கவிழ்த்தான்.

இளவரசி எது செய்தாலும் எதிர்த்துப் பேசாமல் இருப்பது தான் உரிமை அவனே விடையும் தந்தான்.

இது ஜனநாயக நாடு, பேசுவதற்கும், எழுதுவதற்கும், இளவரசியைப் பற்றி கேட்பதற்கும் உரிமை உண்டு எங்களுக்கு, ஏன் தெரியுமா நாங்கள் இந்த தேஸத்தின் குடிமக்கள்.

ஜனநாயகம்? பட்டாளத்தானின் உதட்டின் கோணத்தில் கேலி துள்ளாடியது. அவனே தொடர்ந்தான்.

ஜனநாயகம் என்றால் நாம் நினைப்பதைத் தான் நீங்களும் நினைக்க வேண்டும். நாமென்றால் பட்டாளத்தினர்........ எம் படைத் தளபதி இளவரசிதான். அவள் பேசுவதை நீங்கள் ஆமோதிக்க வேண்டும். அவள் அறிக்கையை மட்டும்தான் படிக்க வேண்டும். அவள் கூட்டும் கூட்டங்களுக்கு வர வேண்டும். அவளுக்குப் பிடிக்காதவர்கள், உங்களுக்கும் எதிரிகளே. இவைகளை மீறினால் தேஸத்துரோக குற்றம் சுமத்தி சிறையில் தள்ளுவதற்கும் உரிமையுண்டு தெரியும்தானே.

என்ன இதற்குப் பெயர் ஜனநாயகம் இல்லையே! பாஸிசம்.

ஓய் வீண் தர்க்கம் செய்யாதே ஜனநாயகம் என்பதே சர்வாதிகாரம் தான். இதை நீ"திருத்தப் போகிறீரா, வேலையைப் பாரும் போ நீரும் உங்கட உரிமையும் சாணக்கியரும், அபிமானிகளும் முணுமுணுத்துக் கொண்டு திக்கொன்றாய் சிதறிப் போயினர்.

அத்தாணி மண்டபம், இளவரசி சிம்மாசனத்தில் கொலுவிருந்தாள். தோகை ஏந்திய ஆரணங்குகள் பவனமெழுப்பி பரவசமூட்டினர். உயர்பீடத்திறகப்பால் மந்திரிகளும், அமைச்சர்களும், படைக்கலசேவிதர்களும் அமர்ந்திருந்தனர்.

தாமரைப் பொய்கையில் சாமரம் வீசுமெம்
தங்கப்புறா.
ஈசனை விஞ்சுவாள் நீதியின் தேவதை
எமக்கிவள் நேசப்புறா
வாழிய வாழி.

கவிமழை பொழிந்தவராக புயல் புலவர் சபைக்கு வந்தார். அவர் அரசவை ஆஸ்தானப் புலவர். புலவரின் வாழ்த்தை, இளவரசி ஏற்றுக்கொண்டதற்கிணங்க, அடக்கமாய் புன்னகைத்தாள். இன்று இளவரசியின் பிறந்த நாள். தன் மந்திரி

சபைக்கு விருந்தளித்து கவுரவிக்கிறாள். எல்லாருக்கும் விருந்து படைக்கும்படி மடைப்பள்ளித் தலைவரை பணித்தாள். குடியும் கும்மாளமுமாய் அரைநாள் கழிந்தது. கவிஞர் கவிமழை பொழிந்து மகிழ்வித்தார்.

இந்த மகிழ்ச்சிகரமான வினாடியை இளவரசி பற்றிக் கொண்டாள். ஒரு முறை செருமிக்கொண்டு எழுந்து நின்றாள். எதையோ சொல்லப் போகிறாள். அமைச்சர்கள் இருக்கையில் வந்தமர்ந்தனர். இரவரசி பேசத் தொடங்கினாள். என் அன்பிற்கினிய குடிமக்களே! என் பிறந்தநாளை கூடிக் கொண்டாடிய உங்கள் அனைவருக்கும் என் நன்றிகலந்த வந்தனங்கள். கரகோஷம் வானைப் பிளந்தன.

இன்று உங்களுக்கோர் கதை சொல்லப் போகிறேன். சுவாரஸ்யமான கதை. அரசியின் பீடிகை அமைச்சர்களை இருக்கையின் விளிம்பிற்கு இழுத்தது. அரட்டைகளை இடைநடுவே நறுக்கிவிட்டு, கதைகேட்க வாகாய் அமர்ந்து கொண்டனர். அரச புலவர் எழுத்தாணியும் ஓலையுமாய் பரபரத்தார்.

அது ஓர் அடர்ந்த வனாந்தரம், கொடிய மிருகங்களின் உறைவிடம். அவ்வனத்தை சிங்கம் ஆட்சிபுரிந்துவந்தது.

"ஆளும் தகுதி யாருக்குண்டு?"

"உங்களுக்குத் தான் இளவரசி" அமைச்சர்கள் கோஷமிட்டனர்.

"என்னைக் கேட்கவில்லை, வனாந்தரத்தை யார் ஆளவேண்டும் என்று கேட்டேன், உளறாதீர்கள்."

இளவரசி அலுத்துக் கொண்டாலும், உள்ளூர பூரிப்பில் இருந்தாள். இதில் என்ன ஐயம் சிங்கம்தான். ஆம் சிங்கத்தைத் தவிர வேறு எவருக்குத் தான் ஆளும் வல்லமை உண்டு. அவ்வானாந்திரத்தில் சிங்கம் தான் பேரரசன். அது வைத்தது தான் அங்கு சட்டம். பசுக்களின் ஆலோசனை அதற்கு பிடிப்பதில்லை. ராஜாளியும், நரியும்தான் அதன் மந்திரிகள்.

அக்காட்டினுள் குயில்களும் வாழ்ந்தன. எனினும் கூடுகள் இன்றித் தவித்தன. காகங்கள் அதன் குஞ்சுகளை கொத்தித்துரத்தின. குயில்கள் கூவின, அலையெனத் திரண்டன. வனராஜனிடம் பிரலாபித்தன. விடுதலைக்கென யாகம் பண்ணின. "வனராஜனே நாம் உங்கள் ஆளுகையில் தான் வாழ்கிறோம், எனினும் எமக்கு சுதந்திரமில்லை, சொந்தமாய் குடியிருக்க குச்சி வீடில்லை. காகங்களும் எம்மை விரட்டியடிக்கின்றன. எம் குஞ்சுகளை கொத்தி விரட்டுகின்றன. நாம் எதிர்த்துக் கூவினால், குதறியெடுக்கின்றன. நாம் சுயமாய் வாழ்ந்திருக்க உங்கள் வனாந்தரத்தில் ஒரு வழி செய்யுங்கள் எனக் குயில்கள் கெஞ்சின.

இளவரசி கதையை நிறுத்திவிட்டு குவளையில் நீர் மொண்டு அருந்தினாள். அமைச்சர்களும், பிரதானிகளும் குத்திட்டிருந்தனர். அவர்தம் மனங்களில் கிலேசமும், கிளர்ச்சியும் ஊர்ந்தன. ஒற்றைக் குயிலொன்றின் பரிதாபக் கூவல் அடுத்த கட்டம் என்னவாகுமோஎன்ற அந்தரம், ஆவலின் துடிப்பு.

இளவரசியோவெனில் வெகு அலட்சியமாய் சபா மண்டபத்தைத் துழாவினாள். மறுபடியும் செருமிக் கொண்டு எழுந்து நின்றாள். எதில் நிறுத்தினேன்? வனராஜனிடம் குயில்கள் கெஞ்சுகின்றன. உறைவிடம் கேட்டு மன்றாடும் உச்சத்தில் நிறுத்தினீர்கள் இளவரசி என்றார். எதிலும் முந்திக் கொள்ளும் ஒரு முந்திரிக் கொட்டை மந்திரி.

"குயில்கள் கூடமைக்க வனாந்தரத்தில் சிங்கராசன் இடங்கொடுத்ததா?" "அதை நீங்கள் சொல்லவில்லையே இளவரசி!" என்றார் இன்னொரு மந்திரி. அவர் குரலில் மிதமிஞ்சிய ஆர்வமும் துடிப்பும் துளிர்ந்து பிசிறடித்தது. சிங்கம் என்ன சொன்னது தெரியுமா? இளவரசி தொடர்ந்தாள். குயில்களே உங்கள் கோரிக்கை நியாயமானது. உங்கள் நிலை கண்டு பரிதாபப்படுகிறேன். வைகரை புலர்கையில் கானமிசைத்து என் வனாந்தரத்தை துயிலெழுப்பும் உங்கள் தொண்டுக்கு நான் கடமைப்பட்டவன். இனிமையான அவ்வோசை கேட்டு நான் பூரித்து சிலிர்த்துப் போகிறேன். எனினும் காகங்களை பகைத்துக் கொள்ளவும் என் மனம் இசையவில்லை.

காகங்கள்தான் உங்களுக்கு கூடுகட்டத் தகுதியானது நீங்கள் அதன் கூட்டுக்குள் வாழத்தான் தகுதி. சுய கூடு சாத்தியமில்லை. காகங்கள் விரட்டினாலும், உங்கள் குஞ்சுகளை குதறித்துப்பினாலும் அவைகளை அனுசரித்துப் போவது தான் புத்திசாலித்தனம். இதற்காக, நீங்கள் உங்கள் குஞ்சுகளை இழக்க வேண்டியும் வரலாம். உங்கள் இனத்தின் பெறுமதிமிக்க உயிர்கள் கூட கவரப்படலாம். இருந்தாலும் வேறு வழியில்லை என்றது சிங்கம்.

இளவரசி கதையை நிறுத்தினாள். இதன் மிகுதியை பின்பு சொல்கிறேன். எனினும் ஒரு கேள்வி, குயில்களின் விடயத்தில் சிங்கம் நடந்து கொண்டது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? இளவரசியின் இக்கேள்வி புதிதல்ல. கதையை சொல்லிவிட்டு அமைச்சர்களின் விவேகத்தை அளப்பதும், முடிவில் தன் கருத்தைக் கூறி சபாவைக் கலைப்பதும் பழைய உத்திகள். ஆனால் இந்தக் கதைக்கு உடனடியாக அமைச்சர்களால் அபிப்பிராயம் கூற முடியவில்லை. இன்னதென்று உணரமுடியாத மெல்லிய சோக இழை மனசுக்குள்ளோடியது. பேயறைந்தாற்போல் சில முகங்களில் இரத்தம் கன்றிற்று.

இருப்புக் கொள்ளாமல் நெழிவதும், பதறுவதுமாய் பரிதவித்தனர். எனினும் பதில் சொல்லியாக வேண்டும். சொன்னார்கள்.

"சிங்கத்தின் தீர்ப்பு நியாயமில்லை இளவரசி",

"ஆமாம் இளவரசி சிங்கம் குயில்களுக்குஅடைக்கலம் தந்திருக்க வேண்டும்.",

"அதுவும் அதன் குடிகள்தானே",

"அவ்வாறு உரிமை கேட்கும் போது மறுத்தது தர்மமல்ல"

அவரவர் மனதில்பட்ட கருத்தைச் சொன்னார்கள். குயில்களின் மீது பரிவும், பச்சாதாபமும் சுரந்தது. சபாமண்டபம் மவுனத்தில் உழன்றது. இளவரசி தன் கருத்தைக் கூறி சபையை கலைத்து விடுவாள். இது பற்றி என்ன கூறப்போகிறாள் என்ற பரிதவிப்பும் அங்கலாய்ப்பும் சில் மனங்களில் எரிந்து கனன்றன. உங்கள் விவேகத்துக்கும் கருத்துரைக்கும் என் நன்றிகள், நான் சொல்லட்டுமா? சொல்லுங்கள் இளவரசி, நீரினாழத்திலிருந்து புறப்படுமாற் போல் குரல்கள் நசிந்து உயிரறுந்து தெறித்தன.

"சிங்கத்தின் தீர்ப்பு முற்றிலும் சரியானதுதான்."

சபா மண்டபம் அதிர்ச்சியில் உறைந்திருந்தது.

# பேயாட்சி

கடையிலிருந்து பத்து யார் தூரத்தில் வாகனேரிக் குளம் இருந்தது. கச்சான் காற்றுக் காலத்தில் தரை கொள்ளாத அலையடிக்கும். இங்கிருந்து பார்த்தால், அலைகளின் முதுகு மினுக்கம், கண்ணுக்குள் தைக்கும். பொலபொலவென்று விடிந்து கொண்டுவந்தது. நான் கடை வேலைகளை முடித்துவிட்டு, முற்றத்தை பெருக்கினேன். கடையின் உள்வேலை பெரும்பாலும் எனக்குத்தான் லாயக்கு.

வாப்பா 'பொய்ல'ருக்கு கரி போட்டுக் கொண்டிருந்தார். புளியமரத்தடி கடையெனில் அறியாதோர் யாருமிலர். எனது பாட்டன் காலத்து பூர்வீக சொத்து. தலைமுறை தலைமுறையாக வருபவர்கள் ஆளுகைக்குட்பட்டு, கடை சற்று மெறுகேறியிருந்தது. 'பொய்லர்' தளதளவென கொதித்துக் கொண்டிருந்தது. 'தட்டி'யை திறந்து வெளியே வருகிறேன்.

இரவு காட்டிற்குச் சென்றவர்கள், மாடுகளை அவிழ்த்துவிட்டு, புளிய மரத்தின் கீழ் தூங்கிக் கொண்டிருந்தனர். வண்டிலின் முகப்பில் கட்டப்பட்ட மாடுகள், அசைபோட்டவாறு சோம்பிக் கிடந்தன. மாட்டுச் சாணமும், மூத்திரவாடையும், குமைந்துவர வயிற்றைப்பிசைந்தது. அவர்களைக் கடந்து, வேப்பங் குச்சியால் பல் தேய்த்துக் கொண்டே, குளத்தை 'நோக்கி நடந்தேன்.

வழிநெடுக ஆட்டுப்புழுக்கை நிறைந்திருந்தது. காட்டுக் கோழிகள் சாணங்களைக் கிண்டி இரை தேடிவிட்டுப் போயிருந்ததன் அடையாளமாய், சாணம் சீந்திக் கிடந்தது. காட்டுப் பூக்களின் நறுமணம் நாசியை நிறைத்திற்று. குயில்கள் கூவத் தொடங்கின. கொட்டப்பாக்கான் குருவியின் பறை முழக்கம் காடடர்ந்த பகுதிகளில் கர்ணகடூரமாய் ஒலித்தது. மயில்கள் அகவின, வயற்காடுகளில் நீர்

பாய்ச்சுவதற்கென, விவசாயிகள் வரப்புகளில் சறுக்கி நடப்பதும் தெரிந்தது. அவர் தம்வாயிற் சுருட்டின் தீ மினுக்கம், இருளகன்ற வைகரையில் மங்களாய் தினுசித்தது.

குளக்கரையின் புதர்களுக்குள் தலைகள் முளைத்திருந்தன. நானும் ஒரு புதருக்குள் பதுங்கினேன். காடைகள் அரண்டடித்தோடின. சாரத்தை தூக்கிக் கொண்டு, இன்னொரு மடுவுக்குள் நகர்ந்து, குளத்தில் இறங்கினேன். கனுக்காலில் நுரை நுரைத்தது. சில்லென்ற நீருக்குள், சிறு மீன்கள் மிதந்துவந்து, கனுக்கால்களை கொத்திப்பார்த்தன. தூரத்தில் தோணிகளின் தள்ளாட்டம், நீர்க்காகங்களின் மிதப்பூர்வலம், வேப்பங் குச்சியை வீசிவிட்டு, வாய் கொப்பளித்து நிமிர்ந்த போது. குளக்கட்டின் மையத்தில் புழுதிப்படலம் சுழன்றடித்து, உயர்ந்து நின்றது.

பஜிரோக்களும், ட்றக் வண்டிகளும் புயலென வந்து கொண்டிருந்தன. மனம் துணுக்குற்றது. வைகரையில் இத்துனை பரபரப்பாய் வாகனங்கள் வருவதென்றால் ஏதோ அசம்பாவிதம்நடந்திருக்க வேண்டும். அவசரமாய் முகம் அலம்பிவிட்டு, கடைக்கு விரைந்தேன். பட்டிக்கார சாமி ஓடி வந்தான்.

"காக்கா ஒரு விஷயம் தெரியுமா?"

"புனான ஏரியா பொறுப்பாளரா நின்ட 'பொடியன்' ராவுல யாரோ வெட்டிப் போட்டானுகளாம்"

"இப்ப புனானயில ரவுன்டப்பாம்."

என் தேகம் சிலிர்ப்புக் கொண்டது. விறகெடுக்கப் போகும் வண்டிகள் குளக்கட்டில் வரிசையாய் வரும் அழகை ஒரு கணம் பார்த்து நின்றேன். பின்னால் வந்த வண்டிக்காரன் முன்னல் செல்பவனை நோக்கி கூவினான். "மச்சான் சாவல் காக்காட கடையில நிப்பாட்டு தேத்தண்ணி குடிப்பம்" அவன் எதுவும் பேசாமல் அடிகம்பை சுழற்றினான். மாடுகள் அசைந்து விரைந்தன.

வாப்பா தட்டியைத் திறந்து முட்டுக் கொடுத்தார். நான் கடைக்கு முன்னால் வந்தேன். வண்டிக்காரர்கள் பலகை பெஞ்சில் சுவாரஸ்யமாய் இருந்தனர். அவர்களின் ஒரு கையில் பாலப்பமும், மறுகையில் ஆவிபறக்கும் டீ யும் இருந்தன. நான் துர்ச்செய்தி கூறினேன். பீதியின் ரேகைகள் எல்லோர் முகத்திலும் நிழலாடின. அப்ப இன்டக்கி இவடத்தான் கிடக்கனும். இவனுகள் போக விடமாட்டானுகள். ஒருவன் முணுமுணுத்தான்.

புனானை பக்கம் போகவென சைக்கிளை உருட்டினேன். வாப்பா தடுத்துவிட்டார். பேசாமல் புளியமரத்தின் கீழ் அமர்ந்து கொள்கிறேன். டாப்பரின் கடையில் இருந்து மாரிமுத்து ஓடி வந்தான். சகலரும் அவனை மொய்த்துக் கொண்டனர். அவன் புனானைப் பக்கம் இருந்து வருபவனாகையால் செய்தி அறியும் ஆவல் உந்த நானும் எழுந்து நகர்ந்தேன்.

"ரவுன்டப் முடிஞ்சி ஆக்கலெல்லாம் வாராங்க,

"ராவு வெட்டினவன புடிச்சிட்டாங்க",

"அவன் வெட்டங்காட்டிலும் ஏரியா பொறுப்பாளன் என்ன செஞ்சானாம்?" நான் கேட்டேன். கேள்வியில் இருந்த குத்தல் வண்டிக்காரர்களுக்கு நறுக்கென தைத்திருக்க வேண்டும். கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டனர். மாரி சொன்னான்: கவனமெல்லாம் அவன் செய்தியில்தான். "ராவு பதினொரு மணி இருக்குமாம், முகமூடி போட்ட ஆட்களாம், பொடியன் அகமது காக்காட கட பெஞ்சில் படுத்திருக்கான், வந்தவங்க துவக்க எடுத்தானுகளாம், பொடியன் முழிச்சிப் பார்க்க, வாளால் வெட்டிப் போட்டு ஓடிட்டானுகளாம், துவக்குமில்ல."

"ஆள் பொழப்பானா?" நான் கேட்டேன்.

"ஓம், வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போறாங்க" பேசிக் கொண்டிருக்கும் போதே 'பஜிரோக்கள்' முன்னால் வர 'ட்றக்குகள்' பின்னால் வந்தன. வீரர்கள் முகங்களில் வெற்றிப் பெருமிதம் கர்வித்ததை நான் அவதானித்தேன். தேனீர் அருந்திக் கொண்டிருந்தவர்களும், கொலையாளியை தரிசிக்கும் ஆவலில், இடைநடுவே, கோப்பைகளை வைத்துவிட்டு, பரக்க பரக்க வீதிக்கு வந்தனர். நானும் புளிய மரத்தில் சாய்ந்து கொண்டிருந்தேன். 'பஜிரோக்கள்' என்னைக் கடந்ததும் சுவாரஸ்யமானேன்.

திறந்த "ஜீப் வண்டியொன்றில், பிறந்த மேனியாய் ஒருவன் நின்றிருந்தான். உட்கச்சையைத் தவிர, மேலதிக ஆடையேதும் இல்லாமல் அவன் நின்றிருந்தான். அவன் கரங்கள் பின்னால் கட்டப்பட்டிருந்தன. அவனைச் சூழவும் ஆயுதம் ஏந்திய போராளிகள் நின்றிருந்தனர். என்னருகே நின்றிருந்த, மாரி காதுக்குள் கிசுகிசுத்தான். 'இவன் தான் வெட்டினவனாம்.' கடையை நெருங்கியதும், அந்தக் கொலையாளி என்னை நோக்கி சிரிப்பை வீசினான். எனினும் பதிலுக்கு நான் சிரிக்கவில்லை.

கொலையாளியுடன் புன்னகைப்பது, நமக்கும் ஆபத்தாச்சே, நன்றாக அவன் அண்மித்ததும், அந்த சிரிப்பின் அர்த்தத்தை புரிந்து கொண்டேன். உயிரை சுரீரெனச் சுட்டது அந்தச் சிரிப்பு. எனக்குள் ஓராயிம் அதிர்வுகள், என்னைச் சூழவும் நாகங்கள் எழுந்து, ஆக்ரோஷமாய் தீண்டித் தீர்த்தன. தலைதெரிக்க ஓடி அவனை நன்கு உற்றுப்பார்த்தேன். அவனே தான். உறுதியாயிற்று. அதே பளிச்சிடும் சிரிப்பு மறுபடியும், என்னை நோக்கி எகிறிற்று.

இவனா கொலை செய்திருப்பான். காக்கிச் சட்டையைக் கண்டாலே வெலவெலத்துப் போகும் இவனா, துவக்கையும் பறித்து, ஆளையும் வெட்டி....?, எனக்கு ஆத்திரம் முட்டியது. ஆவேசமாய் பார்த்தேன். வாப்பா கடைக்குள் டீ ஆற்றிக் கொண்டிருந்தார். என் நாக்குழறிற்று

"வாப்போய் பெரியம்மாட மகன் அயாத்து காக்காவத்தான் புடிச்சிட்டுப் போறானுகள்."

"என்ட அல்லாஹ், அந்த அப்புராணி எப்படி அம்புட்டானோ?" வாப்பா மார்பிலும், தலையிலுமாய் அடித்துக் கொண்டார்.

காரையடியிலிருந்து மாமா ஓடிவந்தார். தம்பி, அயாத்து மாட்டக் காணலென்டு தேடிவந்திருக்கிறான். "பொடியன் மாரக் கண்டதும், ஆமியென்டு ஓடிருக்கிறான். இவனுகள் அயாத்து தான் வெட்டிப் போட்டு, ஆக்கள காணவும் பயத்துல ஓடுறான் என்டு புடிச்சிட்டு போறாங்க."

கடையை இழுத்து மூடிவிட்டு வாப்பா சைக்கிளில் ஏறினார். நான் பின் 'கரியரில்' தொற்றிக் கொண்டேன். வீதி மருங்கிலும், சனங்கள், அதிர்ச்சியுற்றோராய் உறைந்து நின்றனர். இந்த "பிடியும், விசாரணையும், இதன் முடிவின் அவலமும், அவர் தம் மனக்கிடங்குகளில் மரணத்தையே விதைத்திருந்தன.

சரசரவென இருள் பரவியது. "அவர்களின் தலைமை முகாமான ஆறாம் கட்டயில் இறங்கிய போது, பெரியம்மாவும், ஊர் பிரமுகர்களும் ஏலவே வந்து காத்திருந்தனர். வந்தவர்கள் விடயத்தை விஸ்தாரமாய் கூறினர். பள்ளித் தலைவரும் உறுதிப்படுத்தினார். அதிருப்தியாய் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, கூறினான். "மட்டக்களப்புக்கு விசாரணைக்கி அனுப்பியிருக்கம், நாளக்கிவிட்டுருவம், நீங்க சும்மா அலையாம போங்க. பெரியம்மா தலைவிரி கோலமாய் அழுதுதீர்த்தா. அவனின் அளவுக்கு மீறிய அச்சமும், கூச்ச சுபாவமுமே இன்று ஒரு குற்றவாளியாக்கிவிட்டது.

நாட்கள் நகர்ந்தன. அயாத்து பற்றிய தகவல்கள், பல்வேறு ரூபத்தில் உலவத் தொடங்கின. பெரியம்மா அவள் ஒரு இரக்கமான தாய், தன் மூத்த மகனை இழந்து விட்ட பரிதாபத்துக்குரியள். ஒவ்வொரு முகாமாய், தன்னந் தனியாக ஏறி இறங்கினாள். கண்ணீர் வற்றி, வறண்டழுதாள், வனாந்திரத்தின் எல்லை முகாம்களிலும் தன் மகனின் கனிந்த முகம் காண அலைந்து திரிந்தாள். வெயிலோடு கருகினாள். புழுதியும், வியர்வையும் குடித்து அவள் அகோரமாய் வேஷம் மாறிப்போனாள். இறுதியாக அவளுக்கு இது தான் கிடைத்தது.

"வேற இடத்துக்கு அனுப்பிட்டம், உங்கட ஏரியா பொறுப்பாளரை புடிச்சி கேளுங்க, அவருகிட்ட லிஸ்ட் இருக்கும். எனது கிராமத்தின் எல்லையில் இருந்தது அவன் அலுவலகம்,

"புகாரி இவர் தான்" மாமா சுட்டினார்.

அந்தப் பெயருக்குறியவன், ஒடிசலாய் இருந்தான். அவன் முகம் கோணித் தெரிந்தது. "மெஷின் கண்ணை" துடைத்துக் கொண்டு, விறைப்பு மாறாமல்

என்ன வென்றான்.

"தம்பி உன்ட காலப் புடிக்கன் என்ட மகன வுட்ரு ராசா" பெரியம்மா, தரையில் விழுந்து அரற்றத் தொடங்கினா. அவன் பின்னாள் நழுவினான். கடூர முகத்தில் வெறி தாண்டவமாடியது. இஞ்ச பாருங்க இது ஒபிஸ், இஞ்ச வந்து ஒப்பாரி வைக்க வானம். நாளக்கி ஏ.எஸ்.பி வருவாரு, வந்து பாருங்க, அவிந்த மனசுடன் வெளியேறினோம்.

மாதங்கள் கடந்துவிட்டன. அயாத்தின் விசாரணைகள் இன்னும் முடியவில்லை. மீதமிருந்த நம்பிக்கைகளும் தீய்ந்து போயிற்று. நம்பிக்கையின் கீற்றுக்கள் கருகி, வாழ்வு குறித்து, ஏங்கித் தவித்த ஒரு பொன்னந்தி நேரம். ஓர் அலுவல் நிமித்தம் புனானை அனைக்கட்டுக்குச் சென்றிருந்தேன். மதகு திறந்திருந்தது, குபுகுபுவென நீர்ப்பிரவாகமெடுத்தோடியது. மீன் கவ்விக்கொள்ள சோம்பிப் போயிருக்கும் வெள்ளை நாரைகள் கற்களின் மேல் குவியலாய் தெரிந்தன. செல்லன் ஒரு கல்லில் குந்தி தூண்டில் போட்டுக் கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் தூண்டிலை கரையில் கிடத்திவிட்டு ஓடி வந்தான்.

"தம்பி உன்ட பெரியம்மாட மகன் கிடச்சிட்டானோ"

"இல்லை" என்றேன்.

"அவன் இனி வரமாட்டான், உங்கட கடமயச் செய்ங்க"

"ஏணண்னை அப்படிச் சொல்றீங்க"

"தம்பி நேத்து ராவு இந்த அணையில வல போட வந்தனான்."

"ஒரு ரெண்டு மணி இருக்கும்டா தம்பி, அக்கரயில ஒரே கத்துர சத்தம் கேட்டிச்சி."

"நல்லா கிட்டப் போய் கேட்டனான் தம்பி"

"என்ட அல்லாஹ் என்னவுடுங்க நான் செய்யல்ல, எனக்குத் தெரியாது"

"இப்படித்தான் மாறிமாறி கத்தினான். அது அயாத்துர குரல் தான்"

"அண்டெக்கி நானும் அவனும் தான் மாடு தேடி வந்தம்."

"அவன்ட பயம் இப்ப சாவக் கொடுத்திட்டு தம்பி"

"அதெப்படிடா என்ட வாயால சொல்ற, பொறகு கொஞ்ச நேரத்தால ட்றக்கை கொண்டுவந்து இங்க தான் கழுவினாங்க. ஒரே ரெத்தக் காடுடா தம்பி, ரெத்தக் காடு."

எனக்கு இதயம் கழன்று, அதை பருந்துகள் கூடி, பிய்த்து பிய்த்து, பறப்பதான வலி மரணத்தின் தரிசனம் எப்படியெல்லாம் வந்துவிடுகிறது. இந்த பெரியம்மா, இந்த உலகத்தை இன்னும் புரிந்து கொல்லவில்லை. மகன் வருவான் என்ற நப்பாசையில், மூன்று வருஷமாகியும் இன்னும் வாசலில்தான் நிற்கிறா.

# விருட்ஷம்

நீண்ட நாட்களுக்குப் பின் அவனை நான் சந்திக்க நேர்ந்தது. தீவிர அரசியலில் அவன் தன்னை தொலைந்திருந்த இடைக்காலத்தில், அவனுடனான இறுக்கம் தளரத் தொடங்கியிருந்தது. ஆத்மார்த்தமாக பேசவோ, குசலம் விசாரித்து கைகுலுக்கிக் கொள்ளவோ, காலாற கைகோர்த்து திரியவோ இயலாமல் போயிற்று. பின்னாலில்.

சுழிக்காற்றாய் எங்கேயாயினும் ஒரு திருப்பத்தில் இடைக்கிடை அவன் என்னை சந்திப்பான். நின்று நிதானித்து அளவளாவ முடியாத பரபரப்பு, உதட்டின் கோணத்தில் வழியும் புன்னகை உலருமுன்னே, என்னைக் கடந்து விட்டிருப்பான். அந்த பதற்றமான நிமிஷங்களிலும் என்னிடம் பேசுவதற்கென்று அவனிடம் விஷயம் இருக்கும், பேசவும் செய்வான். பொதுவாகவும், இயல்பாகவும் பேசிக் கொள்வான்.

"ஹலோ மச்சான் எப்படியடா இரிக்காய், கண்டுகனகாலமல்லோ, உனக்கென்னடா செல்லப்பிள்ளை, உன்ற லவ்வர் சுஹாவின்ற பாடென்ன, இழுத்தடிக்காம தாலியக் கட்டிப் போடு, நாங்க கொடுத்து வக்கல, அப்ப நான் வாரன் மச்சான் ஒரு அவசர அலுவல், நம்மட கூட்டாளிமார விசாரிச்சனென்டு சொல்லு என்ன" ஒரு வார்த்தையேனும் நான் பேசுவதற்கு அவகாசம் இருக்காது.

அவனுடன் சம்பாஷிக்க முனையும் ஒவ்வொரு தருணமும் அவனே முந்திக் கொண்டு, மூச்சு விடாமல் பொரிந்து தள்ளுவான். எந்த மூலையில் சிக்கிக் கொண்டாலும் இப்படித்தான் தமாசாகப் பேசுவான். எனினும் அவனைப் பற்றி எனக்கு நன்கு தெரியும், புதையுண்டு போன அவன் கனவுகளின் சௌந்தர்யம் குறித்தும் அறிவேன்.

என்னுடன் குலாவும் போதெல்லாம், அவனை உற்று நோக்குவேன். நெஞ்சுக்குள் ஏக்கங்கள் மண்டிக் கிடக்கும். வாழ்வின் இனிமையை தரிசிக்க விழையும் ஆவலும், வேட்கையும், விழிகளில் தெறிக்கும். மீளவும் இந்த சொர்க்கத்தில் தாவும் துடிப்பும், திணவும் கொண்டோனாய், அண்மைக் காலமாய் அவன் மாறத்துடிப்பதும், எனக்குத் தெரியும்.

பால்யத்தில் அவனுக்கும் எனக்கும் திரை இல்லாத வாழ்க்கை அமைந்தது. பரந்த வெளியாய் எம்மிருவர்மனங்களும் பளீரிடும் பேரழகாய் ஒருமித்தன. குளத்தோர பனிச்ச மர நிழலில் உட்கார்ந்து பேசுவோம். பேசுவதற்கென்று இருவருக்கும் அனேக விஷயமிருந்தது. விவாதிப்பதற்கென்று தினம் ஒரு தலைப்புக் கிடைத்தது. முடிவில் நிதானமாய் யோசித்துப் பார்த்தால் அவன் 'சுலோவும்' என் 'சுஹாவும்' எங்கள் நேரங்களை அமோகமாய் தின்றிருப்பார்கள்.

இன்று அவனை சந்தித்தேன். ஆளே மாறிவிட்டிருந்தான். வாழ்வு குறித்து தெளிவான தீர்மானத்துடன் என்னுடன் பேசினான். நன்றாக இளைத்து, மெலிந்து கருத்திருந்தான். தோளைத் தொடும் முடியும், அடர்ந்த தாடியுமாய் அவனை நிமிர்ந்து பார்க்கையில் மனசுக்குள் ஈரம் சுட்டது. குறுகுறுத்த அவன் விழிகளை ஏறிடச் சிரித்தான். தீட்சண்யமான காந்தர்வம் மட்டும் விழிகளில் ஊசலாடியது.

அவன் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டேன். பேச நா எழவில்லை. திகைப்பும் அதிர்ச்சியும் ஒருசேர ஒரு கணம் உறைந்திருந்தேன். "டேய் மகேஷ் யாருக்காக இப்படி கஷ்றப்பர்றாய்" அடக்க முடியாமல் கேட்டுவிட்டேன். முடியை பின்நோக்கி ஒதுக்கிவிட்டு, தீர்மானமாய் என்னை நிமிர்ந்து பார்த்துக் கூறினான்.

"என் மக்களுக்காக மச்சான், அவங்க சுதந்திரமா வாழனும்",

"அடக்குமுறை இல்லாத சுயவாழ்க்கைய அவங்க அனுபவிக்கனும்",

"ஆனா மாற்றுக் கருத்துக்கள மதிக்காத எங்களின்ற தலைமைத்துவம் பற்றித் தான் கவலையா இருக்கு மச்சான்."

"என்னடா மகேஷ் ஒன்டும் விளங்கலியே" என்றேன்.

"இதெல்லாம் உனக்குப் புரியாது மச்சான். போராட்டத்தின்ற சுவைய, வார்த்தைக்குள்ள, வாக்கியத்துக்குள்ள அடையவச்சி விளங்கப்படுத்தேலா."

"நம்மட எதிரியா இருந்தாலும், மாற்றுக் கருத்துக்களை மதிக்கவேணும்"

"இல்லெண்டா போரார்றதுல புண்ணியமில்ல",

"சிங்கள இனவாதிகள் தமிழரான எங்கள பெரும்பாலும் நசுக்கி அடக்குறதப் போல, எங்கட ஆட்கள், சகோதர இயக்கத்தையோ, மற்ற மதத்தவரான அப்பாவிகளையோ அடக்கினா இதுல என்ன அர்த்தம். காட்டுமிராண்டியில்லயா, போரார்றதுல, அர்த்தமில்ல மச்சான்"

"நல்லா யோசித்துப் பாரு உனக்கு விளங்குமெண்டு நெனக்கன்"

"என்ற வீட்டுப் பக்கம் போனா, அக்காவ, அம்மாவ கேட்டன் என்டு சொல்லு",

"அப்ப நான் போயிட்டு வாரன்." என்கரங்களைப் பிடித்துக் கொண்டான். விரல்கள் நடுங்குவதை உணர்ந்தேன்.

அவன் சென்ற பின்பும் சில கணங்கள் அவ்விடத்திலேயே உறைந்திருந்தேன். ஒரு கனவு போல அவன் உறவு என்னளவில் ஆகிவிட்டது. நெஞ்சில் சரக்கென்று நினைவுகள் அவனுடன் ஒட்டிக் கொண்டு, பின்னால் ஓடின. அவனுடனான, வஸந்த நாட்கள், மேலெழுந்து எகிறி, மனசின் நுனியில் துடித்து விழுந்தன.

வாகநேரிக் குளம் அலைகளால் நிரம்பி கரை நெடுக நுரைகக்கியிருந்தது. விடியற் காலையில் தோணிகளோட்டிச் சென்றவர்கள் கரை நோக்கி மீண்டு கொண்டிருந்தனர். நனையாவெரட்டிகள் கரையொதுங்கி, கருகிக்கிடந்தன, ஆக்காண்டி முட்டை தேடி கற்குவியலின் உள்ளே கைகளை நுழைப்பதும், எடுப்பதுமாய் அலைந்து கொண்டிருந்தான் மகேஷ். குளத்துக் கட்டு நெடுகவும் ஓங்கி வளர்ந்திருந்த பனைகளில் ஏறி 'நொங்கு' இறக்கிக் கொண்டிருந்தேன்.

முட்டைகள் அகப்படாத முசுறுக் கோபத்தில் அவன் என்னருகே வந்தான். நொங்கை குடித்துவிட்டு, 'கொக்கடிக்கப் போவோமா என்பான். புனானை அணைக்கட்டைத் தாண்டி, சோதயன் கல்லில் தங்க வரும் வெள்ளை நாரைக் கூட்டம்.

வன்னியனாரின் மாந்தோப்பை கடந்து செல்கையில் ஓர் ஆலமரம் தென்படும். அகன்ற இலைகளடர்ந்து பயங்கரமாய் சடை விரித்து நிற்கும், தலை கீழாய் தொங்கும் வௌவால்கள் பீதியை அதிகரிக்கும் மத்தியானத்தில் தனிவழிப் பயணம் அதுவும் இந்த ஆலமரத்தால் போகப்படாதென்ற எச்சரிக்கை பொதுவாக ஊரிலிருந்தது.

"டேய் வேற வழியால போவம் இதுல பைரவன் இருக்காம். என்றேன். பைரவன் என்னடா பைரவன் இன்டக்கி ஒரு கைபாப்பம். வாவென் ஆலமரத்தால தான் போவம், எனக்கு நெஞ்சுக்குள் திக்கென்று பயம் கவ்விக் கொள்ளும். நிறை வெய்யில் வேறு கொழுத்திக் கொண்டிருக்கிறது. பின்னால் திரும்பிப் பார்க்கிறேன். கொட்டார் மாமாவின் தோட்டத்தையும்தாண்டி பளீரிடும். அலைகளின் மினுக்கம் கண்ணில் தைத்தது. மகேஷுடன் உரசினாற் போல், அச்சத்தை மறந்தவனாக சென்றேன்.

ஆலமரத்தைக் அண்டுகையில் 'தடா'லென்றது. அவ்வளவு தான் வரம்புகளில் விழுந்தடித்துக் கொண்டு ஓடினேன். சற்று நிதானித்து திரும்பிப் பார்க்கிறேன். அவன் நின்ற இடத்திலே நின்று கொண்டு, முழங்காலில் அடித்து சிரித்துக்

கொண்டிருக்கிறான். "டேய் பயந்தாங் கொள்ளி" அது குரங்கு பாஞ்சி போவுது, வாடா பயப்படாம, அசடு வழிய அவனுடன் இணைந்து சென்றேன். கொக்கடித்து, சமைத்துத் தின்று விட்டு, சில சமயம் என் வீட்டிலேயே படுக்கை வைத்துக் கொள்வான்.

சின்ன வயதிலிருந்தே, அவன் தைரியனாய் வளர்ந்து விட்டிருந்தான். எதற்கெடுத்தாலும், அடி முதல் நுனி வரை துளாவி ஏனென்று கேள்வி கேட்கும் சுபாவம் அவனுக்கு. 'அரப்படிச்சவன்' என்று பெரியோர்களால் அவன் ரகஸ்யமாய் அழைக்கப்பட்டு வந்தான். சில நேரங்களில் 'சேர்குட்' பங்களாவின் உச்சியில் நின்று பேசிக் கொள்வோம்.

"ரமீஸ் ஒரு நாளக்கிண்டாலும், நான் இயக்கத்துக்குப் போவன்",

"ஒரு எதிரியென்டாலும் என்கையால சாகணும்" அதி விரக்தி மேலிட பொறுமுவான்.

"டேய் ஏன்டா இப்படி கதைக்கிறாய்?"

"இல்லடா ரமீஸ் இன்டக்கி ஒருத்தன் அக்காவின்ற கையைப் புடிச்சி இழுத்தான்",

"அப்பாவையும் அறைஞ்சி போட்டான்".

"இதற்குப் பொறகு வாழுற அப்பாக்கள், அக்காக்கள் சந்தோஷமா இருக்கனும்டா"

"அதற்காக ஏன் நாம உதிர்ந்து போகக் கூடாது., மெழுகுவர்த்தி போல வெளிச்சம் கொடுக்கக் கூடாது".

நினைவுகள் தறிகழன்று அறுந்தன. தலையைச் சிலுப்பிக் கொண்டேன். அன்றைய அவன் கனவை செயல்படுத்திவிட்டான். என்பதை நினைக்கும் போது, அவனைப் பற்றிய நினைவுகள் மிக உயர்ந்ததாய் எனக்குள் மலர்ந்தன. எரிமலையின் கொதிப்பினூடே, புறப்பட்ட அவனின் கால்களின் திண்மையும் நெஞ்சுறுதியும் மனசுக்குள் அவன் பற்றிய ஆழமான காதலை முளைப்பித்தன. அவனைச் சந்தித்த இரண்டொரு தினங்களில் அவன் வீடேகியிருந்தேன். அவன் அக்காவின் பிள்ளைகள் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தன.

'அக்கா' எனக் குரல் கொடுத்தேன்.

"ஆரது தம்பி ரமீஸா வாங்கே, இப்பவாச்சும் வழி தெரிஞ்சிட்டோ?" நான் போகும் தருணம் எல்லாம் குறும்புடன் வரவேற்கும் பவளம் அக்கா

"எங்கேயக்கா நேரம், சோளி கூடிப்பெய்ட்டு"

மகேஷின் அப்பா விறாந்தையுள் சாக்குக் கட்டிலில் சுருண்டிருந்தார். மகேஷைப் பற்றித்தான் அதிகமாய் பினாத்துகிறார் என்றாள் பவளம் அக்கா. திடீரென, கடவுளே மகன் மகேஷ் வந்துட்டியா வா, வாடா, என இரவுகாலங்களில்

அரற்றுவதாகவும் சொன்னாள். அவனும் வந்து ஒருக்கா பார்த்துட்டு போனான். அண்டைக்கெல்லாம் சந்தோஷமாக இருந்தார். பொறகு பழைய நெலக்கி திருப்பிட்டார். ஒரே படுக்க,

முந்தநாள் மகேஷைக் கண்டு அளவளாவியதைக் கூறினேன். அத்தனை முகங்களிலும் பிரகாசம் மின்னி, பின் மழை மேகமாய் சோகத்தில் கூம்பிப் போயின. "என்ன செய்யிற ராசா" உள்ளதே ஒரு ஆம்புளப்புள்ள, அவன்ட தலைவிதி இப்படி போய்ட்டு, எந்த காட்டுல எப்படி அலையுறானோ, சாப்பாடு கிடைக்கிறதோ, நினைக்க நினைக்க என்ர பெத்தமனம் எரியுது.

இஞ்ச தம்பி மறுகா இவனைக் கண்டா அம்மா ஒருக்கா வரச்சொன்னான்டு சொல்லன்" அவன் மகேஷும், நீயும் ஒன்டாத்தானே சுத்தினீங்க, ஒன்னப் பார்க்குறப்போ ஒரு நிம்மதியா இருக்கு. அடிக்கடி இந்தப்பக்கம் வா ராசா தெம்பா இருக்கும். அவன் அம்மாவின் ஒப்பாரி நெஞ்சுக்குள் நீட்டிநிமிர்ந்து உட்கார்ந்து கொண்டது. அரிவாள் கொண்டு நெஞ்சை அறுப்பதான வலி. காயத்தின் மேல் எரிதூளை தூவியதான கனல்வு, கனத்த மனத்துடன் விடை பெற்றேன்.

பின் வந்த நாட்களில் அவன் பற்றிய ஞாபகக் கோடுகள் மங்கிப் போயிற்று. வாழ்க்கை சாலையில் சில நிகழ்வுகள் தூர்ந்து போவது போலன்றி, ஒரு தற்காலிக மறதியாக அவனின் ஞாபகங்களும் கரையொதுங்கி இருந்தன. ஏதாகினும் ஒரு நிகழ்வில், இடறிக் கொண்டு நழுவிவிடுவான்.

சூரியன் சரிந்த ஒரு மாலை நேரம், 'வம்மியடி சந்தி நோக்கி சைக்கிளை உழத்திக்கொண்டு போனேன். "வம்மியடி ஆலமரத்தைச் சூழவும் சனங்கள் குழுமி நின்றிருந்தனர். முண்டியடுத்து எதையோ ஆவலாய், திகிலுடன் கூடிய பரபரப்புடன் வாசித்துக் கொண்டிருந்தனர். அது முக்கியமான ஓர் விடயம் எனப்பட்டது. சைக்கிளை ஓரமாய் நிறுத்திவிட்டு நானும் வாசிக்க நுழைந்தேன். சனத்தை விலத்திக் கொண்டு, மரத்தினடியில் நிமிர்ந்து பார்த்தேன். மண்டையோட்டில் பல்லாயிரம் மாடுகள் ஏறி மிதித்தன. மகேஷ் புன்னகைத்தவனாய் துப்பாக்கியுடன் நிற்க, அஞ்சலிக் கவிதையும் கீழே தடிப்பாய் தெரிந்தது. சாக்குக் கட்டிலில் படுத்துக் கிடக்கும் அப்பா, முகம் காணத்துடிக்கும் அம்மா, பாசத்தை கொட்டித் துடிக்கும் அக்கா, ஒற்றைக் குயிலான நான். எல்லாமே குழம்பிக் கொண்டு முடிச்சுகள் விழுந்தன.

"மாற்றுக் கருத்துக்களை மதிக்க வேண்டும் மச்சான்" சகல துயரங்களையும் மீறி, மகேசின் குரல் நெஞ்சில் உதைத்தது. மறுபடியும் போஸ்டரை, நிமிர்ந்து பார்க்கிறேன். மகேஷ் மெல்ல மெல்ல எனக்குள் கரைந்து கொண்டிருந்தான்.

# வேப்பமரம்

கொஞ்ச நாட்களாக மனசுக்குள் ஒரே அரிப்பு. ராவெல்லாம் நித்திரையும் வாரதில்லை. அவளப் பத்திதான் சதா நெனப்பெல்லாம். பாயில சுருண்டு கிடக்கிறன். நுளம்பு வந்து காதுக்குள்ள தொண தொணக்குது. ராவெல்லாம் மூட்டைக் கடி. இப்ப நடுச்சாமம் மூணுமணி இருக்கும் போல. முன்பென்றால் அவள் கைவிளக்க எடுத்து வந்து என்ட பக்கத்துல குந்தி நுளம்ப விரட்டுவாள். காலுக்குள்ள சிக்குப்பட்டு நழுவிக்கிக்கிடக்குற துப்பட்டிய எடுத்து, கழுத்து வர மூடுவாள். மூட்டைப் பூச்சிய தேடித் தேடி நசுக்கிப் போடுவாள்.'

என்ட தலகாணிய நேராவச்சி, அடர்த்தியான தலை முடிய அவள்ர விரலால கோதிக்கோதி நித்திரையாக்குவாள். அவள் எத்தின மணிக்கு தூங்குவாள்னு எனக்கு தெரியாது. குப்பிலாம்புடன் அவள் எனக்கிக்கிட்ட நடந்து வந்தா எனக்கு 'நைட்டிங் கேள்'ற நினைப்புத்தான் வரும். சனியன் புடிச்ச நித்திரை வருகுதும் இல்ல. மோட்டுல எலிகள் கீச்கீச்சின்னு ஓடித் திரியுது.

புழக்கடப் பக்கம் பூன மறியேறுது போல. சின்னப் புள்ளயல் கத்துர மாதிரி இந்த பூனட கரச்சல் பயமாகவும் இரிக்கி. ஜன்னலுக்குள்ளால மாமரம் அசையுது. எல்லா இலயிலும் அவள் அசைகிற மாதிரி, பூவெல்லாம் அவளப் போலவும், மாவடுக்கலெல்லாம் அவள்ர சாயல் மாதிரியும், ஒரே பிம்மமாய் நெளிகிறாள்.

பக்குள் எங்கட கிணத்தடிய கேவிக் கேவி கத்துது. யாரு மவுத்தோ அவள் இருந்தா பக்குல கத்தவிடாம, உப்புக்கல்ல அடுப்புக்குள்ள போட்டு, அது டப்டப் என வெடிக்கும் சத்தத்துல அவளும் 'ச் சூய்' எனத் துரத்துவாள். எழும்பி துரத்தனும் போல இருக்கு. இப்படி எத்தின நாளக்கி தனியா படுக்குற. கனவெல்லாம் அவள் தான்.

கிணத்தடி கட்டுல அவள் என்ட களிசன் சேர்ட்டு, கழுவுற மாதிரியும், முதுகுக்கு ஊத்த தேச்சி குளிக்க வாத்துர்றதப் போலவும், மாறி மாறி காட்சி வருகுது. சரியான பசியா இருக்கு, எழும்பி குசினுக்குள்ள போனன். நேத்துப் பின்னேரம் கொணர்ந்த பாண் காஞ்சி போயிட்டு, பானைக்குள்ள ஒரு சொட்டுத் தண்ணியும் இல்ல.

வெளியே போகவும் பயமா இரிக்கி. அவள் இருந்தா, மூத்திரம் பேய எழுப்பி கூட்டிட்டு போவாள். இப்ப, கனவுல மூத்திரம் பெய்து, விடிஞ்சி நான் தான் கழுவனும், வயித்தக் குமட்டும். பாவம் அவளும் என்ட மூத்திர களிசன கழுவக்குள்ள இப்படித்தான் அவதியா கழுவி இருப்பாள். எனக்கு அழுக வரப்பாக்குது. சங்கத்துல வாச்சர் நாலு மணிக்கு 'பெல்' அடிக்கிறது கேட்குது. புரண்டு படுத்தன். சுபஹுக்கு பாங்கு கேட்டா பேயெல்லாம் காட்டுக்குள்ள ஓடுமாம் என்ர கூட்டாளிதான் சொன்னான். இன்னும் கொஞ்சத்தால பாங்கு கேட்கும். வெளியே போய் தண்ணி அள்ளனும், ஒண்டுக்கும் முடுக்குது. வெடிக்கப் போற மாதிரியும் இருக்கு. காலை யாரே நக்குரதப் போல வழவழப்பா இருக்கு. வெடுக்கென இழுத்துக் கொண்டன். தலை மாட்டில இருக்கிற 'லாம்ப்' எடுத்துப் பார்த்தன். என்ட செல்லப் பூனைதான்.

அதுக்கும் பசி போல பாணைக் குடுத்தாலும் திண்ணாது. விடியட்டும் ஆராவது மீன் அறுப்பாங்க. தலய கேட்டு இதுக்கு குடுக்கனும். எங்கட வளவு மூளைக்குள்ள ஒரு வேப்ப மரம் நிக்குது. அதுல வைரவன் இருக்குதாம். அதுக்கு வெள்ளிக்கிழமை ராவயில, சுருட்டு வாங்கி வைப்பாள். அது தான் கள்ளன் வராம வூட்டப் பாதுகாக்குதாம். வெளியாக்கள் யாரும் வந்தா வைரவன் அச்சம் காட்டுமாம். அவள் சுருட்ட வேப்ப மரத்துல வச்சிட்டு வருவாள்.

நான் தள்ளி நிற்பன். பயந்தாங்கொள்ளி, "சுருட்டு கொழுத்த நெருப்புப் பொட்டி வக்கல்லயா?" நான் கேட்பன். கன்னத்துல, பள்ளம் இறங்க, வசீகரமா சிரிப்பாள். என்னை அள்ளி முகம் முசிய மூக்கால் உரசுவாள். "என்ட சின்னக் கண்ணா அது வைரவன் பத்தவைக்கும். அதுர கண்ணுல நெருப்பு இருக்குதாம். எனக்கு உடம்பெல்லாம் வெடவெடக்கும். புறாக்குஞ்சப் போல அவள்ர புடவைக்குள்ள சுருண்டு கொள்வன். ஆறு மணியானா வேப்பமரத்த பார்க்கவே மாட்டன். விடியப் போய் பார்த்தா சுருட்டு இருக்காது.

சுபஹுக்கு பாங்கு கேட்டு மிச்சம் நேரம் போல. கதவு இடுக்குக்குள்ளால அந்த வேப்பம் மரம் அசையுது. நான் வெளியெ வந்தன். புழக்கட பக்கமா ஒடிப்போய்ட்டுத்தான் மத்த வேல. கோப்பயில தண்ணி எடுத்து, பாணை பச்சத் தண்ணியில தொட்டுக்கிட்டன். தொண்டைக்குள் இறுகியது. பச்சத் தண்ணியில பாணைத் திண்டா என்ன செய்யும். குமட்டியது பசி வேறு. திண்ணுரதுக்கு வேற ஒன்டும் இல்ல.

அவள்ர புடவையெல்லாம் இன்டெய்க்கி நல்லா மடிச்சி வக்கனும். அவள்ர புத்தகம், பழைய பேப்பரெல்லாம் வித்தாலும் சோறு வாங்கித் தின்னலாம். குசினுக்குள்ள கீச், கீச் சென்று ஒரே அலறல். எழும்பிப் போய் பாத்தன். பரணுக்கு மேல எலியப் புடிச்சி பூனை தின்னுகிட்டு நின்றது. என்ட அரவம் கேட்டு, அத வாயால

கவ்விக்கிட்டு ஓடுது. 'சீ' நன்றி கெட்ட பூனை, உன்ட செத்த எலி எனக்கு வாணா, பறிக்கமாட்டன் ஓடாத.

தகரப் பெட்டிக்குள்ள அவள்ர புடவையெல்லாம் அசிங்கமா குலஞ்சிகிடக்கு. அண்டெக்கி சாச்சி வந்து ரெண்டு புடவய கொண்டு பெய்த்தா. என்ற உசிரே போற மாதிரி. இவ இப்பிடித்தான் உம்மாட சாமனெல்லாம் கொண்டு பெய்த்தா கள்ளி. இனி யாருக்கும் ஒரு துண்டுத் துணியும் குடுக்கப்படாது. தகரப் பெட்டிர திறப்ப, தலவாணிக்குள்ள ஒளிச்சி வக்கனும். இனி திறக்கக் கூடாது.

ஆறுமணிக்கு நான் பல்லு தீட்டி, முகம் கழுவனும் இல்லாட்டி அவளுக்கு கோவம் வரும். 'பிரஷ்சில' மருந்து பீச்சித் தருவாள். மணக்கட்டி சவுக்காரமும் தந்து கிணத்தடிய கூட்டிட்டுப் போய் நல்லா முகத்த தேக்கச் சொல்லி, குறச்சிக்குள்ள தண்ணிய அள்ளி ஊத்துவாள். இப்ப என்னடான்னா, பல்லுத் தீட்ட பற்பொடி கூட இல்லெ. தேங்கா தும்ப எடுத்து பல்ல தேச்சன். என்ட மூத்த வாப்பா தேய்ப்பதப் போல கொடுப்புக்குள்ள போட்டு தேச்சி, முகம் கழுவி, பழைய சாரத்துல முகத்தையும் கையையும் துடக்கிறன். எனக்கென்டு பூத்துவாய் இருந்தது இப்ப. அதுல தான் பூனை குட்டி போட்டிருக்கு.

வாசல்ல ஒரே இலைகள். கூட்டுமாத்தையும் காணல்ல. வேப்பமரத்துல சாத்தியிருக்கும் இப்ப அதுக்குகிட்ட போக எனக்கு சரியான பயம். வைரவனுக்கு சுருட்டு வக்கல என்ட பயமில்ல. இது வேற பயம். அதில வைரவனே இல்லென்டு அண்டெக்கி தெரிஞ்சி போச்சி, ஈக்கிலால இலைகளை குத்தி எடுத்து வெட்ட வளவுக்குள்ள போட்டன். தலையெல்லாம் மாம்பூ, தட்டிப் போட்டு, வூட்டுக்குள்ள வந்தன். நேத்தும் ஒருத்தரும் சோறு தரல்ல. பசி தலையை சுத்துது. வகுத்துக்குள்ள புழு நெழியிரதப் போலவும், கோழி சீப்பதைப் போலவும் இருக்குது.

முன்பென்டா விடிய எழும்பினா பசுப் பாலும், அவிச்ச முட்டையும் தருவாள். நான் வேணாம் என்டு அடம்பிடிப்பன். சில சமயம் முதுகுல தட்டி, நான் அழுது புலம்பதீத்திடுவாள். இப்ப, வேணும் வேணும் என்டு சொன்னா தாரதுக்கு ஒருத்தரும் இல்ல. அவள்ர சின்ன மேசயப் பார்க்கிறன். நிறைய புத்தகமும் பேப்பரும். எல்லா புத்தகத்தையும் வேறாக கட்டி, பேப்பரையும் வேறாக கட்டினன். கதிரைக்கு மேல அவள்ர பேனை உடைஞ்சி கிடந்தது. இதால தான் அவள் ஒரே எழுதிக் கொண்டிருப்பாள். ராவக்கி நித்திர முழிச்சி, பணிரெண்டு மணிக்கெல்லாம் எழுதுவாள்.

அவளுக்கு யாரே நிறைய புத்தகம் அனுப்புவாங்க. கடிதம் அனுப்புவாங்க. அவள் எழுதுறப்போ, யாரும் அவளுக்கிட்ட பேச முடியாது. மெஷின் போல, அவள்ர கை, ஓடிக்கிட்டே இருக்கும். நான் அருக போய் ஒட்டிக்கிட்டு பார்த்துண்டிருப்பன். இடைக்கிடை தலையை நிமிர்த்தி, என்ன பார்த்து சிரித்துக்

கொள்வாள். கண்ணாடிக்குள்ள அவள்ர கண்கள் தான் என்ன வடிவா இருக்கும்.

அந்த கண்ணாடிய எடுத்து ஒரு நாள் போட்டுப்பார்த்தன். ஒண்டும் தெரியல்ல. அவள்ர பேனய உடைச்சி, வெள்ள பேப்பரெல்லாம் பத்த வக்கனும் போல இருக்கும். எனக்கிட்ட பேசாம அப்படி என்ன எழுத்து. அவள்ர எழுத்துக்கள்ள, எனக்கு செரியான கோவம் வரும். எனக்கென்ன தெரியும் பெரிய்ய ஆக்களும் அவள்ர எழுத்துல கோவப்பட்டது. பேப்பர்ல அவள்ர பேரு வருமாம். "உங்கட உம்மாட கத வந்திரிக்கி, ரொம்ப நல்லா இருக்குதுண்னு உம்மாகிட்ட சொல்லுங்க" எங்கட ஸ்கூல்ல டீச்சர் மாரெல்லாம் சொல்லுவாங்க. அய் எனக்கும் நல்ல டிமாண்ட். அதக் கேட்டு அவள் சிரித்துக் கொள்வாள். என்ன எல்லோரும் நல்லம் என்டு செல்றாக. எனக்கும் அவள்ர எழுத்துக்கள படிக்கனும். போல இருந்திச்சி.

அவள் கிணத்தடிய குளிக்கப் போன சமயம் பார்த்து அவள் எழுதி வச்ச ஒரு கதய படிச்சுப் பார்த்தன். 'ச்சீ' ஒரு மண்ணும் விளங்கல்ல. தாமோதரன் சேர்ர கணக்குப் பாடம் போல இருக்கு. எனக்கே விளங்காட்டி பெரிய்ய ஆக்களுக்கு விளங்கவா போகும். அவள்ர கதயில இப்ப எரிச்சல்தான் வந்தது. அவள் வாரதுக்குள்ள அவள் எழுதி வச்ச அந்தக் கதப் பேப்பர, அடுப்புக்க போட்டு எரிச்சிட்டன். குளிச்சிட்டு வந்து, ரொட்டிய தின்னுட்டு எழுத உட்கார்ந்தாள். பரக்கப் பரக்கத் தேடினாள் பிறகென்ன நான் தான் திட்டு வாங்கினேன்.

ஒரு நாள் அவள மேடையில ஏத்தி என்ட வாப்பாட வாப்பாவுடைய சால்வைய்ப் போல அவள்ர முதுகுப்புறமா போர்த்தினாங்க. எனக்கு ஒரே சிரிப்பு. ஆம்புளயல்ர சால்வய பொம்புளயலுக்கு போடுறாங்க, அவளப் பத்தி எல்லோரும் நல்லாப் பேசினாங்க, அவள் மேடையில தலய கவிழ்த்துக்கிட்டு இருந்தாள். எனக்கும் எரிச்சலாய் வந்தது. யாருக்குமே விளங்காத எழுத்துக்கு என்னத்துக்கு மாலையும், மேடையும். அவள் உசுரோட இருக்கிறப்போ அருமை விளங்கல்ல, எனக்கு.

அவள்ர கதிரையில ஏறி இருக்கன் அவளைப் போல எழுத வேண்டும் என்கிற ஆசை. நெருப்பு போல உள்ளுக்கு கொதிக்குது. பேனையை புடிச்சி கொப்பித் தாளைக் கழட்டி எழுதினன். ஒண்டும் எழுத வரல்ல. என்ட பேரும், இங்லிஷ் எழுத்துமாகிறுக்கினன். அவள் எவ்வளவு நேரமா எழுதுவாள். பெரிய பேப்பர்ல நெறைய எழுதுவாளே! எனக்கு அவள், உசரமான மலயப் போலயும், கைக்கெட்டாத வானம் போலயும் உயர்ந்து நின்றாள்.

ஒரு நாள் அவளுக்கு கடிதம் ஒன்டு வந்திச்சி, அது பியோன் மாமா தரல்ல, வேற ஒரு தடிமாமா, எனக்கிட்ட தந்து, தம்பி இத உன்ட உம்மாகிட்ட

குடுடா என்றார். அதப்படித்துப் போட்டு, நிமிர்ந்தாள். முகம் கறுத்துப்போய்விட்டது. பிறகு சிரித்தாள். அன்டெய்க்கெல்லாம் சாப்பிடவும் இல்லெ. அத கிழித்து மடுவுக்குள்ள போட்டன். பொறகும் அவள் சோறு திண்ணவும் இல்ல.

எனக்கு மட்டும் தீத்திவிட்டு, மேசைக்குப் போய் எதையோ தீவிரமாய் எழுதினாள். எனக்குத் தனிய படுக்கப் பயமா இருந்தது. அவளையும் கூப்பிட்டன். இனி நீ பெரிய ஆளாம். உம்மா இல்லாம படுக்கப் பழகனும் சரியாடா கண்ணா. எழுந்து வந்து நெத்தியில கொஞ்சிட்டு போய் மறுகாவும் எழுதினாள்.

அவள்ர உடைஞ்ச பேனய எடுத்து மேசை லாச்சிக்குள்ள போடுறன். அவள் படித்த பழைய பேப்பரெல்லாம். கட்டி, இரும்புக் கடையில குடுத்தன். அவன் தந்த காசிக்கு சோத்துப் பார்சல் வாங்கி வந்து திண்டன். இன்டெக்கி சரியான கச்சான் காத்து, மாங்கா பிஞ்சும், பூவும் வாசல் நிறைய கொட்டிக் கிடக்கு. வேப்ப மரம் பெரிசா அசையுது. வைரவன் தான் ஆட்டுவது போல தலையை ஆட்டி ஆட்டி பயங்கரமா அசையுது. அவள்ர ஆவியோ? இந்த பட்டபகலில ஆவிவராது. அப்ப என்னத்துக்கு சாராயம் குடிச்சவனைப் போல இப்புடி கூத்தாடுது.

தொண்டைக்குள்ள சோறு இறங்க மறுக்குது. தனிமையாய் இருந்து அவளையே நெனச்சி, மூள பிசகும் போல இருக்கு. தென்ன மரம் முறியும் போல வளைஞ்சு, சுருண்டு, காத்து வீசுது. புழுதியும் மண்ணும் கலந்துகண்ணுக்குள்ள ஒரே அரிப்பு. அவள் வேகாத வெய்யிலுக்குள்ள வேப்ப மர கந்துகளில் தொங்குவதான பிரேமை கிளர்ந்தது.

ஒரு நாள் அவளின் மொகத்த பார்த்து கிட்டு இருந்தன். அண்டெக்கி அவள் ஒன்டும் எழுதல்ல. சும்மா பேனையை உருட்டி உருட்டி, மேசையடிய இருந்தாள். நல்லா கிட்டப் போய் பார்த்தன். அழுகிறாள்." எனக்கும் அழுகவரப் பார்த்தது. "உம்மா ஏன் கத்துறிங்க, ஒன்டுமில்லண்டு தலைய ஆட்டினாள். என்ன அவள்ர நெஞ்சோட நெஞ்சா இறுக்கிக் கொண்டாள்.

அவள்ர நெஞ்சு ஏன் இப்படி நடுங்குது. ஆய் என்ட மொகமெல்லாம் அவள்ர கண்ணீர் துளி சுடுது. தின்னாம கிடந்த மாட்டுக்கு தவிடு வச்சா குடிக்கிற வேகம் போல, என்ட உடம்பெல்லாம் தடவி கொஞ்சி, அழுதாள். "உம்மா உம்மா ஏன் ஏன்.... என் வாயப்பொத்தி ஒவெண்டு சத்தம் போட்டு கத்தினாள். மாமா மௌத்தான அண்டெக்கி, மாமி அழுதாவே, அப்பிடித்தான் இவளும் குலுங்கி, குலுங்கி அழுவுறாள்.

கண்ணா நான் இல்லாட்டி நீ தேடக் கூடாது, அழக் கூடாது, என்ன!

சாச்சி சோறு தருவா, உடுப்பு தருவா. இண்டெக்கி எனக்கு ஒன்றுமில்லடா கண்ணா, எனக்கு சரியான கோவம் தான். இவள் இண்டெக்கி எங்கேயோ போப்பறாள். என்னய வுட்டுப் போட்டு போப்பறாள். நித்திர கொள்ளாம கிடக்கனும். நான் இப்ப யோசிச்சன். அண்டெக்கி யாரோ வந்து கதவ தட்டி, கூப்பிட்டாங்க, இவள் தஸ்பீ மாலய உருட்டி என்னவோ ஓதிக் கொண்டு கதவத் திறந்தாள்.

வா வெளியே எண்டு ஒரு குரல் கேட்டது. அவள் எனக்கு இச் தந்துவிட்டுப் போனாள். நான் பேசாம எழும்பி ஜன்னலைத் துறந்து பார்த்தன். வேப்ப மரத்தடியில் அவள்ர உருவம் ஆடியது. வைரவனுக்கு சுருட்டு வக்கலேன்னு கூட்டிட்டுப் பெய்ட்டு போல. அவள்ர பக்கதுல ஆமியப் போலவும், பொலிஸப் போலவும் இரண்டு பேரு, என்னமோ சத்தம் போட்டு பேசுறாப் போல.

அவள் அவனுகளை பார்த்து கைய வீசி, வீசி பேசுகிறாள். அவளுக்கு ஒன்டும் வராது. வைரவன் அடிக்கும். நான் கணநேரமாநின்டன். வாறாப் போல இல்ல. இருட்டா இருந்தது அவளின் வெள்ளப்புடவ, மண்மேல கிடக்குது. வந்த ஆக்கள காணவுமில்ல. எனக்கு கிட்டப் போகப் பயம். கண்ண சொருகியது. விடிஞ்சவுடன் அவளைப் பாத்தன். என்ட பக்கத்துல இல்ல. கதவைத் திறந்து, ஓடிப் போய், வேப்ப மரத்தடிய பாத்தன். மரத்துல சாஞ்சி, தலைய கெழிச்சி பழிச்சிக் காட்டுறதப் போல கிடந்தாள். உம்மா, இன்னும் எழும்பலயா, எழும்புங்களேன் உசுப்புகிறேன்.

மூத்தம்மாட வெத்தில வாயால வடியிற சாறப் போல அவள்ர வாயெல்லாம் ஒரே சிவப்பு. எனக்குப் பயமா இருந்துச்சி. கத்துறதுக்கு தொண்டையும் இல்ல, சீவன் இல்லாததப்போல அவள்ர வைரவன் தான் கொன்னுட்டு என்னையும் கொல்லுமோ, அந்த மரத்துல சிவப்பா என்னமோ எழுதி ஒட்டியிருக்கு. சாச்சா உரத்து படிக்கிறார். நான் கிட்ட போய் உத்துக் கேக்கிறேன்.

"எங்களை எதிர்த்து யார் பேனை பிடித்தாலும், மரணத்தை தவிர, வேறொன்றையும் பரிசாக தரமுடியாது" வேப்ப மரத்த பாக்கிறன் இன்னும் அது தாண்டவமாடுது. வேப்பம் பழம் சொரியுது, காஞ்ச சருகும் உதிருது. நானும் எழுதினா இந்த வைரவன் என்னை கொல்லுமா! நான் கோடாரிய எடுத்தன். அந்த வைரவன்ட தலைய இன்டெக்கி புளக்கனும். ஆவேசமா நடக்குறன். கோடாரியை ஓங்கி, வெட்டப் போக, அதன் வேரில் அவள் வாய் நிறைய சிவப்பாய் தெரிந்தாள். வேரில தலயமோதி அழுவுறன். என்ட தலய கோதி விடுறாப் போல, காத்து என்ட பிடரிய தொட்டுப் போவுது.

# அவனும் மனிதன்தான்

நேத்துபகலெல்லாம் செரியான அலைச்சல் ரெண்டு காலும் என்னமா வலிக்குது. ராவைக்கு ஒரு சித்தாலேவ வாங்கியாரனும், ஆறு பூசிர்ற. பூன அதுற மேலெல்லாம் நக்கி துடைக்கிற மாதிரி, எல்லாம் நம்மடகையால தான் செய்யனும். மூத்தம்மாட கொட்டிலுக்கு ஓல கட்டனும். வரச் சொன்னா. அதையும் செய்யனும். அவட குடிலுக்கு கிட்ட இருக்கானே ஆதம் அவன்ட சொத்தய எனக்கு வார எரிச்சல், என்னென்டாலும் பகிடி பண்ணி என்ட மறுவாதய போக்குவான் கள்ள நாய்.

இன்டெக்கி என்னென்டாலும் செல்லட்டும், காதர் காக்காட வூட்டு வாசல்ல கிடக்குற கல்லு கும்பத்துல பெரிய்ய கல்லாப் பாத்து நல்லா மண்டயில குடுக்கனும். ஆளும் புளியங் கொட்ட மாதிரி இருக்கான். நேத்து பின்னேரமும் சனத்துக்குள்ள வச்சி பகிடி பண்ணிட்டான். 'ராஸ்கல்'

"டேய் உசன் மாவடிப் பெத்தாவ கலியாணம் முடிக்கிறியான்னு கேட்டானே. எல்லோரும் அக்குஅக்குன்னு பெரிசா சிரிச்சானுகள். அவனுகளும் பொறகு அவ வானாட்டி 'செயிலாவ முடிறா என்டு செல்லிச் செல்லி சிரிச்சது. ச்சீ பெரிய்ய வெக்கமா இருந்திச்சி, ஒரு கத்தவூடு, சின்னத்தூடுன்னு போனாலும் இந்த கததான் வளிச நாய்கள்.

இந்த பைத்தியகார மாவடிப் பெத்தாவ நெனச்சா எனக்கு செரியான வெப்பிசாரம். பாவம் மனுஷி, கிழிஞ்ச பாவாடையும், சட்டையுமா பள்ளி வளவுக்குள்ளதான் இருப்பா. மையத்துப் புட்டியிலதான் படுப்பா. உம்மோய், பயமில்லாம எப்புடி படுக்கிறாவோ, பேயெல்லாம் கூட்டாளிமாரோ, அவவ ஒண்டும் செய்யாமத்தான் இருக்கு. வாய மூடி இருக்க மாட்டா, ஒரே கததான்.

இவள் சைலாவும் ஒரு பேச்சிதான். மார்கட்டுல எல்லாருக்கிட்டயும் காசிதான் கேட்பாள். நல்லா உடுப்பாள். முழுசா பைத்தியம் இல்லப் போல. ஒரு புள்ளயும்

இரிக்கி. கலியாணம் முடிக்கல்ல. ஆரே ஒரு மொதழாழியால புள்ள உண்டானதாம். அவன் ஏமாத்த, இவளுக்கு மண்டயில அடிச்சிட்டாம். உம்மாக்கிட்ட ஒரு பொம்புள வந்து மெல்ல கதச்சா. என்ட காதுலயும் விழுந்துட்டு. இவக ரெண்டு பேரையும் சேர்த்து இவன் ஆதம் தான் என்ன பகிடி பண்ணுவான், துரத்துவான்.

மூதேவி, என்னையும் வாப்பா பேயன் என்டு தான் ஏசுறார். என்னையும் படிக்கவுடல்ல. ஓதவும் வுடல்ல. தம்பிமாரெல்லாம் பெரிய்ய படிப்பாம். 'லோங்கிசும்', டீ சேர்ட்டுமா கலக்குறானுகள். என்ட தங்கச்சியும் நல்ல படிப்பு. காலுக்கு மேல கால போட்டு பெரிய்ய பேப்பரெல்லாம் படிப்பா. நான் . கிட்டப் போய் படம் பார்த்தா, அங்கால போ காக்கா உனக்கு மூளையே இல்ல. படிக்கக்கில்ல வந்து கரச்சல் பண்றாய்னு ஏசுவாள் என்ன படிப்பு படத்துகள்ள வார நடிகமாரு படம் இரிக்கும் அதத்தான் படிப்பாள் கஸ்ஸா.

உம்மான்டா நல்லம். தண்ணி வாத்து தலய்க்கு எண்ணெய் பூசிடுவா. என்னப் பார்த்து சும்மா கத்துவா. எனக்கும் கண்ணுக்குள்ள எரியும், அவட தொங்கள் புடவயால என்ட மொகமெல்லாம் துடச்சி தலய தடவுவா இல்லாட்டி, உன்ன அல்லா ஏன்தான் இப்படித்தந்தானோ, என்டு பெரு மூச்சி விடுவா. எனக்கென்ன நல்லாத்தான் இரிக்கன்.

ரோட்டால சைக்கிள்ல போனா இவன் அனிவாவும் சிபைரும், அவன்ட கூட்டாளிமாரோட சேர்ந்து 'உசன் என்னடா 'ரிம்' சுத்துது'ன்னு கேப்பானுகள். நானும் சுருக்கா இறங்கி ரிம்ம பாப்பன். அது நல்லாத்தான் இருக்கும். சிரிப்பானுகள் பைத்தியம் அவனுகல ஆஸ்பத்திரிக்கு அனுப்பனும்.

நான் நடந்து போனாப் போதும் அந்த மொட்டயன் மாஸ்டரும் வுட மாட்டாரு. உசன் என்னடா காதுல சொவி தட்டி உர்ரா, நானும் கைவிரல் பறக்க தட்டி விடுவன். பொறகு தான் அவரும் சிரிப்பாரு. பல்லப் பார்க்கனும் கோரச்சிக்கி கையாட்டி போர்ற 'கியர்' மாதிரி. முன்னுக்கு வந்து நீட்டமா இருக்கும். அதுக்குள்ள பகிடி.

சீனி மாமாட கடயிலதேத்தண்ணி வாங்கித் தருவானுகள். நல்ல பெட்டிசும் கிடைக்கும். சோக்கா இரிக்கும். அத திண்டு குடிச்சிட்டு, பாட்டுப் படிச்சி ஆடுவானுகள். அனிவாட கூட்டாளிமார் என்ட பாட்டு கேக்க நல்ல விருப்பம். என்ட குரல் நல்லமாம்.

நானும் மீரா ரெகோடிங்'பாருல குந்தி நல்லா புதுப்பாட்டெல்லாம் பாடமாக்கிட்டன். ஒரு நாள் கடயடியில பாடுப்படிக்க வச்சானுகள். நானும் குஷியா படிச்சி ஆடினன். இப்ப கிட்டடியில வந்த பாட்டு அதுக்குள்ள மறந்துட்டு...... சீ

நுணி நாக்குல இரிக்கு 'ம்.... ஆ' ஊர்வசி ஊர்வசி டேக்கிட் இட் ஈஸி ஊர்வசி, ஊசி போல உடம்பிருந்தா தேவையில்ல பாமஸி, இந்த பாட்டுத்தான் நல்லா படிச்சி ஆடினன்: ஒன்டும் விளங்கல்ல, ஆரயும் பாக்கயுமில்ல அவன் ஹராங்குட்டி ஆதம் இருக்கானே நான் பாட்டுப் படிச்சி ஆடக்கில்ல என்ட சாரத்த இழுத்துட்டு ஓடிட்டான். 'ம்மோய்' அண்டெக்கி களிசனும் போடல்ல. வெக்கமா வெக்கம். ரெண்டு நாளக்கி பொரவுதான் கடப்பக்கம் வந்தன்.

அப்பயும் சீனி மாமா என்னமோ சொல்லி சிரிச்சாரு. இவன் ஆறுமுகம் இரிக்கானே அவனப் போல அனிவா, ஆறுமுகம் நல்ல லூஸ். சனத்திட்டே வந்து அஞ்சியம் தாண்ணே என்டு தான் கேப்பான். அம்பது சதம் போட்டாலும் எடுக்க மாட்டான். தோளுக்கு மேல பெரிய்ய குட்டிச் சாக்கு ஊத்தயா ஊத்த பார்க்கேலா சத்தி வரும். நான் கோவம் வந்தா அனிவாக்கு 'ஆறுமுகம்' எண்டு கூவிப் போட்டு ஓடுவன். என்ன புடிக்க துரத்துவான். யாசீன் பாவாட ஒழுங்கயால புடிச்செனென்டா. மறுகா என்ட மசிரயும் நொட்டேலா.

வார பெருநாளக்கி மாஞ்சோலக்கு போவனும். என்ட மாமிமாரெல்லாம் அங்கதான். மாமியென்டா மாமி, என்னட நல்ல இரக்கம். மகனென்றுதான் கூப்பிடுவா. மச்சானென்டா ஒரே பகிடி. நான் சாரன் உடுக்கிற பத்தியும் சேட்டு பொத்தான மாத்தி போடறத பத்தியும் பகிடி பண்ணுவாரு. மாமிட மகள் என்ட தங்கச்சிர வகுப்பு தான் படிக்கிர. நல்ல வடிவா இருப்பா. நான் மச்சி எண்டு கூப்பிட்டா, ம் எண்டு போட்டு, மாறிப் போவா. படத்துல வார பொம்புளயல்ட தல மாதிரி அவட தலையும் நல்ல வடிவா இருக்கும். 'சா அவ பேசமாட்டாவோ' எனக்கு நல்ல விருப்பம் அவவோட சொட்டிக் கல் விளையாட,

சும்மா இருந்தா அவட மொகம் நெனப்பு வரும். மறுக என்ன அங்க இருந்து காரோட்டி பிரேக்கெல்லாம் போட்டு, மாமிட கேத்தடியில 'பீப்' போட்டுத்தான் நிப்பாட்டுவன். இந்த ஊண்டியல இண்டெக்கி உடைக்கனும். வாப்பாட வாப்பா வாங்கித் தந்தது அது. குலுக்கிப் பாத்துட்டன் நிறைய்ய கெடக்குது. ஆறாவது கடக்கி போய் சமான் வாங்கி வரச் சொன்னா ஏலான்ன மாட்டன். என்ட ஊண்டியலுக்குள்ள காசி போட, சில்லரையாத் தருவாங்க.

சில பொம்பயுளயல் பெரிய்ய மோசம். கிணத்தடியில குளிக்கேக்குள்ளயும் கூப்புடுவாங்க. 'தம்பி உசன் இஞ்ச வா இந்த கவுத்துல சவுக்காரத்தப் போட்டு, என்ட முதுகுல தேச்சி உடன். நல்லா இன்னும் கீழே. டேய் மெல்ல மெல்லத் தேய்டா. நான் கோவத்துல நல்லா ஊண்டித் தேய்ப்பன் அப்பதான் சுருக்கா போவலாம்.

ஊருச் சனமெல்லாம் சும்மா என்னத்துக்கு பகிடி பண்றதோ தெரியா.

என்னய கண்டா போதும், அந்தா வாரான்டா உசன் என்டு கொசு மாதிரி மொச்சுவானுகள். மூத்தாம்மா ஓல கட்ட வரச் சென்ன மறந்துட்டன். மறந்துடாம கையட இப்ப போவனும். எதுக்கும் வூட்ட ஒழுப்பம் போய்ட்டு வருவம். வகுத்த கிள்ளுது. உம்மாவையும் காணல்ல. தங்கச்சியும் சோறு தரமாட்டாள். நாம திண்னுட்டு போவம்.

மூத்தம்மா கோவத்தோட தான் இருக்காபோல சுணங்கிட்டன் என்டு. ஊர்வசி பாட்ட இழுத்து ஒரு ஆட்டம் போட்டா செரி மனுஷி சிரிச்சிடுவா.
"டேய் தம்பி ஏண்டா சுணங்கினெ"

"பசிகா வூட்ட போய் சோறு திண்டுட்டுவாரன்"

"இஞ்செ வந்திருக்கலாம்தான"

"செரி இந்தா கத்தி நானும் கூடமாட நிக்கன் ஓல பிரிச்சி கட்டுவம்."

நான் மேல ஏறி அங்கால பாத்தன் ஆதம் நிக்கிறானா எண்டு. பக்கெட்லெ கல்லு கிடக்காண்டு தொட்டு பாக்கன். இரிக்கி, இண்டெக்கி என்னென்டாலும் சொன்னா அடிதான்.

பழய ஓல இத்துப்பெய்ட்டு, கால வக்க வக்க பொதுக்கு கொதுக்குன்னு போகுது. புதுமட்டய மூத்தம்மா பணிய நிண்டு வீசுறா. நான் உசக்க மேட்டுல குந்தி பெரிய்ய ஆள் மாதிரி கட்டுறென். அரைவாசி கட்டிட்டன்.

'டேய் உசன் இப்பதான்டா நீ குரங்கு போல குந்திகிட்டு இருக்காய், வால் மட்டும் இல்ல, தென்ன ஓலய வெட்டி பின்னுக்கு கட்டிக்க' ஆதம் அவன்ட வூட்ட நின்டு கத்துறான்.

எனக்கென்டா வந்தகோவத்துல, உன்ட உம்மாக்கு கட்டுறாநாய். எண்டு ஏசினன். மூத்தம்மா சும்மா இரிடா எண்டு அதட்டினா. பொறகு ஆதத்துக்கும் ஏசினா அவன் சும்மா இரிக்கான். நீ ஏண்டா வலிய தணகுற பேசாம அங்கால போ. உசன் இந்தா மட்ட, நான் மட்டயப் புடிச்சு கட்டுறன்.

இவன் ஆதத்துக்கு மூத்தம்மா ஏசினது எனக்கு நல்ல சந்தோசம்தான். அவனப் பார்த்து ஒரு 'டோல்' காட்டனும். சும்மா திரும்பி பாத்தன். ஆதம் என்னய பாத்து குரங்கு மாதிரி 'நெய்யா' காட்டினான்.

அவன்ட கையால விராண்டி விராண்டி காட்டினான். நான் கூரைக்குமேல இருந்தத மறந்துட்டன். மூத்தம்மாவையும் மறந்துட்டன். களிசன் பக்கற்றுல கையைப் போட்டு, கல்ல எடுத்தன். ஆதத்துட தலய ஒத்த கண்ண மூடி குறிபாத்தன். அப்பயும் அவன் நாக்க நீட்டி பழிச்சி காட்டுறான். கரி நாக்கா, கல்ல கிறுக்கி எறியுரன். அய் சொட்டா நெத்தியில். என்ட உம்மா எண்டு கத்திக்

கொண்டு ஆதம் ஓடுறான். நெத்தியில ரத்தம். இனி எனக்குப் பயப்படுவான். இனி அனிவாக்கும் இப்படி ஒரு சொட் குடுக்கனும். ஆதத்துட உம்மா ஓடிவாரா...

என்னடா தல மொகமெல்லாம் ரெத்தம். அல்லா ஏன்டா நெத்தி வெடிச்சிருக்கு ஆர்றா அடிச்ச? அவன் பேயன் உசன். நீ என்னத்துக்குடா அந்த 'லூஸட தணகுற. ராவு வாப்பா என்னய அடி அடின்னு அடிச்சாரு. ஆதத்துக்கு அஞ்சி தையலாம். வாட்லயாம். உம்மாவும் பாத்துட்டு வந்தா. அவ மட்டும் என்ன ஏசல்ல.

எனக்கு ராவெல்லாம். நித்திரையும் வரல்ல. எலி ஓர்ற சத்தமும், மோட்டுல பூனட ஓட்டமுமா ச்சீ ஆதத்த நெனச்சா பாவமா இரிக்கி. விடியப் போய் ஆஸ்பத்திரியில பாக்கனும். ஊண்டியல உடச்சி காச எடுக்கன். கொறுக்கா புளியன்ட கடயில அப்பமும் வாழப்பழமும் வாங்கி வாட்டுக்கு போறன்.

என்னைய கண்ட ஆதம் முழிசி பாத்தான் அப்பத்த குடுத்தன், கையை நீட்டினான். அவன்ட உம்மா பாஞ்சி வந்து அத புடுங்கி வீசுறா. 'கொலைகாரன் போடா பேயன் என்ட புள்ளய இன்னும் அடிக்கயா வந்த.

எனக்கு கண்ணுல வலிக்குது. அழுவுறன் மூக்க சீறி களிசன்ல துடக்கன். ஆதம் என்னப் பாத்துக்கிட்டே இரிக்கான். அவன்ட உம்மா துரத்துறா. வெட்டயால வந்தன். நான் ஆதத்துக்கு வாங்கி வந்த அப்பத்த ஆஸ்பத்திரி நாயெல்லாம் தின்னுது.

# காத்திருப்பு

குடிசைக் கதவை விலத்திக்கொண்டு றகுமத்து வெளியே வந்தாள். புறவளவுக்குள் ஆடுகள். பயிர்களுக்குள் தலையை புதைத்தபடி மும்முரமாயிருந்தன. "துவா... துவா... எந்தக் கூதிரமகன்ட ஆடிது" புடவைத்தலைப்பை இழுத்து வாகாக இடுப்பில் சொருகிக் கொண்டு வளவின் கடைக்கோடிக்கு ஓடினாள்.

"டேய் அனிவா, மம்மனிவா" வளவின் வளைவிலிருந்தே றகுமத்தின் குரல் தடித்தது. புகாரி ஹாஜியாரின் மில்லுக்கு மரத்தூள் அள்ளப்போன மகன் ஹனீபாவின் சிலமனைக் காணாதது வேறு எரிச்சலைக் கிளறிவிட்டது. "இந்த நாசமறுப்பான் எங்க போய் தொலஞ்சான். மறுபடியும் அவள் குரல், தென்னந் தோப்பில் மோதித்தெறித்து காற்றுடன் சங்கமித்து காணாமற் போயிற்று.

"மகரிபடப் போகுது, காட்டுல போன மனுஷனயும் காணல" நெஞ்சில் குமிழியிட்ட எண்ணத்தை சுமந்தபடி கிறவல் வீதிக்கு பார்வையை எறிந்தாள். கரத்தைகள் எதுவும் அசைவதாயில்லை. றகுமத்து ஆடு நுழைந்த இடுக்குகளை சரி செய்தாள். இன்னும் எங்கேனும் விரிசல் விட்டிருக்கிறதாவென கண்களை இடுக்கிக் கொண்டு, ஒரு 'ரவுண்ட'டித்தாள். கீரைத் தளிர்கள் கொஞ்சம் நோண்டியெடுத்து அடிமடியில் கட்டிக் கொண்டாள். ஆற்றங்கரையில் பிடித்து வந்த சுங்கான் இருக்குது போட்டுச் சுண்டலாம்.

நிலத்தில் இருளுறையத் தொடங்கிற்று. "உம்மோய் சோறு பொங்குது" "கெதியா வாகா" மகள் கைரியா வாசலுக்கு வந்து சத்தம் வைத்தாள். "அரிக்கிமிலா வெச்சி சோறு மூடத் தெரியா" "என்னடி பொம்புள நீ– நாளக்கோ, இண்டக்கோன்னு

இருக்கிறாய்" "என்ட வகுத்துலயும் வந்து பிறந்தியே" வாழ்வின் மீதான சகல எரிச்சலையும் கரித்துக் கொட்டினாள். கைரியா முற்றத்து கொய்யாவில் முதுகை வைத்து நெடு நேரமாய் வெறித்து நின்றாள்.

"பாங்கு பறிச்சிட்டு, லாம்ப பத்தவை கைரியா" சொல்லிக் கொண்டே அடுப்பு வெளிச்சத்தில் கீரையின் நார்களை ஒதுக்கத் தொடங்கினாள். சற்றைக்கெல்லாம் தூள்பேக்குடன் மகன் வந்தான்.

"எங்கடா தொலஞ்ச, இம்புட்டு நேரமா"

"அங்க தூளுக்கு சரியான போலிங்கா",

"இனி காசுக்குத்தான் தூளாம்."

"சாமி வரம் கொடுத்தாலும்"இந்த பூசாரி மார்தான் நம்மட வகுத்துல அடிப்பானுகள்"

"சரி நீ வாப்பா வாராராண்டு ஒழுப்பம் பாரு, கட்டி வைத்திருந்த கன்றுக் குட்டியை அவிழ்த்து விட்டது போல் அவன் பாதைக்கு ஓடினான்.

திடீரென ஆறாம் கட்டைப் பக்கமிருந்து வெடிகள் கிளம்பின. ஒற்றையில் ஆரம்பித்து, ஏகவாக்கில் இரு தரப்பும் கொட்டத் தொடங்கினர்.

"ம், தொடங்கிட்டானுகளா"

"கொஞ்ச நாளா ஒன்டும் இல்லாம இருந்திச்சி. இது எப்ப ஓய்ரதும், நாம நிம்மதியா இருக்கிறதும்", அடிவயிற்றில் ஜிவ்வென்று எரிந்தது.

"அல்லா, அவரும் காட்டுல போன நீ தான் காப்பாத்தி கொண்டு வந்து சேர்த்திடு"

துவக்கோசைக்குப் பயந்து, இடைநடுவில் ஓடிவந்தான் ஹனீபா. வந்த வேகத்தில் குடிசைக்குள் பதுங்கிக் கொண்டான்.

"இவன் இப்படித்தான் பயந்தாங்கொள்ளி"

"இஞ்சவராது பயத்துல மூத்திரம் பேஞ்சிடாத" ஓங்காரமாய் மகனைப் பார்த்து சிரித்துக் கொண்டாள். இன்றைக்கென்னவே மனசில் உற்சாகம் கொப்பளித்துப் பீரிட்டது.

முற்றத்தில் இறங்கி கொய்யாவில் சாய்ந்து கொண்டாள். கண் தொடும் எல்லை வரை வியாபித்திருந்தது இருள். இருளின் கருமையைக் கிழித்துக் கொண்டு, நெருப்பைக்கக்கும் 'ஹெலி'யின் கொடூரத்தை ரகுமத்து பார்த்துக் கொண்டிருந்தாள். தொடர்ந்தும் இருளில் உறைந்திருக்க அச்சமாய் வந்தது.

திண்ணைக் கட்டில் குந்தியிருந்த கைரியா நாடிக்கு கைகளைமுட்டுக் கொடுத்தபடி எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தாள். விளக்கொளியில்

அவள் மதர்த்த உடலும், எகிறிவரத் துடிக்கும் மார்புகளின் திமிர்வும் திகிலை ஊட்டின. "இனி குமராகுற பருவம்" அடிவயிற்றில் தீமூண்டு பெருமூச்சாய் கசிந்தது.

இற்றைக்கு பத்து வருங்களுக்கு முன் இந்த தோட்டத்திற்கு வந்தவள் றகுமத்து. அவள் கிராமத்தில் ஏற்பட்ட பதற்றமும் புதிதாய் முளைத்த முகாம்களும் கிராமத்தவர்களை பூர்வீக மண்ணை விட்டும் அப்புறப்படுத்திற்று. திக்கற்ற அவள் குடும்பத்தை இந்த தோட்டத்தில் குடியமர்த்தினார் அஸனார் ஹாஜி. வரும் போதே கைரியா கைக் குழந்தை. தோட்டத்தில் தரித்தவன் தான் இளையவன் ஹனீபா.

றகுமத்தின் கணவனுக்கு பரம்பரைத் தொழில் விறகு வெட்டுவது தான். வனவாசம் அத்துப்படி. அவளின் வாப்பா சீதனமாய் கொடுத்த ஒரு சோடி தம்மன்கடுவ மாடுகளும் மருதமுனைக் கரத்தையும், அவளின் குடும்பத்தின் வறுமையை ஓரளவேனும் விரட்டிக் கொண்டிருக்கும் ஆதனங்களாகும்.

ஓடைக்கரையில் இடைவிடாது ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. வானப் பொட்டில் அறையுமாற் போல் கடகடவென சுடுகுழல்களின் அதிர்வு கால்களைப் பரத்தி மல்லாந்தாள். வானமே இருளுக்குள் உறைந்திருந்தது. ஒரு வெள்ளியேனும் மிச்சம் வைக்காமல் மூடிக் கிடந்தது கருமேகம். மல்லாந்தவள் சற்று கழுத்தை முறித்து மகளில் பார்வையை எறிந்தாள். குப்பிலாம்பின் மினுக்கில் அவள் முகம் மினுமினுத்தது. சின்னவன் ராத்தாவின் இடுப்பை அண்டி பிசினாய் இருந்தான்.

10 வருடங்களுக்கு முன் றகுமத்தின் வாழ்க்கை நேர் கோட்டில் தான் ஓடிக் கொண்டிருந்தது. மனசுக்குப் பிடித்த பிரியமான வாழ்க்கை. கணவனுக்கு பிகு பண்ணாததனிமையும் தாபமும். இரவில் ஆற்று மணலில் சர்ப்பங்களாய் பின்னிக் கிடந்து புல்லரித்த நிலாக்காலங்கள். எல்லாமே இந்த இருளுக்குள் இருளாய் கண்ணுக்குள் மின்னிப் போயின.

பெரியபள்ளி மினாராவிலிருந்து இஷாத் தொழுகைக்கான அதான் சாயுத் தம்பி மோதினாரின் குரல் காற்றில் நிறைந்து செவிகளுள் ஒழுகிச் சென்றது. றகுமத்து இளமைக்கால கனவுகளை கலைத்து விரட்டினாள்.

"பிள்ளைகள் இரண்டும் நல்ல தூக்கம். என்ட அல்லாஹ் புள்ளயல் பசியில படுக்குதுகள்" பதறியவள் விளக்கை நகர்த்தி குடிசைக்குள் நுழைந்தாள். தாலாப் பீங்கானில் சோற்றைப் பரத்தி நடுவில் வகிடெடுத்து, பாலாணத்தையும், கீரைச் சுண்டலையும் அள்ளிவிட்டாள். "புள்ளேய். டேய் அனிவா எழும்புங்க தின்டுட்டு படுங்க"

அரிக்கன் லாம்புடன் வெளியே வந்தாள். கரத்தையின் சிலமனே இல்லை. நெஞ்சத்தீ, வளரத் தொடங்கியது. "பக்கத்து தெரு ஆதம்காக்காவும் அவரும் தான் போன ஒரு நடை போய் வருவம்." "இந்தா கைரியா தட்டியச் சாத்திட்டு இருங்க, ஆதம் மாமாடவூட்ட பேய்ட்டு வாரன்" கடப்படியில் நின்று சத்தம் வைத்தவாறே வீதிக்கு குறுக்கே விரைந்து போனாள்.

அவரின் மேல் உள்ள தீராத அன்பும், காதலுணர்வும் உயிரின் மேல் உள்ள அச்சத்தை விரட்ட நடந்தாள். மார்புக் கூட்டுக்குள் நாகுகள் இரண்டு போரிடும் வெறி. ஆதங்காக்காவின் வாசலில் அவரின் மனைவி.

"என்ன மச்சி, இவுகள இன்னும் காணலியே" அவளைக் கண்ட அவள் உடையத் தொடங்கினாள்.

"அதான் நானும் விசகலம் கேட்க வந்த"

"எங்கால வெடில்?"

"வாகநேரிப் பக்கம் தான் கேக்குது."

"தனியா இருக்காம வூட்ட வாங்க மச்சி அவக வந்தா தெரியும் தானே"

பலத்த வெடியோசைகள் குறைந்து ஒன்றிரண்டு திக்கொன்றாய் வெடித்துக் கொண்டிருந்தன. றகுமத்தின் முற்றத்தில் ஆதத்தின் மனைவி

"சோறு தின்னுங்க மச்சி"

"வாணாம் மச்சி அவக வரட்டும்"

றகுமத்தின் பரிவில் அவள் உருகி விசும்பத் தொடங்கினாள் சின்னக் கேவல் ஒப்பாரியாக வெடிக்கும் போல் இருந்தது. "கத்தாதீங்க மச்சி அல்லாட காவலா வருவாங்க" ஆறுதல் சொன்ன றகுமத்தின் குரல் உடையத் தொடங்கியது. புடவைத் தலைப்பை வாய்க்குள் திணித்து தன் பலவீனத்தை மறைக்க முயன்று தோற்றுப் போனாள். இரு பெண்களின் மனசுக்குள்ளும், வேதனையும் கிலியும் ஒருவரை ஒருவர் தேற்ற முடியா பதற்றத்தில் வானத்தை மட்டும் வெறித்திருந்தனர்.

சங்கத்து அலாரம் இரண்டு முறை அடித்து ஓய்ந்தது. கற்சிலையாய் இரு பெண்களும் முற்றத்தில். பனியொழுகும் வானக் கூரையின் கீழ் விழியொழுகி உலர்ந்து போக சோர்ந்திருந்தனர். முயல் வேட்டைக்கென ஏவிவிட்ட நாய்கள் வெறிகொண்டு தோட்டம் முசிய அதர்மம் செய்தன. தூரத்தே வாகனங்களின் இரைச்சல் தலைக்கு மேல். இனம் புரியா பறவையொன்று கணத்த சோகத்துடன், கத்திச் சென்ற–ஒலியைத் தவிர – கடும் மௌனத்துள் உறைந்திருந்தது கிராமம்.

அந்த மௌனத் திகிலை கிழித்துக் கொண்டு பெரிய பள்ளியின் ஒலிபெருக்கி அலறியது. நள்ளிரவின் தவம் கலைய சீற்றம் கண்டது ஊர். தற்போது நடந்த சண்டையில் நமது கிராமத்தவர்களும் பாதிக்கப்பட்டிருப்பதாக இராணுவ கமாண்டர்

அறிவித்துள்ளார். இன்னும் சற்று நாளிகைக்குப் பின் பொதுமக்கள் பள்ளிவாசலுக்கு வந்து, இன்னும் வீடு திரும்பாத உறவினர்களைப் பற்றிய தகவல்களைத் தரவும். அவ்வளவுதான்.

றகுமத்து ஓடினாள். போரை வெறுத்து, அன்றாடம் வயிற்றுப்பிழைப்புக்கே அல்லல்படும் அவர்கள் தலைவிதியை எண்ணி அழுதழுது ஓடினார்கள். சாயு தம்பி மோதினார் இடைவிடாது ஒலிபெருக்கியில் கரைந்து கொண்டிருந்தார். சாவன்னாவின் கடை மூலையில் திரும்பிய றகுமத்தை ஆதத்தின் மனைவி இழுத்துப் பிடித்தாள். நிலம் தெளிந்திருந்தது. "அந்தா மச்சி நம்மட அவுகட கரத்தைதான் வருது"

றகுமத்தின் உடலோடிச்சிலிர்த்தது. நரம்புகளில் மின்னலின் அதிர்வு. லாந்தரை அப்படியே விட்டுவிட்டு ஸ்தம்பித்து நின்றாள். முதற் கரத்தையில் ஆதம் காக்காவின் தலைக் கருப்பு. அதனைத் தொடர்ந்து வருவது அவர்ற கரத்தைதான். பூரிப்பில் கண்கள் குளிர்ந்தன. பல நாள் பிரிந்து தாயைக் கண்டதும் துள்ளிக் குதித்தோடும் இளங்கன்றாய் றகுமத்து கரத்தையை எதிர் கொண்டு ஓடத் தொடங்கினாள்.

அவளுக்கு விசரோ என சனங்கள் ஐயுற்றனர். மார்புச் சேலை விலகி, தோளில் வழிந்தது. V.C. க்கு முன் வண்டிலைப் பிடித்து விட்டாள். ஆதங்காக்கா அவளை அருகே வர வேண்டாம் என சைகை செய்தார். கரத்தையின் பின்னால் சனங்கள் நிரம்பி திரண்டு வந்தனர். றகுமத்தின் தம்பியும், மாமாவும் கூடவே வந்தனர். அவர்களின் முகங்கள் வெளுத்து கண்களும் சிவந்திருந்தன.

அவரின் கரத்தை ஆதங்காக்காவின் கரத்தையுடன் தொடுக்கப்பட்டிருந்தது. மதர்த்த காளைகள் இரண்டும் கணத்த துயரமாய் தலை குணிந்து நடைபோட்டுச் சென்றன. "அவரு எங்க காணலியே" றகுமத்தின் கண்களுக்குள் இருள் சூழ் கொண்டது. ஆதங்காக்காவின் தடையையும் மீறி, கூட்டத்தை விலக்கிக் கொண்டு, கரத்தைக்குள் எட்டிப் பார்த்தாள்.

நேற்று உடுத்திச் சென்ற நீல நிறச் சேர்ட்டும், பச்சைசாரனும் அப்படியே, அவருதான் கரத்தை முசிய குருதியின் வீச்சம். கண்கள் பிதுங்க அஹமதை கிடத்தியிருந்தனர். "கைரியாட வாப்பா ஆரு உங்களையும் சுட்ட"?

கரத்தை நுனியில் தொங்கிக் கொண்டு ஒப்பாரி வைக்கும் றகுமத்தை கவனிக்காமலேயே காளைகள் இரண்டும் ஓடிக் கொண்டிருந்தன.

# மூத்தம்மா

தயிர் சட்டியின் வடிவத்தில் வானில் கிடந்தது நிலா. கொட்டிவைத்த இடத்தில் சற்று நேரம் இசகாமல் பிசகாமல் உறைந்திருக்கும் எருமைத் தயிரைப்போல் ஆடாமல் இருந்தது அதன் வடிவம். வெண்ணிற மேகங்கள் நிலவை மூடிமூடி ஆலிங்கணம் செய்கையில் உறை தயிரின் பாலாடையோ என வியக்க வைத்தது அதன் அழகு.

தூரத்தே சீறும் கடலின் சீற்றம் துல்லியமாய் கேட்டது. சற்று தள்ளி நிற்கும் மாமரத்தின் பூக்கள் காற்றுக்கு உதிர்ந்து கூரைக்கு மேல் நச்சென விழுந்தன. சம்பந்தமில்லாமல் நாய்கள் ஊளையிடுவதும் தனகித் திரிவதும் ஒழுங்கைக்குள் ஒன்றையொன்று துரத்திக் கடிப்பதும் மிகத் தெளிவாய் தெரிந்தது.

மூத்தம்மா வரும் வரை நான் பந்தலின் கீழ் தொங்கின ஊஞ்சலில் இருந்தேன். என் மடிக்குள் சின்னத் தங்கச்சி இருந்தாள். காலை கீழே குத்தி உந்தி விடுகிறேன். எண்ணெய் வரண்டிருந்த ஊஞ்சல் 'சைன்' கீறீச்சிட்டது. மஞ்சோனா மரத்தில் பக்குல் கத்தியது. மஞ்சோனாவைப் பார்க்கிறேன் மிக

அடர்த்தியாய் காற்றுக்கு தலைவிரித்தாடி ஒய்யாரமாய் நின்றது. பயத்தில் உறைந்து போய் "மூத்தம்மோய்" என்றேன்.

"என்ன மனே" "இந்த பக்குல துரத்துகா" ஒரு சிரட்டையில் நெருப்புத்தணலை நிறைத்துக் கொண்டு வெளியே வந்தா. பந்தலின் கீழிருந்து உப்புக் கட்டிகளை தூவினா பட்பட்டென, பெரும் சப்தத்துடன் வெடித்தது. பக்குல் பறந்ததாக சிலமனில்லை. எனினும் அது கத்துவதை நிறுத்திக் கொண்டதில் எனக்குத் திருப்தி. மறுபடியும் குடிலுக்குள் நுழைந்து ஒரு துண்டுப் பாயுடன் வந்தா.

மஞ்சோனா மரத்தின் கீழ் பாயைவிரித்து சாய்ந்து கொண்டா. இலைகளுக்கிடையே நிலாவொளி கசிந்தது. மூத்தம்மா எப்போதும் கால்களை பரத்தி, ஒரு காலுக்கு மேல், மறுகாலையும் போட்டு ஆட்டியவாறு தான் அமர்ந்திருப்பா. வெற்றிலைப் பெட்டி அருகில் இருந்தது. படிக்கத்தை காணவில்லை. வெற்றிலையை இடித்து தூளாக்கும் இடி உரலும், ஆணியும் கூடவே இருந்தன.

பாக்கை சீவலாக்கி அளவோடு ஏனைய கராம்பு சாதிக்காய் கூட்டையும் சேர்த்து துவைத்தெடுப்பா. ஊஞ்சலில் இருந்த நானும் தங்கச்சியும் மூத்தம்மாவின் விலாவில் போய் அப்பிக் கொண்டோம். நிலவு சற்று சரிந்திருந்தது. பெக்டரி விசில் சத்தம் கேட்டது. "எத்தின மணிகா" "ஒன்பதுமணி" என்றா. இந்த விசில் சத்தமே ஒரு வகையான கிலியை உண்டுபண்ணும். அடிவயிற்றில் உரல் உருளுவதைப்போல் இதைகேட்கும் போதெல்லாம் நெஞ்சுக்குள் உதைக்கும்.

மூத்தம்மா வெற்றிலைஎச்சிலை சற்றுதள்ளி மண்ணைக் கெல்லி துப்பிக் கொண்டா. மஞ்சோனா மரத்திலிருந்து இப்போதுதான் பக்குல் பறந்து போகிறது. போடியாரின் மாமரத்திலிருந்து கத்துவது கேட்டது. மூத்தம்மாவை இறுக்கிக் கொண்டேன். "ஏன்கா ராவயில மட்டும் பக்குல் கத்துது" அடக்க முடியாம் கேட்டேன். "அதுமனே நம்மட ஊருக்க குடும்பத்துக்க, ஆராவது மவுத்தாப் போரதுக்கு அடயாளம் என்டு சொல்லுவாக, அது தான் இந்தப் பக்குல் வாசலுக்கு வாசல் கேவித் திரியுதாம்.

"அப்ப ஏன்கா நம்மட உம்மா மவுத்தாப் போன அண்டெக்கி இது கத்தல்ல. கத்திருந்தா நம்மட உம்மாவ வூட்டுக்க ஒழிச்சி வச்சிருக்கலாம் என்னகா" மூத்தம்மா என்னை இறுக அணைத்துக் கொண்டா தங்கச்சி அவ மடிக்குள் விழுந்து தூங்கிக் கொண்டிருந்தாள். வாப்பா புதிதாய் ஒரு உம்மாவை கொண்டுவந்தார். மூத்தம்மாவை விட்டுப் பிசக விருப்பமில்லை என்பதால் எங்களை இவவிடமே விட்டுவிட்டார்.

கோழிக் கூட்டினுள் சலசலப்புக் கேட்கிறது. "சூய் சூய்" யென குரல் கொடுத்தா. அருகில் போன நாய்கள் உறுமிக் கொண்டோடின. கொல்லைப் புறத்தில் கட்டியிருக்கும் மாடுகள் மூச்சு விடும் இரைச்சலும், விசிக் விசிக்கென வால் சுழற்றி, நுளம்பு விரட்டும் சப்தமும் கேட்டது.

மூத்த வாப்பாவின் கூட்டுக் கரத்தை சற்று தள்ளி ஓரமாய் கிடந்தது. உள்ளேதான் மனுஷன் படுத்திருந்தார். வண்டியின் கீழ் தளத்தில் அரிக்கன் லாம்பு பிரகாசமாய் தொங்கியது. நேற்று அவருடன் அந்த வண்டியிலேறி விறகெடுக்கப் போயிருந்தேன். "என்னத்துக்கு இந்த வண்டிலுக்கு குடிலப் போல ஓல கட்டினிங்க" கேட்டேன். உன்ட மூத்தம்மாவ ஆறும் பாக்காம கூட்டிப் போகத்தான். மழ, வெய்யில்ல நலயாம அவவ கொண்டு போகனும், காவிபடிந்த பற்களை இளித்து சிரித்துக்கொள்வார்.

சுருட்டுப் புகைப்பார். நான் ஓரத்தில் போய் இருந்து கொள்வேன். வால்வண்டிலில் இருப்பதில் எனக்கு நல்ல குஷி. "வாவான்டா மனெகிட்ட கூப்பிடுவார். சுருட்டு நாத்தம். மூச்சைப் பிடித்து ஒரு 'தம்' இழுத்து விட்டு தூர வீசுவார். அவர் விறகொடிக்க, நான் காட்டுக்குள் அலைந்து விழாம்பழம் பொறுக்குவேன். சமயத்தில் நாவல் பழமும் சொரிந்திருக்கும். வண்டியின் கீழ் தொங்கும் குட்டிச் சாக்கில் பொறுக்கிப் போட்டுக் கொள்வேன். மூத்தம்மா நாவல் பழங்களை உப்பு நீரால் கழுவித் தருவா ருஷியாய் இருக்கும்.

மூத்த வாப்பாவிடம் ஒரு 'வட்டுவம்' இருக்கும் மேல் வாய் சுருங்கி இரு பக்கமும் நாடாவை இழுக்க அகன்று கொள்ளுமாற் போல் அதை வைத்திருந்தார். அதற்குள், வெற்றிலை போடும் சாதனங்களை அதக்கி சதா தோளில் தொங்கப் போட்டிருப்பார். றகுமா மாமியின் பாணிச்சாவல் கூவுது. இது இப்படித்தான் நேரந்தெரியாமல் கூவிக் கொண்டிருக்கும். மூத்தம்மா கதை சொல்லாததால் எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை.

எனது தலையை தடவிக் கொண்டு, நிலாவை வெறித்துக் கொண்டும் ஏதோ யோசனையில் இருந்தா. நானும் நிலாவை உற்றுப் பார்க்கிறேன். மூத்தம்மாவைப் போல ஒரு மனுஷி அதற்குள் சுருண்டு படுப்பதைப் போல் இருந்தது. மூத்தவாப்பாவின் இருமல் சத்தமும் பலமாய் கேட்டது.

அவரும்படுக்கவில்லை போலும். சற்றைக்கெல்லாம் எழுந்து கொல்லைப்புரம் போவதும் தெரிந்தது. மாட்டுக் கொட்டிலுக்கு புகைமூட்டி விட்டு, மறுபடியும் வண்டிலில் ஏறி படுத்துக் கொண்டார். சுருட்டு வாசம் காற்றில் மிதந்து வந்து, வயிற்றைக் குமட்டியது.

"கத செல்லன்கா" சிணுங்கினேன். "இப்ப ஏலாமனெ, நேரம் பெய்ட்டு, நாள ராவக்கி சொல்ரன் வா படுப்பம்" தங்கச்சியை அள்ளி தோளில் போட்டா. நான் பாயை உதறி, எடுத்துக் கொண்டேன். சாக்குக் கட்டிலை விரித்து என்னைப் படுக்கவைத்து போர்த்திவிட்டா. சற்றுத் தள்ளி தங்கச்சியுடன் தரையில் படுத்துக் கொண்டா.

கால் மாட்டில் உம்மா வந்துநின்றா. புகைச் சுருளாய் நெளிந்து நெளிந்து வந்தா. கைகளை அசைத்து என்னை அழைத்தா. மாதுளம் சுளையாய் பற்கள் பளீரிட சிரித்தா. என்னைத் தூக்க கைகளை விரித்து அருகே வந்தா. "மூத்தம்மோய்" நானும் கீழே படுக்கன். வியர்த்துக் கொட்டியது. மூத்தம்மாவை இறுக்கிக் கொண்டு அயர்ந்து போனேன்.

என் கனவு நிறைய உம்மா வந்தா. கூப்பிட்டா கட்டியணைத்து கொஞ்சினா. விடிய விடிய இப்படித்தான். மூத்தம்மா செவத்தாள் பசுவில் பால் கறப்பதைப் பார்ப்பதற்கென்றே அதிகாலையில் விழித்துக் கொள்வேன். தொடையைத் தட்டி கால்களை அகல நட்டுவைப்பா.

செவத்தாள் அசையாமல் நிற்கும். முலைகளை கழுவி விடுவா. முழங்கால்களிடை வாளியை இடுக்கிக் கொண்டு, ஒவ்வோர் காம்பாய் மேலிருந்து கீழ் நோக்கி நசுக்கி விடுவா. சர்சர்ரென விழும்பால். முறுகக்காய்ச்சி, பெரிய கிளாசில் ஊற்றி, எனக்கும் தங்கச்சிக்கும் குடிக்கத் தருவா. சுவையாய் இருக்கும்.

இன்றைக்கென்னவோ செவத்தாள் பால் கறக்க விடவில்லை. பின்னங்கால்களை உதைத்துக் கொண்டும் தலையை சிலுப்பி மூத்தம்மாவைப் பார்த்து சீறிச் சீறி பிகு பண்ணிக் கொண்டிருந்தது. இந்த மூத்தம்மாவை நினைக்கையில் நெஞ்சில் உவகை நிறையும். சுருக்கம் விழுந்தாலும் என்ன மிடுக்காய் நடக்குறா.

பால் கரப்பதிலிருந்து மாட்டுக்குத் தீனி போடுவது வரை ஒரு மிருக வைத்தியரைப் போல் என்ன நேர்த்தியா செய்கிறா. அரிசிடித்து, மாவாக்கி, ரொட்டியோ, பிட்டோ உண்ணத் தருகிறா. பனைமரத்தின் ஓலை சீவி, பெட்டியோ தட்டோ செய்துவிடுகிறா.

இத்தனைக்கும் ஒரு நோய் வந்தா படுக்கையில் கிடந்து அழுந்தவுமாட்டா. ஆஸ்பத்திரி என்று அலையுமாட்டா. ஆடாதோடையும் கொத்தமல்லியும் அவித்துக் குடித்து எழுந்து நடக்குறா. அக்கம் பக்கம் யாருக்கு நோய் பிடித்தாலும் கூப்பிடாத வைத்தியராய் ஓடிப் போய் மருத்துவம் செய்வா. ஊரில் எது நடந்தாலும் மூத்தம்மா தான் வேண்டும். "கைராசிக்காரி நீங்கதான் மாமி, என்ட தலப்புள்ளய

ஏந்தனும்" நேற்றும் அவ்வா ராத்தா வீங்கிய வயிற்றுடன் வந்து மூத்தம்மாவிடம் சொல்லிவிட்டுப் . போனா.

இந்த கிராமத்தின் முடிசூடா குட்டி ராணியாய், பொது மனுஷியாய் மூத்தம்மா தான் இருந்தா. அனுபவம் பழுத்து அவவிடம் அறிவு தேஜஸ், சட்டெனத் தெரியும். நானும் மூத்தவாப்பாவும் காட்டிற்குப் போய் ஆமணக்குக் கொட்டை பொறுக்கிக் கொடுப்போம். அதை இடித்து உருக்கி உளுவரிசியும் நன்னாரி வேரும் நறுக்கிப் போட்டு, எண்ணெயாய் காய்ச்சி தலைக்குப் பூசுவா.

அவவின் கருகருவென்ற தலை முடிக்கு இதுதான் பஸ்பம். எனக்கும் அதைத்தான் அப்பிவிடுவா. மூத்தவாப்பா எண்ணெய் போடமாட்டார். "அங்கப்பாரு மனெ உன்ட அப்பாட தலய, சூப்பின பனங்கொட்ட மாதிரி" என கிழவனை சீண்டி, கொடுப்பினுள் சிரித்துக் கொள்வா.

மூத்தம்மாவுக்கு பிள்ளை என்று உம்மா மட்டும் தான். அதுவும் பல நேத்திக்கடன் கொடுத்து பிறந்தது என பழைய நினைவில் தோய்ந்திருப்பா. மூத்தம்மாவின் காதில் பெரிய தோடுகள் மேலிருந்து கீழாக நேர்வரிசையில் தொங்கிக் கொண்டிருக்கும். கேட்டா அது 'அல்லுக்குத்து' என்பா. கழுத்தில் கருக மணிமாலை சதா மின்னிக் கொண்டிருக்கும். கையில் அகல செம்புக் காப்புகளென அமர்க்களமாய் பார்க்க அம்சமாய் இருப்பா.

புராண காலத்து அரசிகள் பற்றியும், ராஜ வம்சத்து மாதர்கள் பற்றியும் பள்ளிக்கூடத்தில் கதை சொல்லும் போதெல்லாம் எனக்கு மூத்தம்மாவின் நினைவு பளிச்சௌனத் தோன்றும். இவவும், ஓர் அரசியாய் கற்பனித்துக் கொள்வேன்.

நானும் மூத்தம்மாவைப் போல் சுயமாய் ஓர் இளவரசனாய் இயங்க விழைந்தேன். உன்னிப்பாக அவவைப் பார்க்கத் தொடங்கினேன். எந்தக் காரிருளையும் கிழித்துக் கொண்டு குடுகுடுவென நடக்கும் மனோ தைரியம் அவவுக்கு. நானும் அப்படி நடந்து பார்த்தேன். இரத்தம் உறைந்து போய் கால்கள் மரத்து விடவில்லை.

பயம் என்னை பீடிக்கவில்லை. மஞ்சோனா மரத்தின் கீழ் தனியேஇருக்கப் பழகினேன். கருமேகத்தைப் பார்த்து கரும்பூதமாய் கற்பனித்து உள்ளுக்குள் ஓடத் தோன்றுவதில்லை. மூத்திரம் முடுத்தால் மூத்தம்மாவை எழுப்பிக் கொண்டு சிணுங்குவதில்லை. இந்த ராஜ்யத்தின் அரசியைப் போல், நானுமொரு இளவரசனானேன்.

மூத்தம்மா என்ற மகாராணியின் கீழ் இருப்பதில் என்றுமில்லாத கர்வம் சுரந்தது. எனது சிரசில் சௌந்தர்ய கிரீடம், சூடியதான மிதப்பு, விலாவிரண்டிலும் சிறகுகள் முளைத்து காற்றினிலே எம்பத் தொடங்கிவிட்டேன். என் மிதமிஞ்சிய 'பயந்தாங் கொள்ளி' பட்டத்தை நான் எரித்தாயிற்று. நெஞ்சினுள் கலர்கலராய் வண்ணப் பூக்கள் காடாய் அடர்ந்தன.

ஒரு நாள் பாடசாலை விட்டு வந்து கொண்டிருந்தேன். மூத்தம்மா காலையில் தேய்த்து விட்ட எண்ணெய் வெயிலுக்கு உருகி, முகத்தில் வழிய ஆரம்பித்தது. படலையைத் திறந்தேன். எதிரே மூத்தம்மா தெரிந்தா. தங்கச்சியை மடியில் வைத்து சோறு தீத்திக் கொண்டிருந்தா. அவவின் முகம் வாடிப் போய் இருந்தது. எனக்கும் சோறு போட்டுத்தந்தா. என்றுமில்லாதவாறு மஞ்சோனா மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டா.

"ஏன்கா ஒரு மாதிரியாய் இருக்காய்" "காய்ச்சல் மனெ நீ கடக்கி ஓடிப் போய் ஊறல் பக்கட் வாங்கி வா" சேலை முடிச்சை அவிழ்த்து காசை நீட்டினா. ஊறல் குடித்து விட்டு, இழுத்துப் போர்த்தி படுத்துக் கொண்டா. இளவரசனான நான் உடைந்து போனேன். இன்றுதான் நோயென்று பாயில் சுருண்டிருப்பதைப் பார்க்கிறேன்.

இனந் தெரியாத அச்சம் என்னைக் கவ்விக் கொண்டது. மூத்தவாப்பா குளிர்காய தீமூட்டினார். என் வெள்ளை கொக்கு வெடவெடுத்தது. சந்தனம் அரைத்து உச்சந்தலையில் பூசினார். அன்னாவி மாமா வந்து ஊதிப்பார்த்தார். ஒரு ரூபாய் குற்றியை வெள்ளைத் துணியில் சுற்றிக்கட்டி, உச்சவட கல்லு அவுலியாவுக்கு நேர்ந்துவைத்தார்.

நான் அவவண்டையில் பிசகாமல் நின்றிருந்தேன். தங்கச்சி தன் பிஞ்சு விரலால் மூத்தம்மாவின் நெற்றியில் வருடியது. தங்கச்சியை வாரிக்கொண்டா. அவட கண்கள் இரண்டும் ததும்பிப்பீறின. மறுநாள் வழக்கம் போல் எழும்பி. என்னை பள்ளிக் கூடத்திற்கு அனுப்பினா. என்றுமில்லாதவாறு கட்டிப்பிடித்து, கொஞ்சினா "மனெ கவனமாய் போய்ட்டுவா" நெருப்புத்தணல் மாதிரி சுட்டது. மூத்தம்மாவின் கை.

இடைவேளை, யாசீன் பாவாட தோட்டத்தில் நன்பர்களுடன் இருந்தேன். "டேய் காசீம் உன்ட மூத்தவாப்பா வந்திருக்கிறார். கெதியா வா" பொறுக்கிய முந்திரிப் பழங்களை அஹமதிடம் கொடுத்துவிட்டு ஓடினேன். மூத்த வாப்பா 'கென்டி'னடியில் தளர்ந்து போய் நிற்பது தெரிந்தது. "புத்தகத்தை எடுத்துட்டு வூட்ட வாமனெ" "பள்ளிக்கூடம் உடலியே" என்றேன். "நான் பெரிய சேருக்கிட்ட சொல்லிட்டன் நீ வாமனெ கெதியா போகனும்" அவரைப் பின் தொடர்ந்தேன்.

வீட்டை நெருங்க நெருங்க, வாசலில் சனங்கள் நிறைந்திருப்பது தெரிந்தது. இன்னுமின்னும் வருவதும் போவதுமாய் பரபரத்தனர். மூத்தம்மாவுக்கு மறுகாவும் காச்சல் உரம்போல, முந்திரிக்கசறு வெள்ளைச் சேர்ட்டில் "மறுப்" போட்டிருந்தது. மனுஷி கண்டா ஏசுவா. புத்தகத்தால் அதை மறைத்துக் கொண்டே, குடிசைக்குள் நுழைகிறேன். றகுமாமாமி ஓடிவந்து புத்தகங்களை வாங்கிக் கொண்டா. தங்கச்சி விரல் சூப்பிக் கொண்டு அங்குமிங்கும் ஓடித்திரிந்தது.

றகுமா மாமி என் கையைப் பிடித்து "வா மகன் மூத்தம்மாவ பார்த்துட்டு வருவம், உள்ளே இழுத்துப் போனா. குப்பென்றடித்தது சாம்புராணிப் புகை. என் வெள்ளை கொக்கு தூங்கிக் கொண்டிருந்தது. ஓடிப் போய் அவவின் கால்களை கட்டிக் கொண்டேன். "இஞ்ச எழுபன்கா, எழும்பன்" கத்தினேன்.

வெள்ளைத் துணியால் போர்த்திக் கொண்டு, உம்மென்று படுத்திருந்தா. இஞ்சால வா மகன் மையத்த தூக்கப் போறாக. என்னை இழுத்துக் கொண்டு வெளியே வந்தா றகுமாமாமி. மூத்தம்மா மௌத்தாகவில்லை. மூடி முக்காடிட்டு மூத்தவாப்பாவின் கூட்டுக் கரத்தையுள்ளிருந்து போவதாய் பட்டது.

சந்தூக்கின் பின்னால் ஓடிச் சென்றேன். "மனெ நீ வெயிலுக்க வராம தங்கச்சிய பார்த்துக்க" மஞ்சோனா மரத்தடியில் சுருக்கென்று நின்று கொண்டேன். நெஞ்சு வலித்தது. இளவரசனான நான் குலுங்கிக் குழுங்கி அழுகின்றேன். என்னைத் திரும்பிப் பார்க்காமல் மூத்தம்மா போய்க் கொண்டிருந்தா.

# உம்மா வரப்போறா

சுமைருக்கு உறக்கம் பிடிக்கவில்லை. உம்மா வரப்போகிறாவாம். அவனுக்கு மூத்ததுகள் குதிகால் மண்ணில் பாவாமல் குதியாட்டம் ஆடினர். கைகொட்டிக் கெக்கலித்தனர். சுமைருக்கு மண்டையில் உறைக்காத பொருள்களின் பெயர்களை எல்லாம் விலாவாரியாகத் தர்க்கித்து 'இது எனக்கு', 'இல்ல அது எனக்குத்தான் உம்மா கொண்டுவருவா' என்று மல்லுக்கட்டினர். சுமைர் உம்மாவை மனசுக்குள் இழுத்துவர முயற்சித்தான். ம்ஹூம், முடியவில்லை. உம்மா எப்படித்தான் இருப்பா. கற்பனையில் ஒரு உம்மாவைச் சிருக்ஷ்டிக்க முனைகிறான்.

அந்த மனோ ராஜ்ய பிம்பம் இடைவெளியில் அறுந்து விழுகிறது. உம்மாவைச் சிருக்ஷ்டிக்கவியலா இயலாமையை நொந்துகொண்டான். அவனுக்கு மண்டை வலித்தது. பிஞ்சு மூளைக்குள் சிக்குண்டிருந்த சின்னச் சின்னக் கம்பிகளில் உம்மா ஊர்ந்து நடந்தா, கடைசிவரை சிக்குப்படாமல். 'அல்பத்'தை எடுத்துவந்து நிதானமாகப் புரட்டினான். உம்மா என்று இவனுக்கு அறிமுகப்படுத்திய அலங்கார உருவத்தின்மேல் கண்கள் பதிந்தன.

ஒரு மொழு மொழு அரபிக் குட்டியை நெஞ்சுடன் நெருக்கியபடி, அதுக்குச் சோறூட்டியபடி, அக்குழந்தையைத் தூலியிட்டு ஆட்டியபடி, பொம்மைகளுடன் புரண்டு விளையாடியபடி, உம்மா போட்டோவில் வெவ்வேறு தினுசுகளில் 'போஸ்' கொடுத்தபடி இருந்தா.

உம்மாவைவிட அரபிக்குட்டி நல்ல சிவப்பு. சுமைர் உம்மாவை நன்கு உன்னித்தான். நெஞ்சுக்குள் கோழிக்குஞ்சுகள் பிராண்டின. 'அல்பத்'தை லயிப்பின்றி புரட்டித்தள்ளினர்ன். உம்மாவின் ஒய்யார வர்ணப் படங்கள் அவன் பிஞ்சுக் கண்களினூடே கீறிக்கிழித்து ஊடறுத்து குதியாட்டம் ஆடின.

காரின் ஒற்றைக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு உம்மா 'சுடிதார்' கிட்டுடன் நின்றிருந்தா. இந்தப் புகைப்படம் பதிவுத் தபாலில் வந்த நாளன்று சுமைருக்கு மூத்தவன் இவனை அருகே அழைத்து,

'டேய் தம்பி,

இதான்டா உம்மாட கார்,

அவ வரக்குல்ல கொண்டுவருவா,

ஒன்ன இதுல ஏத்திக்கிட்டுப் போவன், காரோட்டப் பழக்குவன், சரியா?' சுமைர் காரையும் உம்மாவையும் உற்றுப் பார்க்கிறான். நெஞ்சில் வெறுப்புத் தட்டியது. ஈத்தம் தோப்புகளிடை கம்பளம் விரித்து தடித்த சீரக்காரிகளுடன் கூடிச் சிரித்தபடி உம்மா ஆட்டுத் தொடைகளைக் கடித்துக் கொண்டிருந்தா. எரிச்சலுடன் அல்பத்தை மூலையில் விட்டெறிந்தான்.

உம்மாவின் சிலோன் விஜயம் மூங்கிலிடைத்தீயென அக்கம் பக்கம் பரவத்தொடங்கிற்று. ராத்தாவிடம் வந்து உம்மாவின் திக் விஜயத்தை ஊர்ஜிதப்படுத்திவிட்டுச் சென்றனர். விமான நிலையத்துக்குப் பிள்ளைகள் எல்லோரையும் அழைத்துச் செல்வதாக வாப்பா வாக்களித்திருந்தார்.

முன்கூட்டியே வேன் ஒன்றைச் சொல்லிவைத்திருந்தார். உம்மாவின் தரிசனம் பெற இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன. வீட்டிற்கு புதிதாகப் 'பெயின்ட்' பண்ணிவிட வாப்பா முனைந்தார். உம்மாவின் 'குளேசப்' கண்களுக்கு வீட்டைப் புது மெருகுடன் காட்டவேண்டும் என்ற துடிப்பு அவருக்கு.

முன்பு குச்சி வீடு இருந்த இடத்தில் பிரமாண்ட தோற்றத்தில் சகல வசதிகளும் உள்ளிட்ட கல்வீடு முளைத்திருந்தது. குவைத்திலிருந்து உம்மா அனுப்பிய 'ஹவுஸ் மெப்'பின்படிதான் வாப்பா அந்த வீட்டை கட்டி முடித்திருந்தார். வீட்டின் முகப்பைப் படம் பிடித்து அனுப்பி உம்மாவின் ஒப்புதலும் கிடைத்ததில் அவருக்குப் பெருமகிழ்ச்சி.

உம்மா வரப்போகும் நாள் வந்துவிட்டது. இரவு 'பிளைட்டு'க்கு வருவதாக கடைசித்தகவல் வந்தது. எல்லோரும் புத்தாடை அணிந்து புறப்பட்டனர். வாப்பாவைத் தவிர, சுமைர் ராத்தாவின் மடிக்குள் ஒதுங்கிக்கொண்டான். மற்றதுகள் ஜன்னலண்டையில் அமர்ந்திருந்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிட்டன. வாப்பா புத்தாடை அணியாததுபற்றி ராத்தாவுக்குப் பெரும் மனக்குறை. ராத்தா

சுமைரின் தலையைக் கோதிக்கொண்டு கதை சொன்னா.

சுமைரைப் பெற்றெடுத்து ஐந்து மாதங்களின் பின், அவன் கதறக்கதற ராத்தாவின் கையில் கிடத்திவிட்டுப்போன உம்மாவின் கதையைத்தான் சொல்லிக் கொண்டிருந்தாள்.

'டேய் தம்பி! உனக்குத் தெரியுமாடா?

உம்மா ஒன்ன எனக்கிட்டத் தரும்போது உன்ட வாயில வடிஞ்ச பாலக்கூடத் துடைக்க நேரமில்லாம ஓடினா ப்ளைட்டுத் தவறிடும் என்டு.

சுமைருக்கு ராத்தாதான் உம்மா. நினைவு தட்டிய நாள் முதல் – புட்டிப்பால் கொடுத்ததிலிருந்து மொன்டசூரி போகும்வரை– சகலதும் ராத்தாதான்.

அவன் சின்னச்சின்னத் தேவைகளுக்கும் ராத்தா என்ற உம்மாவின் மூத்த மகளைச் சுற்றிவந்தான். அவளின்றி அவள் கதையின்றி ஆதுரமாய்த் தடவிக்கொடுக்கும் அவள் அணைப்பின்றி அவன் தூங்கமாட்டான். அப்பேர்ப்பட்ட ராத்தா உம்மாவின் கதையைச் சொன்னபோது சுமைர் ஆவென்று வாய் பிளந்து கொட்டாவி விட்டான். அவனுக்கு உம்மாவின் எந்தக் கதையும் புரியவில்லை.

உம்மாவின் அபரித அலங்காரமும், இடுப்பிலிருந்த கொழுகொழு அறபிக் குட்டியும் மனதில் தோன்றி எரிச்சலூட்டின. தாயின் அரவணைப்பை யாசிக்காமல், அவ கொண்டுவரும் திண்பண்டங்களையும் விளையாட்டுப் பொருட்களையும் குறிவைத்து அவனுக்கு மூத்ததுகள் உம்மாவைத் தேடின. தன் மேல் கவிழ்ந்திருந்த குடும்பச் சுமையும், புகைச் சூழலும், அடுப்படியும் கழன்றுபோன மகிழ்ச்சியில் ராத்தா உம்மாவைத் தேடினாள்.

விரகதாபத்தின் நமைச்சலில், தனிமையில் விரட்டிய இரவுகளைச் சபித்தபடி, படக் படக்கெனத் துடிக்கும் நெஞ்சை நீவிவிட்டபடி, வாப்பாவின் கண்கள் ஆவலாய் விமான நிலையத்தின் வெளி வாசலில் திளைத்துக்கிடந்தன. இவர்களையெல்லாம் ஏமாற்றிவிட்டு உம்மா வந்துவிட்டா.

ராத்தாவைக் கட்டிக்கொண்டு கண்ணீர் உகுத்தா. மற்றப் பிள்ளைகளையும் அருகே இழுத்து, மூசி மூசின்னு கொஞ்சினா. தொலைந்துபோன கன்றுகளை எதிர்பாராத திருப்பத்தில் சந்திக்கும் பசுவின் குழைவு. அந்தக் குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் மூடி குலாவத் துடிக்கும் பரவசம். குஞ்சுகளோ சுரணையற்று உம்மாவின் அருகிலிருந்த பெரிய பெட்டியுள் இருக்கும் விளையாட்டுப் பொருட்களைத் தேடின.

பாசம் ததும்பிய உம்மாவின் விழிகள் குஞ்சுகளை வெறிகொண்டு கவ்வித்

தின்றன. சுமைர் ராத்தாவின் பின்னால் மருண்டு நின்றான். "தம்பி இஞ்சால வாடா",

"உம்மாடா, நம்மட உம்மா", தம்பிக்கு அச்சமாய் வந்தது. ராத்தா இழுத்தெடுத்து உம்மாவிடம் திணித்தாள்.

"ஏன்ட தங்கம், ஏன் ராசா பயப்புர்ராய்?"

உம்மா அவனை நன்கு பற்றிக்கொண்டு நெஞ்சுடன் நெருக்கிவைத்துக்கொண்டு முத்தினாள். திமிறித்துடித்தான். கரும்பூதமொன்று தன்னைக் கட்டிப்பிடித்து கழுத்தை நெரித்துக் கொல்லப்போவதான பிரமை. வியர்த்துக்கொட்டியது. திமிறிக்கொண்டு விடுபட்டு ஓடிப்போய் ராத்தாவிடம் ஒண்டிக்கொண்டான். பின்னால் மறைந்துகொண்டு கழுத்தை நீட்டி மிரட்சிமிகு விழிகளால் உம்மாவை உற்றுப் பார்த்தான்.

போட்டோவில் பார்த்த செழுமை இல்லைதான். சற்று மா நிறம். முகத்தில் ஏமாற்றத்தின் பிரதிபலிப்பு. உம்மா இழுத்துவைத்துக் கொஞ்சியபோது இவன் நாசிக்குள் திமிறிய மட்டரக 'சென்ட்' வாசனை வயிற்றைப் பிசைந்தது. சற்று ஒதுங்கி நின்ற வாப்பாவை உம்மா பார்த்த பார்வை அந்த ஏளனிப்பில் வாப்பா ஒரு பத்து வயது தாண்டிப்போனார்.

'எப்படி சுகமா?'

மனுசனுக்குள்ள வரக்குள்ளயாக்கும் ஒரு நல்ல உடுப்பு இல்லியா உங்களுக்கு,

சனம் என்னத்த நினைக்கும். காசில்லாட்டிக் காரியமில்ல,

நான்தான் மாசம் தவறாம சுளையா அனுப்புறேனே'.

வாப்பா உடைந்து சிதறி, கூனிக்குருகி, துகள் துகளாய்ப் பிய்ந்து போனார். அவற்றின் மீது காலூன்றி உம்மா நடந்து போனா. வாப்பாவின் நெஞ்சு கொதித்தது.

உம்மாவை ஏறிட்டார். வாப்பாவை எதிர்த்து ஒரு வார்த்தையேனும் பேசாத அந்த உம்மாவை அவரால் காண முடியவில்லை. கதவிடுக்கில் மறைந்து நின்று, 'அவரில்ல' என்று பதில் கூறும் உம்மாவை வாப்பா தேடிக் களைத்தார்.

வேன் ஊரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. வாகனத்துக்குள் மனங்களின் கடாமுடா. உம்மாவின் சிந்தனைகள் எண்ணிமாளா. சுமைர் ராத்தாவின் மடிக்குள் சுருண்டிருந்தான். உம்மாவின் இடுப்பில் பார்த்த கொழுகொழு குட்டியை தேடிப்பார்த்தான். அது அவன் கண்களில் அகப்படவே இல்லை. அதன்மீதுள்ள தன் எரிச்சலையும் கோபத்தையும் தீர்த்துக்கொள்ள பிஞ்சுக்கரங்கள் துறுதுறுத்தன. அக்குழந்தைபற்றிக் கேட்பதற்கும் தயக்கம்.

'வா மகன்!

நான்தான்டா உன்ட உம்மா,

வா ராசா, காரெல்லாம் கொணந்திருக்கன். வந்து பாரு மகன்'

உம்மா கடைசியாக வீட்டை அடைந்து கெஞ்சிப் பார்த்தா. சுமைர் மசிவதாய் இல்லை. 'நீ உம்மா இல்ல போ! ராத்தாதான் உம்மா ராத்தா பசிக்குது சோறு தாவன்' அரற்றத் தொடங்கிவிட்டான். உம்மா கண்களைத் துடைத்துக்கொண்டா.

இரவு படுக்கைக்குச் சென்றுவிட்ட பின்பும் உம்மாவுக்கு இருப்புக்கொள்ளவில்லை. ராத்தாவின் அறைக்குள் பதுங்கிப் பதுங்கிப் போகிறா! ராத்தாவை அப்பிக்கொண்டு அயர்ந்து தூங்கும் தம்பியை ஆதுரத்துடன் தடவிக் கொடுத்தா. ஆசை தீருமட்டும் கொஞ்சினா. பின் அவனைத் தூக்கிச் சென்று தன்னருகே அணைத்துக்கொண்டு படுத்துவிட்டா.

எத்தனை மணிக்கு உம்மா கண் விழித்தாவோ தெரியாது. அருகே சயனித்திருந்த தம்பியைத் தேடினா. சிலமனில்லை.

பரபரப்புடன் ராத்தாவின் அறைக்குள் எட்டிப் பார்த்தா. தம்பி ராத்தாவை இறுக்கிப் பிடித்தபடி நல்ல உறக்கம். உம்மா வெதும்பிய மனதுடன் திரும்பிச்சென்றா. அந்த தாய்மையின் திணவைத் தீர்த்துக்கொள்ள எந்தப் பிள்ளையும் இணங்கவில்லை. பிரபஞ்சமே கழன்று அவவை விட்டுப் போய்விட்டதென உம்மா கருகினா. முகம் குப்புற கட்டிலில் விழுந்தா. சற்றைக்கெல்லாம் உம்மாவின் விசும்பல் ஒலி அறை முழுக்க பிசுபிசுத்தது.

# விலங்கு

கனத்த இருள் ஊரை மூடிக்கிடந்தது. அதி பாதுகாப்பரண்கள் பல தாண்டி வந்து மின்மாற்றிகளைச் சேதப்படுத்திவிட்டுப் போயிருந்தனர். சந்திகள் தோறும் பாவித்த 'ரயர்கள்' எரிந்துகொண்டிருந்தன. துருப்பிடித்த வாட்களுடன் வீதிக்கு வீதி இளைஞர்கள் ஆவேசமாய் நின்றிருந்தனர். இவன் நீண்ட யுகங்களுக்குப் பின் திரும்பியபோது ஊர் இப்படித்தான் இவனை வரவேற்றது.

இவனைச் சூழ்ந்துகொண்டு குடும்பத்தினர் வினோதமாய் பார்த்தனர். உம்மாவுக்கோ இருப்புக்கொள்ளாத பூரிப்பு, இவன் அடர்ந்த கேசத்தை உணர்ச்சியில் கோதிவிட்டா. பிரிகையில் குருத்துவிட்டிருந்த தங்கைகள் மலர்ந்திருந்தார்கள். வாப்பா மட்டும் ஈசிச்சேரில் உடம்பைத் திணித்து நிகழ்வன அவதானித்துக்கொண்டிருந்தார்.

ஊர் மிகவும் இளைத்துப்போய்விட்டது. மாலை ஆறு மணிக்கெல்லாம் கடைப்பலகை சாத்திவிட்டு வீடுகளுக்குள் அடைக்கலமாயினர் சனங்கள். இவனின் பால்யத் தோழர்கள் காக்கி 'யூனிபாமும்' தோளில் கணக்கும் துப்பாக்கியுமாக உலா வந்தனர். சிலர் பரிச்சயமற்றவர்களாகக் காட்டிக்கொள்ள முனைந்தும், இவன் பெயர்களைச் சொல்லிக் குசலம் விசாரிக்க அசௌகரியமாய்ச் சிரித்துவிட்டுப் போயினர். ஊரின் சனத்தொகையைவிட படையினரின்' கெடுபிடி அதிகரித்திருப்பதை உணர்ந்தான். திடீரென முளைத்த இவனை ஐயத்துடன் மோப்பமிட்டனர்.

"இவ்வளவு காலமாய் எங்கிருந்தாய்?"
"கொழும்பில்" "ஏன்?"
"அங்கதான் வேலை",
"இப்ப எதற்காக இங்கு வந்தாய்?"
"இதுதான் என் சொந்த மண்"

நான் கேட்கவேண்டியதை யாரோ கேட்கிறார்கள். இங்கு நான் வருவதற்கும், வாழ்வதற்கும் எனக்கு உரிமையுண்டு. நான் யாருடைய அனுமதியையும் எதிர்பார்க்கத் தேவையில்லை. அவர்களுடன் மிகக் கடுப்பாய் உரையாடியிருக்க வேண்டாமென கூட வந்த நண்பன் எச்சரித்தான்.

தாய் மண்ணில் தான் அவமானப்பட்டதை நினைக்கையில் மனம் பதறிற்று. நெடுநேரமாகியும் ஆத்திரத்தில் தேகம் அதிர்ந்து நடுங்கிக்கொண்டிருந்தான், 'ராஸ்கல்'. பற்களை நெறு நெறுவென கடித்துக் கொண்டான்.

இரவில் ஒரு நூறுதரமேனும் திடுக்கிட்டு விழித்தான். பாயில் குந்திக்கொண்டு, வெளியே உதிரும் சத்தங்களைக் கூர்ந்து கவனித்தான். 'இதுவெல்லாம் எங்களுக்குக் கணக்கில்லை என்பதுபோல் குடும்பத்தினர் ஆழ்ந்த துயிலில் இருந்தனர். ஜன்னல் கதவுகள் தடதடவென நடுங்கின. பூமியதிர்ச்சி ஏற்பட்டதுபோல் அவனும் பாயுடன் சேர்ந்து ஆடினான். கூரை முகட்டை உரசிக்கொண்டு செல்லும் கடூரச் சத்தங்கள் எதைப்பற்றியும் அலட்டிக்கொள்ளாமல் ஊர் உறக்கத்தில் மௌனித்திருந்தது.

விடிந்ததும் ஊரின் கோடிக்குச் சென்றான். பால்யத்துச் தோழர்கள் வாழும் பகுதி – விடுதியிலும். 'ரூமெய்ட்டுகள்'. முன்பெல்லாம் இரவின் முற்பகுதியை இங்கேதான் கழித்தான். முன்பனி விசிறும் நிலாக்காலங்களிலும் இங்கு வந்திருக்கிறான். பரந்த பச்சைப் புல்வெளியும், மெத்தென்ற அதன் குளிர்மையும் தாமரைக் குளத்தில் முழுகிவிட்டு, ஈரம் சொட்ட இடறிப் போகும் காற்றும் இவன் நேரத்தைக் கட்டிப் போடும்.

வறுத்த கடலையும் 'பிளாஸ்க்'கில் 'டீ'யும் காவிக்கொண்டு நண்பர்கள் வருவார்கள். அரசியல், இலக்கியம், சமூகம், காதலெனக் கலைகள் விரியும். சில விவாதங்களில் இவன் முரண்பிடித்து 'உம்'மென்றிருப்பான். சில நிகழ்வுகளில் இவன் ஒரு தினுசு. பிடிகொடுக்காமல் தடித்த குரலில் விவாதிப்பான்.

எதிரியை மூர்க்கமாய்த் தாக்கும் ஆவேசம் விவாதத்திற்கு ஆதாரங்கள் வலுவூட்டும். ஒன்றிரண்டு இரவுகளில் அப்படியே படுத்து உறங்கிப்போவார்கள். நரிகள் மட:டும் ஊளையிட்டுத் திரியும். மாரி ஓய்ந்து குட்டைகள் ததும்பும் பருவங்களில் சற்று நுளம்புத் தொல்லை. தவிர தவளைகளின் சங்கீதமும் காதை இம்சைப்படுத்தும்.

அந்தக் காலப் பசுமை மிகு நினைவுகள் தவிர வேறொன்றும் எஞ்சியிருக்காத பரந்த வெளி அவன் முன் வியாபகமாய் நின்றது. சற்றுத் தொலைவில் தீப்பெட்டி உருவத்தினாலான குடிசைகள். இடம்பெயர்ந்தவர்களாய் இருக்கக்கூடும். அதனை அண்டினாற்போல் மண் மூடைகள். அதுதான் ஊரைப் பிரிக்கும் எல்லையாக இருக்கவேண்டும். துப்பாக்கி சுமந்த இளம் பொடியன்கள் 'சென்றிகள்' முன் சாவகாசமாய் கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

இவன் காலாற நடந்து திரிந்த பச்சைப் புல்வெளியின் எந்த எச்சங்களுமில்லாதது மனதை நெருடிற்று. நண்பர்களைத் தேடிப்போனான். அவர்கள் முற்றத்தில் பாய்

விரித்து கலகலப்பாய் இருந்தனர். இவனைக் கண்ட அதிர்வில் பிரமித்து, பின் பாய்ந்து வந்து ஆரத்தழுவிக் கெக்கலித்தனர். வாழ்வின் மீதி நாட்களையும் நம்பிக்கையுடன் துளிர்க்க வைக்கும் அதிசய நட்பு. இவனையே விழுங்கி விழுங்கிப் பார்த்து செல்லமாகக் கிள்ளிக்கொண்டனர். மிகுந்த கூச்சத்துடன் நெழிந்து அவர்களின் சில்மிசங்களை மானசீகமாய் அங்கீகரித்தான்.

அவர்களின் வீட்டு ஜன்னல்கள் களவாடப்பட்டிருந்தன. கதவுகளும் துளையிடப்பட்டிருந்தன. சில வீடுகளில் வேய்ந்திருந்த ஓடுகளும் சிதறிக் கிடந்தன. இவன் மிகுந்த துன்பத்துடன் அவதானித்தான். எல்லைவரை மரணம் வந்துவிட்டுப் போயிருக்கிறது. நண்பர்களையும் அவர்தம் இல்லங்களையும் வாஞ்சையுடன் பார்த்து முகம் கறுத்தான். அவர்களோவெனில் இதுவெல்லாம் சகஜம் என்பதுபோல் மகிழ்ந்திருந்தனர்.

இவனின் அஞ்சாவாசம் பற்றியும், திருமணம் பற்றியும் துளைக்கத் தொடங்கினர். முதற் காதலில் தோல்வியுற்று ஊரைவிட்டே ஒதுங்கியிருந்த இவனின் புத்திசாலித்தனத்தைத் தூற்றினர். அவளைப்பற்றிய நெஞ்சின் வலிகளை நிரலிட்டு ருசித்தனர். இவன் காதலுக்கு முன்பு பணிவிடை செய்த ஒருவன் காதல் கடிதங்களில் வரைந்தனுப்பிய ஓவியங்கள், கவிதைகள், இரவல் பொன்மொழிகளை நினைவு கூர்ந்து கிண்டலடித்தான். தற்போது அவள் திருமணம் முடித்து ஒரு பிள்ளையின் தாய் என்டாலும் வடிவுதான்' என்றான் மற்றவன். இவன் வருத்தமான புன்னகையுடன் அவர்களின் கேலிகளில் சுவாரஸ்யமானான்.

நண்பர்களின் குழந்தைகள் விரல் சூப்பியபடி முற்றத்தில் விளையாடினர். அவர்கள் ஏக நிலத்தில் குடியிருப்பதால் மனைவியரும் தோழியராய் ஆகிவிட்டிருந்தனர். மிகுதமாய் பெண்களின் சிரிப்பலைகள், இன்னும் பெண்களுக்கே உரிய 'க்ளுக்' ஒலிகளைக் கேட்டான். இவனுக்கென ஒரு துணையின் ஆக்கிரமிப்பைக் கடுமையாக உணர்ந்தான்.

காலச் சுழியில் அடித்துச் செல்லப்பட்ட இவன் முதற்காதலின் திவ்யம் மனசுக்குள்ளே குமுறிக்கொண்டிருந்தது. புதிதாக உணர்ந்த சமூகப் பிரக்ஞை வேறு நிம்மதியைப் பறித்துவிட்டிருந்தது. உன் பெரியம்மாவின் மகனையும் அவர்கள் பிடித்துச் சென்று ஒரு வருசமாயிட்டு, நீ ஏன் அதற்கும் வரவில்லை. அவ உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருந்தா' என்றான் ஒருவன்.

அந்தக் கோரக் கனவை நண்பர்கள் நினைவூட்டாமல் இருந்திருப்பின், இன்னும் எவ்வளவோ சிரித்திருப்பான். வெகு நாட்களுக்குப் பின் கண்களில் நீர் தளும்ப, அடிவயிறு சுள்ளென வலிக்க சிரித்த பலத்த சிரிப்பொலிகள் பலநூறு பளிங்குக் கிண்ணங்களாய் காற்றில் வெடித்துச் சிதறுவதான பிரமை. அழுதுகொண்டிருந்த பிள்ளை, முலையைத் திணித்தவுடன் சட்டென

அடங்கிவிடுமே அவ்வாறு அவன் சந்தோசங்களும் சுருங்கிப் போயின.

மரவட்டை போல் மனமும் ஒடுங்கிப் போனது. பெரியம்மாவை நினைத்துப் பார்த்தான். தன் ஒரே மகனில் பாசம் மிகக்கொண்டு குழைந்தவள் வறுமைக் கோட்டைத் தாண்டியும் மகனைக் கோடீஸ்வர சுகத்தில் திளைக்க வைத்தவள். அப்பாவியான அவனின் முகப்பொலிவு மனசில் வந்து அடாத்தானது. அவன் எப்படித் துரோகியாயிருப்பான். ஒரு வருசமெனில் பெரியம்மா உயிர்வாழ்வது அதிசயந்தான். அவனும்தான்.

கருக்களில் விடைபெற்றுக்கொண்டு நண்பர்களைப் பிரிந்தான். கவச வாகனங்கள் வீதியை துவம்சம் செய்தபடி வந்துகொண்டிருந்தன. அதன் வெறியில் வேலிகள் அதிர்ந்தன. சைக்கிளை உருட்டிக்கொண்டு ஓரமாகப் போனான். இராணுவ 'ட்றக்குகள்' கடக்கும் வரை பிற வாகனங்கள் வீதி மருங்கில் ஒதுங்கி நின்றன. ஓர் அராஜகப் புயல் வந்து சடுதியில் சேதாரப்படுத்திவிட்டு ஓய்ந்ததைப்போலிருந்தது.

ஒட்டு மொத்தமாக கிராமத்தை மனசுக்குள் இழுத்து வந்து கோர்த்துப் பார்த்தான். மிக அசிங்கமாகவும், பரிதாபமாகவும் இருந்தது. அதன் வனப்பு. பெரியம்மா இவனைக் கண்டதும் 'ஓ'வெனக் கதறிவிட்டா. தன் மகனின் வயதில் சில வருடங்கள் சளைத்த இவனில் அபரித அன்பைப் பொழிந்தா. 'காக்கா மௌத்தாகிட்டாரு மகனே!' அவ அப்படிக் குரலெடுத்து ஒப்பாரி வைக்கையில் மையத்து வாசனையை முகர்ந்தான். இதயம் உருகி இவனுக்கும் கண்களினூடே வழிந்துகொண்டிருந்தது.

பெரியம்மா இன்னும் எதுவெல்லாமோ சொல்லி மாண்டா. இவனுக்குப் பிரியமான பதார்த்தங்களை நொடியில் செய்து அருகிலிருந்து ஊட்டிவிட்டா. இழந்துபோன தன் மகன் கிடைத்துவிட்ட ஆயாசம் அவவுக்கு. இவனின் மேவாயைத் தடவி அருகிலேயே தரித்து நின்றா. இவனின் ஐஸ்வர்யங்கள் ஒரே நேரத்தில் கூடிவந்த புளகாங்கிதத்தை அவவின் ஆகர்சிப்பில் அனுபவித்தான். இவன் விடை பெற்று வீடு வந்த பின்பும் நடையில் நின்ற பெரியம்மாவின் நீர்விழிகள் மனசை அறுத்தன.

நாளை திரும்பவேண்டும். தொப்புள் கொடி அறுந்துவிட்டபின் தாயின் கருவோடு தொடர்பற்ற குழந்தையாய் தவித்தான். நிகழ்வுகள் அவனுக்குத் திருப்தியாக இல்லை. மலர்ச்சியான வாழ்வும் சுதந்திரத்தின் வாடையுமில்லாத கிராமமாயிற்றுஊர். மஃரிப் தொழுதுவிட்டு (மாலை வணக்கம்) வந்தால் வீட்டோடு கட்டுண்டு கிடப்பது இவனுக்கு விலங்கிட்டதுபோலிருந்தது.

நிலாக்காலங்களில் முற்றத்தில் கூடியிருந்து அரட்டை அடிக்கும் சுதந்திரமும்

இங்கில்லை. இரவில் உரத்துச் சிரிக்கவும் பஞ்சப்பட்ட மக்கள் வாழும் தேசமாயிற்று. இது.

இந்த நெருக்குவாரங்களிலிருந்து அவசரமாகத் தப்பிச்செல்லவேண்டும். அவசியம் படிக்கவேண்டிய நூற்களை தேர்வு செய்து பொதி செய்தான். சில அந்தரங்கக் கடிதங்களும் கோவைகளும் தேவைப்பட்டன. பைல்களைக் குடைந்து தேடி எடுத்தான். பயணத்துக்கான சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்ட பின்பும் இரவு நீடித்திருந்தது. தூக்கம் வலிந்தும் வராமல் அடம்பிடித்தது.

சாமத்தில் எழுந்து உம்மா, இவனுக்கென பிரியமான நொறுக்குத் தீனிகளைத் தாயாரித்தாள். கைகளைப் பிடரிக்கு முட்டுக்கொடுத்தவாறு கூரையை வெறித்துக் கிடந்தான். தாய் மண்ணில் அவமானப்பட்டதும், இழந்துபோன தன்மானமும் நெஞ்சைப் பிழிந்தன.

தூரத்தில் வாகனங்களின் இரைச்சல், அவர்களின் 'ட்ரக்கு'களைத் தவிர வேறொன்றும் செல்லமுடியாத – அகால நேரம் வெடியோசைகள் ஐதாக முழக்கம் கொடுத்தன. பாரிய செல்கள் சீறிக்கொண்டு, வெடித்துக் குமுறுவதைக் கேட்டுக்கொண்டே புரண்டு படுத்தான்.

விடைபெறும்போதுஉம்மா புலம்பித் தீர்த்தா. மாதத்தில் ஒரு தடவையேனும், இவனின் தரிசனம் வேண்டுமென இறைஞ்சினா. வாப்பா தோளைத்தட்டி விடை தந்தார். உதடுகள் துடித்தாலும், அவர் ஒன்றும் உதிர்க்கவில்லை. உணர்ச்சிக் கொதிப்பில் அவர் இயல்பு அப்படித்தான்.

சின்னவன் கால்களைக் கட்டிக்கொண்டு நானும் வாறேன் என அடம்பிடித்தான். தங்கைகளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டான். இவனைப் பிரியும் அதிர்ச்சியில் – கலங்கி நின்றனர். நேற்றிரவு இங்கு வரக்கூடாதெனத் தீர்மானித்த முடிவை மனம் பரிசீலிக்கத் தொடங்கியது.

மனிதனை இயல்பாகவே கட்டிப்போடும் பாசமும், அன்பின் அதிர்வும் இவனையும் கலங்கடித்தன. தன் பாதங்களில் பூ விலங்குகள் இடப்பட்டிருப்பதை மானசீகமாக உணர்ந்தான். இவன் மனசுக்குள், புதிதாகப் போடப்பட்ட பூட்டைத் திறக்கும் சாவிகள் திடீரெனக் காணாமல் போயிற்று. 'மறுகா எப்ப?' என்ற உம்மாவின் ஏக்கமிகு கேள்விக்கு 'இன்ஷாஅல்லாஹ்' 'அடுத்த மாசம்' என்றுவிட்டு நடந்தான். மனமோ இழக்கக் கூடாததை இழந்துவிட்ட அவதியில் காற்றில் மிதந்தபடி, பஸ்ஸை எதிர்பார்க்கத் தொடங்கினான்.

# நினைந்தழுதல்

நேத்துவந்த மாதிரித்தான் இரிக்கி, அப்படியும் இப்படியுமா அஞ்சு வருசமாச்சு. கட்டின கச்சையோட, காடு மேடெல்லாம் ஏறி, ஸ்கூல்லையும், பள்ளிவாசல்லையும் மாறி மாறிப் படுத்து, இப்ப தீப்பெட்டிக் குடிசையில் ஒதுக்குப் புறமாய் இருக்கம். நெனச்சா சிரிப்பா வருது. எப்படியெல்லாம் வாழ்ந்தன் தனியா பங்களா என்ன, 'அயர்ன்' குலையாத சேட்டென்ன, நேரத்துக்கு ஒரு களிசான் என்ன, 'கோல்ட் மொடல்' கடியாரம் என்ன. சா ஒரே கலக்கல்!

இப்ப என்னடான்டா கால் நீட்டிப்படுக்க என்ற குடிசர அகலம் போதாது. நேராப் படுத்தா கெழிஞ்சி விலாவ நிமித்தி படுக்கேலா தம்பியோ தங்கச்சியோ நசுக்குப்படுங்கள். அப்ப ஆழுக்கொரு 'றூம்', றூமில பே<sup>F</sup>ன் இருந்திச்சி, 'குஷன் பெட்' இருந்திச்சி. எல்லா வசதியும்தான் இருந்திச்சி. நேரம் தவறாம சாப்பாடு, கை நிறையக் காசு. கேட்ட எல்லாத்தையும் வாங்கித்தர வாப்பா, என்னச் சுத்தி ஏகப்பட்ட கூட்டாளிமார். அப்ப என்னப் புடிக்கேலா! ராச குமாரன்தான்.

என்னெ மெதுவா உத்துப் பார்க்கிறன் அரிதட்டுப்போல பொத்தல் விழுந்த சாறன். கழுவக் கழுவ சிரிக்காத சேட், எங்கயாச்சும் வெளிய போறன்டா உடுத்திக்கொள்ள சாறனும் 'பேமன்டுல வாங்கின சாயம்போன ஷேர்ட்டும். ராஜ வாழ்க்க இனி கனவுலதானா?

நேத்துத்தான் 'ரேஷன்' எடுத்தன். கியூவில் நின்டு உழுத்துப்போன அரிசும் பருப்பும் மாவும் எடுத்தாச்சி. 'கோப்ரெட்டிலயும்' ஏசிப்புட்டானுகள். விருப்பமென்டா இந்த அரிசிய தின்னுங்க இல்லாட்டி கொட்டுங்க. நாங்க என்ன செய்ய. இதத்தான் ஒங்கட தலைவர்மார் அனுப்புறாங்க. வாறது மாரி காலம். 'போரூட்'காரனும் கிடுகு கொண்டுவரல்ல, நாங்க வந்த சூட்டுல, நீ முந்தி நான் முந்தின்னு விழுந்து விழுந்து பார்த்தாங்க.

இப்ப சில ஆட்கள் இந்தப் பக்கமும் தலவச்சிப் படுக்கிறதில்ல. நிவாரணச் சாமான் கொடுக்கிறதிலயும் கொஞ்சப்போருக்கு நல்ல அடி. சாமான் பங்கிர்றம் என்டு சொல்லி சைட்டால வெட்டுராங்க. கேட்டா அது தேத்தண்ணிச் செலவுக்கெண்டு மழுப்புறாங்க. என்ன செய்றது வேலியே பயிற மேயுது.

இன்டக்கி உம்மாவுக்கு மருந்து முடிஞ்சி கையில ஒரு சதக் காசுமில்ல. ராவக்கித் தூக்கம் வராம அவதிப்படுவா. இஞ்ச ஆருக்கிட்ட கைமாத்துக் கேக்குற.? பொழுதுபட்டாப் போதும் எல்லோரும் வானத்த அன்னாந்து ஏங்கிக் கிடக்குதுகள். இப்ப முகாமுக்குள்ளேயும் நிம்மதியா படுக்கேலா. என்ன இழவோ திடீர் திடீருன்னு வரிசையாப் பத்தி எரியுது. மரத்தால விழுந்தவன மாடு மிதிச்ச கததான்.

அஞ்சு தங்கச்சிமாரயும் நெனச்சா மனசு பத்தி எரியுது. உடம்பெல்லாம் நடுங்குறதப்போல இரிக்கி. நாலு பேருக்குக் கலியாண வயசுதான். முன்னென்டா போட்டி போட்டானுகள். இப்ப ஒரு நாயும் என்னென்டு கேக்குதில்ல. போன மாசம் மூத்தவளுக்கு ஒருத்தனப் பேசினன். அவனும் என்னப்போல உடுத்த உடுப்போட வந்தவன்தான். இப்ப ஒரு கடயில கூலிக்கி நிக்கிறான்.

அம்பதாயிரம் சீதனம் கேட்டான். நெலம தெரிஞ்சும் கழுத்த நெரிச்சிட்டான். மனசு ஒடஞ்சி போச்சி. அன்டு ராவல்லாம் அழுதன். எங்கட ஊருக்குப் போகனும்போல இரிக்கி. எங்கட வீடு, வயல், தோட்டம், கடயெல்லாம் இருக்கோ. தொண்டக்குள்ள விழாங்கா பொறுக்குற மாதிரி இரிக்கி. கண்கள் பீலிமாதிரிக் கொட்டுது. அவங்களுக்கு எவ்வளவுதான் அள்ளிக்கொடுத்தாரு வாப்பா. கடசியில அவரையும் பணயம் வெச்சிட்டு எங்கள மட்டும் அனுப்பினாங்க. இதுவரை அவரப்பத்தி எந்தச் செய்தியும் இல்ல. அந்த ஏக்கத்தில படுத்தவதான் உம்மா.

தங்கச்சிகளுக்கு ஒரு நல்ல உடுப்பு இல்ல. ஸ்கூல் உடுப்புப் பிஞ்சிட்டுன்டு நேத்து சின்னவள் சொன்னாள். வீட்லயும் அந்த உடுப்ப உடுக்கிறதால பிஞ்சிட்டுன்டு எனக்குத் தெரியும். எங்களிட்டக் கைநீட்டி சம்பளம் வாங்கினவனெல்லாம் இப்ப நல்லா இருக்கானுகள். சும்மான்டாலும் வந்து கேக்கானுகலில்ல.

நன்றிகெட்ட நாய்கள். இப்ப இந்த வாழ்க்க பழகிப்போச்சி. பறவக்கூடு மாதிரி கொட்டிலுக்குள்ள அடஞ்சி கெடந்து, 'டொய்லட்' கியூவில் நின்டு குழாய்க் கிணத்துல மல்லுக்கட்டி முகம் கழுவி, கோதுமரொட்டியும் தேங்காச் சம்பலும் திண்டு நல்லாப் பழகிப் போச்சி. ஒண்டா ரெண்டா. அஞ்சு வருசமா பழகிட்டு, இந்த வாழ்க்க இயல்பாயிடிச்சி.

மொதலன்டா அகதிகள் என்ட அனுதாபத்தோட உதவினாங்க. இப்ப ஒரு மாதிரியா ஏதோ சனியங்கள பாக்கிறாப்போல பாக்கிறாங்க. கஷ்டம் என்டு ஆருக்கிட்ட சொன்னாலும் உங்களுக்கென்ன சும்மா இருந்துகொண்டே மாசாமாசம் சாமான் எடுக்கிறீங்க. இடைக்கிடை 'ரெட்குரோஸ்' காரனும் கவனிக்கிறான். குஷிவாழ்க்க, வயிறு பத்தும், மனம் முழுக்க நெருப்புத்தணல் தகிக்கும்.

நாமளும் அடுத்தவன நம்பி இருக்கப்படா. ஏதாச்சும் வேல செஞ்சி உழைக்கனும். கூலி வேலக்கிப் போனன். இப்ப என்ன பெரிய ஹாஜி மொதலாலிமாரெல்லாம். சிங்களவன்ட வயல் வேலக்கி போறாங்க. எங்கட ஊருல அவக கொஞ்சப்பேரு காருலதான் பள்ளிக்கு வருவாக. மனுஷன மதிக்கத்தெரியாம இருந்தாங்க. இப்ப அரும விளங்கும். மம்மட்டியோட வயல்லயும், காட்டிலயும் அலயக்கிலயாவது அல்லாட நெனப்பு வராமலா போகும்..

நானென்டா இப்படி ஆகிடுவன் என்டு கனவிலயும் நெனக்கல்ல. நான் மட்டுமா எங்கட ஊருல ஒருத்தரும் நெனக்கல்லத்தான். நாம நெனக்கிறது நடக்கனுமா? நடந்துதான் இரிக்கா? எங்கட வாப்பா என்ன செல்லமா வளத்தாரு. 'இப்ப மத்தவங்கட வாசல்ல நின்டு விறகு தரிக்கிறயா?' என்டு கேக்கிற நெலம. முதன்முதலா ஒரு வீட்டு வாசல்ல நின்டு கேட்டன். வெப்பிசாரம் வெடித்து அழுக வந்திட்டு. இப்ப பழகிட்டு. எல்லாரும் ஒரே 'லெவல்'. ஒரே அளவான வீடு. ஒரே ருசியான சாப்பாடு. மண்டி கலந்த தண்ணி.

என்னமோ சமத்துவம் பேசுறானுகள். சமத்துவம் எங்கயும் உயிர்வாழல்ல. எங்கட முகாமுக்க வந்து அதப்புரிஞ்சிக்கலாம்.

சமத்துவம் இங்க மட்டும் நல்லா வாழுது. என்னதான் இருந்தாலும் வெறுங்காலோட நடந்த என்ர சொந்த ஊரப்போல வருமா இஞ்ச?

இப்ப என்னமோ வரவர ஊருக்குப் போகனும்போல, அந்த மண்ணுல வெறுங்காலோட நடக்கனும் போலவும் குளத்தோரக் கட்டுல வரிசையா நிக்கிற பன மரத்தில நொங்கு வெட்டிக் குடிக்கனும் போலவும் இருக்கு. என்ட ஊர் பள்ளி, ஸ்கூல் எல்லாம் சிதிலமா கிடக்கும். டி.வி.யில காட்டினாங்க. இஞ்செ வந்து கொஞ்சப்பேரு தங்கட புள்ளயளயும் மனைவிமாரையும் வெளிநாட்டுக்கு அனுப்பி டி.வி. எல்லாம் எடுத்து நல்லா இருக்காங்க.

சிலவங்க ராவும் பகலும் படமா பாத்துத் தள்ளுறாங்க. எப்படி இந்த நிலயில ஜொலியா இருக்கிற? இப்ப முந்தியப்போல வேல செய்ய முடியல்ல. காலம தோட்ட வேல செய்யப்போனன். மத்தியானம் வெயிலென்டா மூளைய உருக்கிட்டு. சரியான சாப்பாடு இல்ல. கண்ண சொருகிக்கிட்டு வந்தது.

வரப்புல மயங்கி விழுந்திட்டன். இன்டக்கி வேல செஞ்சா உம்மாக்கு குளிசயும் வீட்டுச் சாமான்களும் எடுக்கலாம் எண்டுதான் போனன். எல்லாம் போச்சி. நாம நெனக்கிறது என்னதான் நடக்குது. சிங்களவன் எண்டாலும் பரவாயில்ல. அரநாள் சம்பளம் தந்தான். உம்மாட குளிசய மட்டும் எடுத்தன்.

தம்பிமாரயும் குமருகளயும் காணும்போதெல்லாம் ஈரல் கருகுது. என்ன செழிப்பா இருந்தவங்க. மூஞ்செல்லாம் சூம்பிப்போய்ட்டு. முருங்கக்கா பிஞ்சுபோல ஆயிட்டாங்க. வாய்விட்டுக் கத்தனும்போல இருக்கு. இளயவள் இன்னும் பெரிய மனுசி ஆகல்ல. அவளும் இண்டக்கோ நாளக்கோ. வாழ்க்க எப்படி இருக்கும்னு இப்பதான் புரியுது. பகலெல்லாம் வேல செஞ்ச அலுப்பு. மேலெல்லாம் நோகுது. இவங்களும் எங்கட ஆக்கள நல்லா வேல வாங்குறாங்க. அகதி என்டா குறஞ்ச ரேட். கூடின வேல.

சூரியன் சாஞ்சி கருக்கல் வந்துட்டு குடிசயலுக்குள்ள குப்பி லாம்பெல்லாம் வக்கிறாங்க. முற்றத்தில் பாய் விரிக்கிறாங்க. இனி எல்லா குமர் பிள்ளயளும் பொண்டுகளுமாக் கூடிப்பேசி அரட்டதான். பகலக்கி வெளியில இருக்கிறது குறவுதான். எண்ட தங்கச்சியளும் பாய விரிக்குதுகள். நல்லா பால் வானம் வெளுத்தமாதிரி இருக்கு. நான் குடிலுக்க நுழயுறன்.

உம்மா கால் நீட்டிப் படுத்துக் கிடந்தா. கண்ண மூடிக்கிடந்தா. சொதசொதப்பான அவவின்ற தல முடிய கோதிவிர்ரன். முழிச்சிப்பார்த்தா குளிசய எடுத்துக் குடிக்கவச்சி தூங்கச் சொன்னன். கனிவா பார்த்தா. செத்தயில் செருகி வச்ச பீடிக்கட்டுல ஒரு பீடிய உருவி எடுக்கன். அடுப்படியில இருந்த ரெண்டாவது தங்கச்சி ரொட்டிக்கி மாப்பிசையிறா. கொள்ளிக் கட்டயால பீடிய பத்த வக்கிறன். வெளிய வந்தன். எல்லா முற்றத்திலும் சனங்கள். மண்புட்டி மாதிரி வடிவா இருந்தது.

ஒதுக்குப்புறமாய் இருந்த புளிய மரத்த நோக்கி நடக்கிறன். சாக்குக் கட்டில விரிச்சி மல்லாந்து படுக்கன். பீடிய உரிஞ்சி புகய விட்டன். சொகமா இருந்தது. வானத்துல நெறய வெள்ளிகள். காட்டுப் பூப்போல பூத்துக் கெடக்குது. மெல்லிசா காத்து வீசுது. புளியம்பூ எண்ட ஒடம்பெல்லாம் சொரியிது. ஒண்டயும் நெனக்கேலா தல குழம்புது. தாறுமாறா நெனப்பு ஓடுது. பர்சானா மட்டும் அடிக்கடி நெஞ்சுக்குள்ள வருவாள்.

கடசியா பிரியேக்குள்ள என்னக் கட்டிப்புடிச்சி அழுத அழுகதான் நெஞ்சில கிடக்கு. அஞ்சு வருசத்துக்கு முந்தி எண்ட உசிரெல்லாம் அவள்தான் ஓடித்திரிந்தாள். இப்ப நெனச்சாலும் எண்ட கல்பு குளிருது. அவள்ர மோகனமும், பளீரழகும் கண்ண மூடினாப் போதுமே! மதக ஒடச்சிக்கிட்டு வெள்ளம் பாயுமே அப்புடி குபுகுபுன்னு கனவில குதிச்சு வருவாள். இப்பயும் அப்படித்தான் வாராள்.

போன மாசம் புத்தளத்தில கலியாணமாம். நல்லா இருக்கட்டும். அவள்ர நெனப்பு மரவட்டயப் போல உள்ளுக்குள்ள சுருண்டு கெடக்கு. ச்சீ இதென்ன

நான் அழுவுறன்! உதட்டக் கடிக்கிறன்! அதயும் மீறி கண்ணீர் பொசியுது. கன்னத்தால வழிஞ்சி கடவாயில கரிக்கிது.

எனக்கெண்டு எதுவுமில்ல. எல்லாம் கை கழுவிப் போச்சி. வீடு, கட, என்ற மண், என்ற காதல், வாழ்க்க எல்லாம் கருகிப் போச்சி. சொந்தம் என்டு ஆரயும் ஆரும் கவனிக்கேலாத நெல. என்னப்போல எத்தின பேரு இருப்பானுகள். என்ட கூட்டாளிமாரெல்லாம் ஆளுக்கொண்டாப் பாத்து கலியாணம் முடிச்சிட்டானுகள்.

நெஞ்சில யாரோ அழுத்துர மாதிரி பாரமா இருக்கு. இப்ப வரவர இப்படி ஆகுது. தர்ம வாட்டுல கொண்டு காட்டணும். வானத்துல நிலா மறஞ்சி போச்சி. என்டாலும் மெல்லிசா வெளிச்சமா இருக்கு. இருட்டுல அவள் மொகத்தப் பாத்தாலும் இப்படித்தான் தெரிவாள். தலய கெழிச்சிப் பாக்குறன்.

ஒண்டு ரெண்டு பேருதான் முற்றத்துல இருக்கிறது தெரியுது. தூரத்தில நாய்கள் ஊள இடுது. புளிய மரத்துல கொக்குகள் கொர் கொர் எண்டு தொணதொணக்குது. இதுகளுக்காவது சுயமா கூடு கட்டி வாழ மரக்கந்துகள் இருக்கு. நமக்கென்ன இந்த இரவல் குடிசதான் இனி நிரந்தரம் போல.

கம்புச்சுழியெல்லாம் என்ட மேலெல்லாம் விழுகிது. இஷாத் தொழவுமில்ல. நல்லா நேரம் பெய்த்து. மெல்ல எழும்புறன். தலயிலயும் மேல்லயும் உதிர்ந்து கெடந்த இலகளத் தட்டி உர்ரன். அட இப்பதான் குடிசயப் பாக்கன். என்ட குடிலுக்கு முன்னால அடுத்த குடிசப் பொம்பிளயள் நிக்கிறாங்க. என்னமோ பரபரப்பா...! உம்மாக்கு வருத்தமோ அப்பிடின்டா எனக்கிட்டத்தானே வருவாங்க.

சாக்குக் கட்டில மடிச்சி மரத்தில சாத்துறன். உசன் சாச்சா குழாயடிக் கிணத்தில தண்ணி மொண்டு என்ட குடிசக்கித்தான் கொண்டு போறார். பெரிய அண்டாவில ஊத்துறார். அண்டாவச் சுத்தி புடவயால மறக்கிறாங்க. சாச்சிதான் என்ட பக்கத்தால பரபரத்துப்போனா.

"என்ன சாச்சி என்டன்".

"இளயவள் சமஞ்சிட்டா! தண்ணி ஊத்தப்போறம்" என்ட தோள்ல பாரமா கனக்குது. பாறயத் தூக்கி வச்சதப்போல. என்ட கடசித் தங்கச்சியயும் தூக்கி வெக்கன். குடிசக்குள்ள நொழயேலா. பொம்பிளயள். மறுபடியும் புளியமரத்தடிக்குப் போறன். கட்டில விரிச்சி மல்லாந்து படுக்கிறன். மறுபடியும் கண்கள் பீலி மாதிரிக் கொட்டுது.

# பிரமை

மிக நீண்ட இடைவெளிக்குட் பின் இவனின் தரிசனம் வாய்த்திருக்கிறது. இங்கு வரக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை எல்லாம் இயல்பாகவே நிராகரித்து விடும் வழக்கத்தை சமீபத்தில் தான் தளர்த்தியிருந்தான்.

இவன் விட்டுப் பிரிகையில் இருந்த சூழலில் பிரமாதமாய் சொல்லிக் கொள்ள எந்த முன்னேற்றமும் தென்படவில்லை. ஆங்காங்கு மழைக் காலத்து காளான்களென வெள்ளைத் தீந்தை பூசிக் கொண்டு புதிய கட்டிடங்கள் கம்பீரமாய் எழுந்து நின்றன. புராதண காலத்து கட்டிடங்கள் சுருக்கம் விழுந்த விழிகளை இடுக்கிக் கொண்டு, புதியதைப் பார்த்து பொறுமிக் கொண்டிருப்பதாய் பட்டது இவனுக்கு.

வந்ததிலிருந்து பரிச்சயமற்ற முகங்களைத்தான் தரிசிக்க முடிந்தது. சிநேகபூர்வமாய் சிரித்து வைப்பதுடன் அவர்களுடனான தொடர்பை துண்டித்து விடவே விரும்பினான். ஒட்டிக் கொண்டு பேசிக் கொண்டிருக்க எதுவும் இருப்பதாகத் தோணவில்லை. அப்படி உரையாட வாய்ப்புக் கிடைத்தால் 'கிரிக்கற்' பற்றிய வர்ணனைக்குள் இவனை இழுத்து வரவே அவர்கள் முயற்சிப்பர்.

இவனுக்கு கணிசமாக எரிச்சலூட்டும் விளையாட்டுக் குறித்து மிகுந்த ஈடுபாட்டுடன் சம்பாஷிக்க அவன் விரும்புவதில்லை. அல்லது அவர்களின் துப்புத்துலக்கும் கேள்விகளுக்கெல்லாம் மிகுந்த மன உளைச்சலுடன் பதில் சொல்லியாக வேண்டும் என்ற அச்சமும் வேறு. எனினும் அந்த வீட்டில் தொடர்ந்தும் தரித்து நிற்க மனம் ஒப்பவில்லை.

நாளைய திருமணத்திற்கு இன்றே விழுந்தடித்துக் கொண்டு வந்திருக்கத் தேவையில்லை. அவர்கள் வற்புறுத்தி கடிதம் எழுதியதற்காக இப்படி தனியே கிடந்து தவிக்க நேரிடுகிறது என நொந்து கொண்டான். அப்படி வந்ததற்கு ஒரு உள் நோக்கமும் இருந்தது. றினோவைச் சந்திக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வலிந்து ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நப்பாசையும் புறப்படும்போது இலேசாக நெருடிக் கொண்டுதானிருந்தது.

இங்கு வந்தபின்புதான் அது எத்துணை கடின முயற்சியென புரிந்து கொண்டான். "றினோ அவனது காதலியாக நேற்றுவரை இருந்தாள். நாளை அவளுக்குத் திருமணம். ஆனால் அவனுடன் அல்ல. இவனுக்கென்று இங்கு செய்வதற்கு வேலை எதுவும் காலி இருப்பதாகவும் தெரியவில்லை.

எதையாவது தொடப்போனால், யாராவது தெரிந்தவர்கள் பாய்ந்து வந்து. "ஐயையோ இதெல்லாம் நீங்க செய்யுறதா, நாங்க எதுக்கு என்ற கண்டிப்புடன் பிடுங்கிக் கொள்வதையும் சகித்துக் கொண்டு அங்கு தொடர்ந்து நிற்கப் பிடிக்கவில்லை. எனவே, இரண்டு வருடமாய் முங்கிக் குளித்த தாமரைக் குளத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

படிக்கட்டில் எப்போதும் போல் சனங்கள் நிரம்பி வழிந்தனர். தாமரைப் பூக்கள் மிகுதமாய் பூத்துக்கிடந்தன. அதன் மேல் சிறு குருவிகள் சாவகாசமாய் குந்திக் கொண்டு நீருக்குள் சொண்டுகளை சொருகிக் கொண்டிருந்தன. அவற்றுக்குறிய மீன் குஞ்சுகள் இன்னும் வரலில்லை போலும்.

இரண்டாம் படிக்கட்டைத் தாண்டுகையில், பழக்க தோஷத்தால் திரும்பிப் பார்த்தான். பழைய முகங்களுடன் சில புதிய முகங்களும் குளித்துக் கொண்டிருந்தனர். அது பெண்களுக்கான படித்துறை.

இவனை அடையாளம் கண்டிருக்க வேண்டும். கும்மாளத்தை நிறுத்தி விட்டு அவர்கள் தங்களுக்குள் குசுகுசுப்பதைக் கேட்டான். அவர்களைக் கடந்தபின் தன் முதுகின் மேல் இளமையான விழிகள் மொய்ப்பதையும் உணர்ந்தான். அவர்களில் பெரும்பாலானோர் றினோவின் தோழிகள். அவர்களிற் சிலர் இவனுக்காகப் பரிதாபப்பட்டிருக்கவும் கூடும். இவனைக் கடந்து சிலர் குளித்து விட்டுச் சென்றனர்.

ஈரக் கூந்தலை முதுகுக்குப் பின் பரத்தி உலறப் போட்டவாறு சென்றவர்கள் இவனைப் பார்த்து சிரித்து விட்டுச் சென்றனர். "என்ன கலியாணத்திற்கோ" அவளின் நெருங்கிய சிகப்பி கேட்டுவைத்தாள். இவனுக்கு சுருக்கென்றது. மனம் இலேசாக வலிக்கத் தொடங்கிற்று.

மூன்றாம் படித்துறையில் போய் குந்திக் கொண்டான். இதில் ஒருவரும் இன்னும் குளிப்பதற்கு வரவில்லை. அங்கிருந்தவாறே இரண்டாம் படிக்கட்டை பக்கவாட்டில் பார்த்தான். அவளின் பிம்பமே எழுந்து நின்றது.

சில சுந்தரிகள் குளித்துவிட்டு கரையேறிக் கொண்டிருந்தனர். ஒன்றிரெண்டு பேர் முதுகு தேய்த்துக் கொண்டும், குறுக்குத் துண்டை அவிழ்த்து நீர் விட்டு தேய்த்துக் கொண்டிருப்பதையும் கண்டான்.

பிராவின் கொக்கிகளை பொருத்த எத்தனிக்கும் முதுகுப்புற அவஸ்தைகளும் படிக்கட்டில் அரங்கேறிக் கொண்டிருந்தன. அந்த இரண்டாம் படித்துறையில் தான் றினோவும் குளித்தாள். நேற்றும் குளித்துவிட்டு, இந்த தாமரைக் குளத்திற்கும் எஞ்சிய இவன் நினைவுக்கும் சமாதி கட்டிவிட்டுச் சென்றிருப்பாள்.

பரந்த வெளியில், பச்சை புற்தரையில் தனித்துவிடப்பட்ட செம்மறியாடாய் மனம் குதியாட்டம் போடத் தொடங்கிற்று. அதன் ஆட்டம் இரண்டு வருடங்களைத் தாண்டிப் போய், அவளில் நிலை குத்தி நின்றது. ஆறு மணியடிக்க அவள் இந்தக் குளத்துக்கு வந்துவிடுவாள். அதற்கு முன்பே அல்லது சற்று பிந்தியோ மூன்றாந் துறைக்கு இவன் வந்திருப்பான்.

இரண்டிலிருந்து மூன்றுக்கு காதல் பார்வைகள் பறிமாறிக் கொள்வார்கள். பிரதானமாக, விழியும், மௌனமும் அவர்களின் ஊடகமாயிருந்தது. இவ்வாறும் பேசிக் கொள்ளாத இரு சந்தர்ப்பங்கள் வந்து தொலைத்தன. ஒன்று மழைக்காலம். இரண்டு பொதுத் தேர்தல் அசம்பாவிதங்களால் பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்கு, இவ்விரு தருனங்களிலும் மழைக்காலமே அவர்களது பிரதான எதிரி. எனவே அவள் வீட்டின் தொட்டியில் நீர் நிரப்பிக்கொண்டு குளித்துக்கொள்வாள்.

இவன் அறையை ஒட்டினாற்போல் றினோவின் வீடிருந்தது. மாலையில் அவள் முற்றத்து ஜே மரத்தில் இவன் விழிகள் போய் குந்தும். அதன் கீழ் நாற்காலி ஒன்றை போட்டுக் கொண்டு புத்தகமோ, பேப்பரோ படித்துக் கொண்டிருப்பாள்.

இடையிடையே புத்தகத்தை தாழ்த்தி அவன் ஜன்னலை நோக்கி ஒரு பார்வை விழும். அல்லது கந்துகளைச் சவட்டி ஜேம் பழம் ஆய்ந்து கொண்டு, கொத்துகளின் இடுக்கால் பார்வை வரும். மிஞ்சிப் போனால் கடைவாயில் வழியும் புன்னகையை துடைத்துக் கொண்டு உள்ளே ஓடிப்போவாள்.

வேரூன்றி விழுதுவிட்டுசடைத்து நிற்கும் ஆலமரத் தோப்புகளென அவளுடனான ஒவ்வோர் நிகழ்வுகளும் மிக அடர்த்தியாய் இவனுக்குள் உவகை பீச்சின. அவள் படித்துவிட்டு அனுப்பும் பத்திரிகைகளின் ஓரத்தில் இவன் கவிதை எழுதி அனுப்புவான்.

அதற்குப் பதிலாக மறுநாள் தினசரியின் ஓரம் அவள் எழுதியிருப்பாள். ஒரு வினோதம், குறுக்கும் நெடுக்குமாய் கோடிட்டு, இவனுக்கு மட்டும் புரியும் படி எழுத்துக்களை சிதைத்திருப்பாள். குறுக்கெழுத்துப் பகுதியில் றினோ விட்ட கட்டங்களை இவன் பூர்த்தி செய்து அனுப்புவதுண்டு.

அவள் அருகாமையை விட்டுப் பிரிந்த இரவில் இவன் அழுத அழுகையும் தவித்த தவிப்பும், அவள் கைபட சமைத்த சமயலை இறுதியாக உண்டு விட்டு விடை பெற்றான். விடைபெறும் போது அவள் வேண்டுமென்றே எதிர்த்த ஸ்டூலில் உட்கார்ந்திருந்தாள். அழகு முகத்தில் சோகம் கப்பி விழிகளில் நீர் நிறைந்திருந்தது.

வீட்டிற்குத் தெரிந்து விடக்கூடாதென்ற தவிப்பில் அவள் ஓரிடம் என்றில்லாமல் அலைந்து கொண்டிருந்தாள். சற்றைக்கெல்லாம் அழுதுவிடுவாளோ என இவன் அந்தரப்பட்டு, வீதியில் இறங்கி நடந்தான்.

ஓடிவந்து ஜன்னலால் இவனைப் பார்த்தபடி நின்றாள். கலங்கி நின்ற அவளை திரும்பிப் பார்த்தபடி நடந்தான். இவனைப் பற்றி அவள் என்னதான் நினைத்திருப்பாள். ஒரு விவஸ்தை கெட்ட ஆண்மகன் என்றா? எப்படியும் நினைத்துவிட்டுப் போகட்டுமே. அவனளவில் அவள் குடும்ப நண்பன் என்ற கௌரவத்தை இழக்காதது என்னவோ ஆறுதலாய் இருந்தது.

இனி அவள் கைபட ஒரு ரீ யோ சாப்பாடோ கிடைக்காதென்ற நினைப்பு பெரும் அவஸ்தையாய் இருந்தது. சரியாக ஐந்தரைக்கு ரீ போட்டு அனுப்புவாள். பத்து மணிக்கெல்லாம் பிளேன் ரீயும் கொறித்துக்கொள்ள ஏதாவது முறுக்கும், மத்தியானம் புழுங்கிக் கொண்டிருக்க ஜூஸும் வரும். பின்பு சாயந்தரம் ஒரு கப் ரீ இப்படி எத்துனை சிரத்துடன் இவனைக் கவனித்துக் கொண்டாள்.

இனி அவற்றையெல்லாம் அனுபவிக்க முடியாதென்ற ஏக்கமும் ஆற்றாமையும் அவனை இம்சைப்படுத்தின. எதைக் கொண்டு வந்தாலும் அவளின் தந்தை, "ஸேர் றினோ ஒங்களுக்கு தந்திச்சி" "ஸேர்றினோ சொல்லிச்சி ஒங்கட கத பேப்பருல வந்திருக்காம்." இப்படி அவனைச் சூழ்ந்திருந்த யாவுமே அவள் பற்றிய எதிர்பார்ப்புக்களை மனசுக்குள் இயல்பாகவே விதைத்து வந்தன. இதென்ன

இழவு காத்த காதல். இரண்டு பேரும் ஒருவார்த்தையேனும் பேசிக் கொள்ளாமல் உருகி வழிந்தால் எங்ஙனம் சாத்தியமாகும்.

அதற்குப் பின் வந்த காலங்களில் அவள்தான் அவனின் கவிதைகளை அலங்கரித்தாள். "எசலபெரஹராக்கள்" வரும் போதெல்லாம் நிலாவை வெறித்தபடி முற்றத்தில் படுத்திருப்பான். பெரஹராவில் கண்ட அவள் முதல் வதனம் அப்படியே நெஞ்சில் நசிபட்டுக்கிடந்தது.

நிழல்வாகை குளத்தோரம் நிற்பது அன்றிலிருந்தே இவனுக்கு பிடித்த விஷயம். அதன் செந்நிறப் பூக்களும் நீரில் மிதக்கும் கரிய நிழலும் அவனை மகிழ்வூட்டின. இன்னும் சற்று தொலைவு வரை நடை போடலாமென எழுந்தான்.

நாளைக்குள் அவளின் தரிசனம் கிடைத்துவிட வேண்டுமென்ற தவிப்பு வேறு. அப்படிக் காண நேரின் அவளின் மனோ நிலை எப்படி இருக்கும். இவனைக் கட்டிக் கொண்டு ஓவென்று நெஞ்சில் புதைந்து விசும்புவாளோ?

"என்னை எங்கேயாவது அழைத்துச் செல்லுங்கள், நான் உங்களைத் தான் பார்த்துக் கொண்டிருந்தேன்" எனக் குமுறுவாளோ, அன்றில் இவன்தான் விழியுடைய பொங்கிக் குமுறி, சுவருடன் தலையை மோதிக் கொண்டு ஆற்றுப்படுத்துவானோ எதுவரினும் றினோவைக் காணவேண்டும் என்ற அவாவே மிகைக்கத் தொடங்கிற்று.

நடை போடும் எண்ணத்தை மாற்றிக் கொண்டு மறுபடியும் திருமணவீட்டிற்கே திரும்பினான். இப்போது இவனுக்கு நன்கு பரிச்சயமான முகங்களும், தோழமை மிகு இதயங்களுமாக அவ்வீடு நிறைந்திருந்தது. இவனைக் கட்டிக் கொண்டு மகிழ்ச்சிப் பிரவாகத்தில் நண்பர்கள் ஹோவென வாய் பிளந்தனர். சற்று பெருத்துவிட்டதாய் இவன் தொந்தியில் செல்லமாய் குத்தி விட்டு களுக்கென்றனர்.

இவன் விட்டுப் பிரிகையில் மூக்குச் சிந்திக் கொண்டிருந்த – இவனுக்குப் பிரியமான அழகிய மலர்கள், சற்று மிரண்டு, பின் ஓடிவந்து கட்டிக் கொண்டு குதூகலித்தனர். இவனைச் சூழ சிரிப்பும் கும்மாளமும் பொங்கிப் பிரவகித்தன. அவனோ அவளைக் காணும் வேட்கையில் இருந்தான். பெண்கள் குழுமியிருக்கும் அறையில்தான் அவள் இருக்க வேண்டும். அதைத் தாண்டிப் போகவென எந்தத் தேவையும் அவனுக்கு அங்கில்லை.

அந்த வீட்டின் புறவளவெல்லாம் எழுந்தமானமாய் சுற்றித்திரிந்தான். அவளின் மணக்கோல பிம்பம் மனசில் நிரந்தர ரூபமாய் தரித்து விடுவதற்குள் அவளை

சந்தித்து விட வேண்டும் என்ற துடிப்பே இவ்வாறு அந்தரிக்க வைத்தது. புறாக்கள் வட்டமிட்டு அவள் வீட்டின் முகட்டில் குந்திக் கொண்டன. அவள் ஒரு நங்ஙனம் வளர்த்தாளே என்னவாயிற்றோ.

இந்த ஆரவாரத்தில் அவளின் நங்ஙனமும் புறாக்கூடும் நினைவுக்கு வந்தது இன்பமாய் இருந்தது. அவள் அமர்ந்திருந்து புத்தகம் படிக்கும் கதிரை ஒரு காலுடைந்து விறகுக் கட்டுக்களிடையே மல்லாந்திருந்தது.

ஒரு வேளை இவனின் நினைவையும் சேர்த்து தாங்கொண்ணா பளுவுடன், அதன் ஒரு கால் ஊனமாயிருக்கவும் கூடும் என நினைத்துக் கொண்டான். இந்த வளவுக்குள் நின்றாலும், விசாலித்த இடங்கள் தோறும் அவள் நின்று முற்றம் பெருக்குவதான பிரமை தட்டிற்று. வளவைச் சுற்றிக் கொண்டு முன் விறாந்தைக்கு வந்தான்.

தோழிகள் சூழ அவள் விறாந்தைக்குள் நின்றிருந்தாள். சோபாவில் ஒரு அல்பத்தை விரித்து வைத்துக் கொண்டு, கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். இவன் வருகையை யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவளை நன்கு மனதார பார்த்துக் கொண்டான். முன்பைவிட சற்று மெருகேறி அழகாக இருந்தாள்.

கன்னச்சிவப்பில் வெட்கத்தின் சாயல் மிகைத்திருந்தது. யாரோ ஒருத்தி, குறும்பு செய்து அவளின் மார்பில் கை வைத்தாள். இவள் அவளைத் தள்ளிவிட்டு நிமிர்ந்தாள். அங்கு அவன் நிற்பதைக் கண்டுவிட்டாள். மனம் பதைபதைத்தது. பதற்றமும் தனக்குறிய ஒன்றை இழக்கப்போகும் பரிதவிப்பும் இவனில் வந்து ஒட்டிக் கொண்டன. அப்படி ஒன்றும் அவளில் மாற்றம் ஏதும் தென்படவில்லை, என்பது இவனுக்கு மிகுந்த ஏமாற்றமாய் போய்விட்டது.

இவனைக் கண்டதும் ஓடிவந்து வரவேற்றாள்.

"வாங்கோ"

"வந்திருக்கிண்டு வாப்பா சொன்னவர் காணக்கிடைக்கல்ல",

"வராம போய்விடுவீங்களோ என்டு நெனச்சன்".

"எப்படி சுகமா, ரொம்ப இளச்சிட்டீங்களே",

"எங்கட வீட்டு சாப்பாட்டுக்குப் பிறகுதான்". அவள் மிகுந்த உற்சாகத்துடனும், குதூகலத்துடனும் இருந்தாள்.

இவன், கோயில் மாடாய் தலையை ஆட்டி, குமுறலை மறைத்துக் கொண்டு பெயருக்கு சிரித்து வைத்தான். பேசுவதற்கென ஒத்திகை பார்த்துவந்த எல்லா வார்த்தைகளும் மனசின் வெப்பத்தில் அவிந்து போயிற்று.

அல்பம் விரித்தபடி சோபாவில் கிடந்தது. இவனைக் கண்ட அவசரத்தில் அதை அவர்கள் விட்டுவிட்டு ஓடிப் போயிருந்தனர். "கொஞ்சம் இரிங்க" என்றவள் உள்ளே போய் ரீ யுடன் வந்தாள். நீண்ட யுகங்களுக்குப் பின் கிடைத்த ரீ, சுவைத்துப் பருகும் பக்குவத்தில் அவனில்லை.

அல்பத்தில் இவனின் வயதை ஒத்த ஒருவன் இவளுக்கருகில் அமர்ந்திருந்தான். அவன்தான் மணமகனாக இருக்க வேண்டுமென ஊகிப்பதில் அப்படி ஒன்றும் சிரமம் இருக்கவில்லை. இவன் சுயமாய் அவளை மோகித்து ஏங்கிய காலங்களில் அவளோ, இன்னொருத்தனை விரும்பியிருக்கிறாள்.

இவனைச் சுற்றிக் கொண்டிருந்த சகல பிரமைகளும் நொடிக்குள் உடைந்து போயின. வெற்றுக் கோதென தான் அந்தரத்தில் பறப்பதை உணர்ந்தான். அவளை வாழ்த்தியபடி வெற்றுக் கிளாசை நீட்டினான். நேற்று இங்கு மழை இல்லையா என்றான். 'ஓம்' என்றவள்.

இன்றிரவும் மழைவரும் போல, என சொல்லிக்கொண்டே உள்ளே போனாள். இவன் தனியனாய் கருக்கட்டிய வானத்தை வெறித்தபடி உறைந்திருந்தான்.

# வேட்டை

பனிப்புகார் அடர்ந்த ஓடைக்கரை, நுரைதள்ளி கரை தடவும் உவரலைகள். நீண்ட இடைவெளிக்குப் பின் ஓடைக்கரையில் நான். அக்கரையில் சாலமனின் குடிசை. வாசல் விளக்கின் குமுறல் தெரிந்தது. அதன் பக்கத்திலமர்ந்து சுருட்டு பற்றவைத்துக் கொண்டிருந்தான் சாலமன். சாலமனைப் பற்றிய நெஞ்சின் வலிகள் தவிர்க்க முடியாதவை. அத்துயர நிகழ்வுக்குப் பின் இப்போது தான் அவனை, அதுவும் தூரத்தில் பார்க்கிறேன். அவளின் இழப்பு-இத்துணை சீக்கிரமாகவா, கிழடு போர்த்திவிட்டது.

ஆற்றில் தோணிகள் ஆடின. கரைவலைக்காரர்கள் 'திட்டி'களில் இடம்பிடித்து வலைவீசத் தொடங்கி விட்டனர். சாலமனில் சிக்கிக்கொண்ட, பால்ய நினைவுகள் மனசுக்கள் வலியைத் தூவின.

கோழி கூவி ஓய்ந்திருந்த ஒரு வைகரையிற் தான் அவனின் தரிசனம் எனக்கு வாய்த்தது. விடியலின் பூரிப்பில் சொக்கிச் சொக்கி வைகறைத் தொழுகைக்குச் செல்கிறேன். "காக்கா இஞ்ச லூத்துப் பரிகாரியின்ற வீடெது." இருள் முற்றிலும் விலகாத பனித்திரைவிழுந்த நிலத்தில் காலூன்றி நின்றான். கழுத்தில் தொங்கிய குருஸ் மாலை மயிரடர்ந்த நெஞ்சின் மேல் அந்தரித்தது. வாரிவிடப்படாத கேசம். கோதிவிடும் விரல்களில்தான் என்ன திமிர்வு. தெருவிளக்கின் மங்களில் சாலமனின் முரட்டுத் தோற்றத்தை இப்படித்தான் உள்வாங்கிக் கொண்டேன்.

"அப்படியே போங்க, இடது பக்கத்துல ஒரு கிறவல் ஒழுங்க வரும், எங்கேயும் திரும்பாம நேராப் போங்க, ஒரு குடில் எதிர்ப்படும், முன்னுக்கு தோணி கவிழ்த்திருப்பாங்க, அது தான் வீடு", "ரொம்ப நன்றிங்க."

"ஆரோக்கியம் வாம்மா", தெருவிளக்கின் ஒளிபடராத இருளுக்குள்ளிருந்து அவள் எழுந்து வந்தாள். குத்துமதிப்பாக இருபத்தைந்து இருக்கலாம். பொது

நிறம், கடைத்தெடுத்த புராதன காலத்து சிலைத் திரட்சி. என் மூத்தவளின் சம வயதிருக்கும். அந்த ஆரோக்கியம் அவனைத் தொடர்ந்து இடப்பக்க ஒழுங்கையில் மறைந்து போனாள்.

லூத்துப் பரிகாரி என் வாப்பாவுக்கு பரிச்சயமானவர். ஏகரசனையுள்ள மித்திர பந்தம் அவர்களுடையது. லூத்துப் பெரியவரிடம் சின்னவயதிலிருந்தே – எனக்கும் ஒட்டுதல் இருந்தது. பரிசுத்த வேதாகமத்திலிருந்து உபகாதைகள் சொல்லிக்களிப்பூட்டுவார். அக்காலத்தில் அவர் அடிக்கடி சொல்லும் சுவிஷேஷங்கள் எனக்கும் அத்துப்படி. லூத்துப் பெரியவரை தூரத்தில் காண நேரின் நண்பர்களுக்கு அவரை சுட்டி அவரின் இராகத்தில் சுவிஷேஷங்களை ஒப்புவிப்பதில் நான் கில்லாடி.

"முகாந்திரமில்லாமல் எனக்காகத் தங்கள் வலையைக் குழியில் ஒளித்து வைத்துள்ளார்கள். முகாந்திரமில்லாமல் என் ஆத்மாவுக்கு படுகுழி வெட்டினார்கள். நான் அவனை என் சினேகிதனாகவும், சகோதரனாகவும்பாவித்து நடந்து கொண்டேன். தாய்க்காகத் துக்கிக்கிறவனைப் போல் துக்கவஸ்திரம் தரித்துத் தலைகவிழ்ந்து நடந்தேன். ஆனாலும் எனக்கு ஆபத்துண்டான போது அவர்கள் சந்தோஷப்பட்டுச் கூத்தாடினார்கள். நீசரும் நான் அறியாதவர்களும் எனக்கு விரோதமாய் கூட்டங்கள் கூடி ஓயாமல் என்னை நிந்தித்தார்கள்."

லூத்துப் பெரியவர் இதை ஏன் வாப்பாவிடம் சொல்லிச் சொல்லி விசும்பினார் என்ற பூர்வீகத்தை தெரிந்து கொண்டபோது மனம் சிலிர்த்தது. அந்த சுவிஷேஷத்தின் உள்ளார்த்தமும், அவ்வசனங்களுக்கும் அவருக்கமிடையேயான மானசீகத் தொடர்பும் பிரமிக்கச் செய்தன. அவரின் அரசியல் கருத்துக்களையும், மாற்று யோசனைகளையும், மிதவாதச் சிந்தனைகளையும் சகித்துக் கொள்ளாத தேசம், அவரின் வாசலுக்கு மரணத்தை அனுப்பி எச்சரித்தது.

"இந்தா பரிகாரி, நம்மலைப்பத்தி நீர் ஒண்டும் கருத்துச் சொல்ல வேணா. மீறினா தெரியுந்தானே" அவரின் மனம் பேதலித்து விட்டதாம். அந்த விரக்தியில் சமய நிறுவனமொன்றில் தன்னைப் பிணைத்துக் கொண்டு, ஆனந்தம் அடைந்ததாக வாப்பா கூறினார்.

சாலமனை ஒரு மாலைப் பொழுதில் எனக்கு அறிமுகப்படுத்தினார். அவன் பரிச்சயமான புன்முறுவலுடன் என் கரங்களைப் பற்றிக் குலுக்கினான். பிற்காலங்களில் அவனுக்கும் எனக்குமிடையே ஏற்பட்ட சித்தாந்த நேர்மை, இருவரையும் ஆழமாக பிணைத்து விட்டிருந்தது. வந்த புதிதில், ஓடைக் கரையின் மீன்பிடி நுணுக்கங்களையும் ஆற்றின் இயல்பையும் கற்றுக் கொடுப்பதற்கென அவனுடன் சஞ்சரித்தேன்.

அவனின் மனக்கிடக்கைகள் ஆழமானவை. அவனுக்குள் புழுங்கும் விடுதலை வேட்கையின் வியாபகம் உள்ளுக்குள் உருகி வழியும் இன்னொரு சாலமன்– என் சகல பரிமாணங்களையும் எனக்கு விரித்துக் காட்டினான். அவனிடம் ஒரு விசித்திரக் குணமிருந்தது. யாராவது வலிந்து பேசினாலொழிய தானாகச் சென்று உறவை வளர்த்துக் கொள்ளாத சங்கோஜப் பேர்வழி. நெடுநேரமாக ஆற்றில் மிதக்கும் தோணிக்குள் கிடப்பான். இதற்கு இன்னொரு காரணமும் இருந்ததை பின்பு அறிந்து அவன் மேல் பரிதாபப்பட்டேன்.

"நான் கஷ்டப்பட்டு உழைத்த இத ஏன் பிறத்தியானுக்கு இனாமாகக் கொடுக்க வேண்டும். விரும்பிக் கொடுப்பது வேறு. இது ஆணவம் அதட்டிப் பெறுவது அதர்மம், அதர்மத்திற்கு என் தலையசையாது." சாலமன் ஆவேஷம் கொண்டவனாய் ஒரு மாலைப் பொழுதில் என்னிடம் இரைந்து கொண்டிருந்தான். லூத்துப் பெரியவரைப் போல் பைபிளில் இவனுக்குத் தேர்ச்சி இருந்தது.

"அவர்கள் சமாதானமாய் பேசாமல், தேஸத்திலே அமைதலாயிருக்கிறவர்களுக்கு விரோதமாய் வஞ்சகமான காரியங்களைக் கருதுகின்றனர்".

"சாலமன் நீ அவர்களுடன் விரோதிக்க வேண்டாம். அவர்கள் வன் நெஞ்சர்கள். தினமும் அவர்கள் கேட்கும் மீனை அவர்களின் கூடையில் போட்டு சமாதானமாகிப்போ." என்றேன். "ம் கூம் முடியாது" "பெருமைக்காரரின் கால் என்மேல் வராமலும் துன்மார்க்கருடைய கை என்னைப் பறக்கடியாமலும் இருப்பதாக" என்ற யேசுவின் வார்த்தையை அழுத்திக் கூறி மறுதலித்தான்.

அவன் அவர்களுடன் இணங்கி நடக்காது குறித்து, மிகுந்த விசனத்துடன் அவர்களிருந்தனர். சாலமன் அவர்களின் எதிரியாகத் தீர்மானிக்கப்பட்டான்.

ஒரு மாரிகாலம் அந்திமழை வலுக்கத் தொடங்கியிருந்தது. நான் லூத்துப் பரிகாரியின் குடிசைக்குள். ஆற்றில் நீர் மட்டம் கூடிற்று. காட்டு வெள்ளம் சங்கமிக்க ஆறு நுங்கிப் பிரவகித்துப் பெருக்கெடுத்தது. சிறு திடல்கள் மூழ்கிப் போயின. கிறவல் வீதிகளை கழுவிக் கொண்டுவரும் ஜலப்பிரளயமும் ஆற்றுடன் கலந்தோடியது. பேய் மழையில் நனைந்தபடி, சாலமன் குடிசைக்குள் நுழைந்தான். கூடவே மகளும்.

"ஏனடா இப்படி மழையில நனைகிறாய் இவளையும் கூட்டிக் கொண்டு" பெரியவரின் கேள்விக்கு பதிலேதும் கூறாமல், போர்த்தி வந்த சாக்கை உதறி பரணிற் போட்டான்.

"எனக்கு அங்கிருக்க பயமாய் இருக்கிறது வெள்ளத்திற்கு அல்ல, இன்று மாலை நான் ஆற்றில், வீட்டுக்கு வந்து தேடுவதுபோல் சகல பொருட்களையும் இழுத்தெறிந்து விட்டு இவளையும் இழுத்திருக்கிறார்கள். கூச்சலிட ஓடிவிட்டார்கள். என்னை எது வேண்டுமானலும் செய்யட்டும். இவளுக்கு ஏதாவது என்றால் நான் தாளமாட்டேன்". அவனின் விசும்பல் மழையின் இரைச்சலையும் மீறி, குடிசைக்குள் நிறைந்தது.

"இவள ஒருத்தண்ட கையில் புடிச்சி ஒப்படைக்கனும். ஜோஸப்புர பொடியனில எனக்கு நல்ல விருப்பம். நீங்க ஒருக்கா பேசிப் பாருங்களேன். மழை ஓய்ந்து தூவானம் விசிறிக்கொண்டிருந்தது. பெரியவர் போட்டுவந்த ஆவி பறக்கும் கோப்பியை உதட்டில்" வைத்து அழுத்திக் கொண்டே முற்ற வெளியை வெறித்திருந்தான்.

எதிர்த்திசையில் அவர்கள் மழைக் கோட்டுக்குள் உடலைத் திணித்துக்கொண்டு, உலாச் சென்றனர். கொதிக்கும் சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதை நம்முடையது. அங்கே போனால் அவர்கள் மாமூல் வாழ்க்கையில் இவர்களின் தொல்லை. மிகுந்த சோம்பேரித்தனமாய் நடைபோடும் அவர்களை வெறித்துக் கொண்டே பரிகாசமாய் கூவினான்.

"கட்டுவிரியன் முட்டைகளை அடைகாத்து சிலந்தியின் நெசவுகளை நெய்கிறார்கள். அவைகளின் முட்டைகளை சாப்பிடுகிறவன் சாவான். அவைகள் நெருக்குப்பட்ட தேயானால் விரியன் புறப்படும்."

கர்விக்குணம் எங்கிருந்து வந்தது. பிறப்பிலா, பிறந்து வளர்ந்த சூழலிலா, வந்த வழி நமக்கெதற்கு, கர்வித்தனம், அதர்ம் அதிகாரத்திமிர் இவற்றுக்கெல்லாம் கூனிக் குறுகாத நெஞ்சுத்திரம் உள்ளமட்டும், யாருக்கு அஞ்ச வேண்டும். அவர்களுடன் ஒத்துழைப்பது பற்றி தர்க்கிக்க நேரும் தருணமெல்லாம், சாலமன் இப்படித்தான் வெட்டிப் பேசி மடக்கிவந்தான். "காசு தந்து வாங்கட்டுமே. நாங்கள் சென்றி அமைத்துக் கொடுக்க வேண்டும். பதுங்கு குழி வெட்டிக் கொடுக்க வேண்டும். அதற்குள் பாதுகாப்பாக இருந்து கொண்டு நிராயுதபாணிகளான மக்களைத் தாக்க வேண்டும். எந்த ஊரு நியாயம் என்பான்.

காலநதி நீண்டு பிரவாகித்து தன்பாட்டில் ஓடிக் கொண்டிருந்தது. அதன் மேல் காய்ந்துலர்ந்த சருகுகளும், குருத்தோலைகளும், இன்னும் சில பசுந்தளிர்களும் மிதந்து சென்றன.

நதியின் வேகத்துக்கு ஈடுகொடுத்து, மனிதரும் ஓடிக்கொண்டிருந்தனர். கரைகளை உடைத்துக் கொண்டு நதி தன்பாட்டில் விரைந்தது கால நதியின் ஆங்காரச் சுழியில் லூத்துப் பரிகாரியும் அகப்பட்டு மாண்டு போனார். சாலமனின் துயரங்கள் பெருத்தன. லூத்துப் பெரியவரின் மரணத்திற்குப் பின் சாலமனின் போக்கே விசித்திரமாயிற்று. புதிதாக குடிக்கத் தொடங்கினான். ஆரோக்கியத்தை மணம் புரிய ஜோஸப்பின் மகன் இணங்கவில்லை.

சாலமன் இல்லாத மையிருட் பொழுதில் அவன் குடிசைக்குள் அவர்கள் புகுந்து மறுபடியும் பொருட்களை உதறி, கூச்சலிட்ட ஆரோக்கியத்தின் கன்னத்தையும் பிளந்துவிட்டுப் போயிருந்தனர்.

ஒரு மாரி கழிந்து அதன் சுவடுகள் தேயுந்தருணம் அடுத்த மாரியும் வலுக்கத் தொடங்கிற்று. ஓடைக்கரையில் காலையில் ஒதுங்குவதும், கல்லின் மேல் குந்தி, தோணியாடும் பாட்டைக் கேட்டு வீட்டுக்குத் திரும்புவதுமாய் என் பழுத்தோலைப் பருவம் . சாலமனுடன் பேசுவதையும் தவிர்ந்திருக்கப் பழகிவிட்டேன். அவனுடனான நெருக்கம் என்னையும் ஒரு தினுசாக பார்க்கவைத்தது. ஓடைக்கரையில் நின்று ஆற்றின் நடுவே அசைந்த படி நிற்கும் அவனளவில் நானொரு பொருட்டுமில்லைதான். எனினும் ஆரோக்கியம் பெட்டையை நினைக்கையில் மனசு வலித்தது.

மார்கழி மாதத்துப்பனி, தேகத்தக்கு செமிக்கவில்லை. மார்புச்சளிகட்டி சுவாசிப்பதற்கும் அவஸ்தைப்பட வேண்டியதாயிற்று. நெஞ்சின் உதறல், காலைப் பொழுதில் ஆற்றங்கரைக்குப் போக வேண்டாமென்ற பிள்ளைகளின் நச்சரிப்பு வாலாயப்படுத்திய பழக்கங்கள் திடீரென தடைப்பட்டதில் மனசு அந்தரப்பட்டது. அது ஒரு அற்புத உலகம். மீனவர் பாடும் பாடலில் சொக்குவதும், நாமும், உச்சஸ்தாயில் கூச்சலிடுவதும் அலாதியான அனுபவம்.

எமக்குரிய தோணிகள் ஒதுங்குமட்டும் காத்திருந்து, மீன் நிறுத்து, வியாபாரிகளுக்கு கொடுத்து கணக்கை ஒப்பிப்பதில் மகன் சூரனாகிவிட்டான். குடும்ப வண்டியை இழுத்துச் செல்ல மகன் தலைப்பட்டுவிட்டான். ஒரு பத்து வயது கூடிய ஆயாசம்.

நல்ல வெய்யில் காலம் ஏரிகள் வற்றிவிடுமோ என அஞ்சுகிற கர்ணவெய்யில், ஏதோ ஞாபகத்தில் அன்று காலையில் கரையிலிருந்து திரும்பிய மகனிடம் சாலமன் பற்றி விசாரிக்கத் தோன்றியது. அவன் குணத்தில், பிடிதளராமல் நேற்றும் அவர்களுடன் முரண்பட்டு வாதிட்டிருக்கிறான். ஆளையும் அடித்துப் போட்டு, நேற்றும், மீன்களையும் அபகரித்துப் போய்விட்டார்கள். இதை நான் கேட்டிருக்கக் கூடாது தான். சாய்வு நாற்காலிக்கு என் துயரங்களைத் தாங்கும் திராணி

மரத்துப் போயிற்று.

அச்சம்பவம் நிகழ்ந்து இரு தினங்கள் காலையில் வாசற்படியில் நின்று பல் தேய்த்துக் கொண்டிருந்தேன். என்று மில்லாதவாறு வீதிகொள்ளாச் சனங்கள். பரபரப்பாக ஆற்றங்கரை நோக்கித்தான் ஓடுகிறார்கள். வியர்க்க வியர்க்க மகன் ஓடிவந்தான். அவன் கூறியது பொய்யாக இருக்க வேண்டும் அல்லாவே. உள்மனம் கடவுளிடம் ஐக்கியமாயிற்று.

நான் தோணியிலேறி அக்கரைக்கு துடுப்புவலித்தேன். மகன் பிடுங்கிச் கொண்டு நீரைக் கிழித்தோடினான். அக்கரையில் சாலமன் பித்துப் பிடித்தவனாய், பதறித் திரிந்தான். என்னைக் கண்டதும் விசர் பிடித்தவனைப் போல் பாய்ந்து வந்தான்.

அந்த வெறி நாய்கள் என்னை அடித்துப் போட்டிருக்கலாம். இவளை இப்படிச் செய்துவிட்டார்களே. விஷர் பிடித்த மிருகங்கள் அழுதழுது குரல் தடித்திருந்தது. என்னை ஒரு பற்றைக்குள் இழுத்துப் போய்விட்டான். நான் ஆரோக்கியத்தைப் பார்க்கவில்லை. மனசு வெடிக்கும் போல் இருந்தது.

சாலமனின் பிதற்றலிடையே லூத்துப் பெரியவர் ஞாபகிக்கும் சுவிஷேஷம் என் நினைவின் நுனியில்.... "உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது. அதிலிருக்கிற நியாயாதிபதிகளின் முகத்தை மூடிப்போடுகிறார். அவர் இதை செய்கிற தில்லையென்றால், பின்னர் யார் இதைச் செய்கிறார்." நான், நெஞ்சைப் பொத்திக் கொண்டு தோணியில் ஏறினேன். சகலதையும் மீறி ஆரோக்கியம் விழிகளுக்குள் நிறைந்து நின்றாள்.

கரீரென்ற வெய்யிலின் அகோரம்– இதோ மீண்டும் சாலமனை உற்றுப்பார்க்கிறேன். அவன் அவ்விடத்திலேயே உறைந்திருந்தான். விளக்கு மட்டும் அணைந்து போயிருந்தது.



ISBN 955-96317-3-X